சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

ஞாயிற்றுக்கிழமை
21 செப்டம்பர் 2025
சென்னை
20 பக்கங்கள் ரூ.10

WE TEACH YOU REACH

# KingMakers IAS Academy

BY IAS FOR IAS



**Shri. Pranab Mukherjee**
Hon'ble Former President of India

I hope that future administrators of our country will emanate from KINGMAKERS IAS ACADEMY and do their job very successfully.



**Shri. D.P. Agrawal**
Former UPSC Chairman

Great experience in meeting bright & young civil services aspirants of KINGMAKERS. It gives me a hope for the better future for this nation.



**Smt. Kiran Bedi IPS (R)**
Former Lieutenant Governor of Puducherry

KINGMAKERS are India Makers & Change Makers. I extend my best wishes to KingMakers for all success.

12th YEAR ANNIVERSARY


Cordially invite you for the inaugural function of our New Premises



CHIEF GUEST

## Shri. Ram Nath Kovind

Hon'ble Former President of India



GUEST OF HONOUR

Hon'ble Member of Parliament

## Shri. G.K. Vasan

President, Tamil Maanila Congress | Former Union Minister for Shipping



ON

## 21ST SEPTEMBER 2025

SUNDAY | 05:00 PM ONWARDS

"We request the attendees to be seated in the hall by 5:00 PM"

VENUE

**KingMakers IAS Academy**
NEW NO.62, OLD NO. 53, 6TH AVE, P BLOCK, ANNA NAGAR, CHENNAI - 600 040.

EAGERLY LOOKING FORWARD FOR YOUR PRESENCE

**Dr. Sathyashree Boominathan**
CMD, KINGMAKERS IAS ACADEMY




**Shri. Mylswamy Annadurai**
Former Director ISRO

It was a great experience to interact with IAS aspirants in KINGMAKERS IAS ACADEMY. My best wishes to the academy and the aspirants.



**Shri. C. Rangarajan**
Former RBI Governor

It was a pleasure to visit the KingMakers IAS Academy and see its good work in training civil service aspirants. The right approach and efforts are evident. Congratulations, keep it up!



**Shri. Baswan IAS (R)**
Former Director of LBSNAA

KingMakers is a Centre with a difference, with a refreshing & open approach to guiding the young aspirants. A pleasure to spend time with them & the faculty and the management.

For More Enquiries:
www.kingmakersiasacademy.com

**94442 27273**

Venue: KingMakers IAS Academy

New No.62, Old No. 53, 6th Ave, P Block, Anna Nagar, Chennai- 600040.

## அடையாள சுவாதீன அறிவிப்பு

**ICICI Bank** கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிட்., 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் முதன்மைச் சாலை, பெங்களூரு - 560068.

2002-ம் ஆண்டின் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப் பிரிவு 13(12)-ன் கீழ் ... ICICI பேங்க் லிமிடெட் ... [illegible]

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் | சொத்தின் விவரம் / அடையாள சுவாதீன நாள் | கோரிக்கை அறிவிப்பு நாள் / கோரிக்கை அறிவிப்புத் தொகை (ரூ) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | A கமலக் கண்ணன் & K ஞானவல்லி/ பிளாட் எண்: 7 திருவள்ளுவர் தெரு, பாலாஜி நகர் அனகாபுத்தூர் சர்வே எண்: 43/3A சென்னை-600070/ LBCHE00001599260 | அட்டவணை "A" சொத்து: ... [illegible] ... அடையாள சுவாதீன நாள்: 17.09.2025. | ஜனவரி 25, 2023 ரூ. 24,42,770/- | சென்னை |

எனவே, மேற்கண்ட கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) ... [illegible]

தேதி: 20.09.2025
இடம்: சென்னை

உண்மையான அதிகாரப்பூர்வ அலுவலர் ICICI பேங்க் லிட். சார்பில்

---

## SBI பாரத ஸ்டேட் வங்கி
**ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II**

எண்.44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரப்பூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729

தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. ஜித்தின் ஆன்டோ - மொபைல் : 9043563133

### அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

[illegible]

ஏலம் தொடங்கும் தேதி ... 12.09.2025 ... ரூ.11,45,74,800.00 ... [illegible]

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 2,45,00,000/- | டேவணித்தொகை | ₹ 24,50,000/- | ஏல உயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

வங்கிக்கு தெரிந்துவரை வில்லங்கங்கள்: ஏதுமில்லை.

**மின் ஏலத் தேதி & நேரம் : 08.10.2025** காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (10 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

சொத்துகளை பார்வையிடும் தேதி: 25.09.2025 நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://baanknet.com** மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் **www.bank.sbi** என்ற இணையதளங்களில் காணலாம்.

இடம்: சென்னை, தேதி: 15.09.2025 — அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II, சென்னை

---

## SBI பாரத ஸ்டேட் வங்கி
**ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II**

எண்.44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரப்பூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729

தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. ஜித்தின் ஆன்டோ - மொபைல் : 9043563133

### அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

[illegible]

நிலுவைத் தொகை : 15.09.2025 அன்றுள்ளபடி ரூ.44,30,987.00 ... [illegible]

#### அசையா சொத்தின் விளக்கம்

[illegible]

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 35,00,000/- | டேவணித்தொகை | ₹ 3,50,000/- | ஏல உயர்வுத்தொகை | ₹ 50,000/- |
|---|---|---|---|---|---|

வ.எண்.2: ... திரு.K.இளமாறன் ... [illegible]

நிலுவைத் தொகை : 16.09.2025 அன்றுள்ளபடி ரூ.58,43,460.00 ... [illegible]

#### அசையா சொத்தின் விளக்கம்

[illegible]

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 26,00,000/- | டேவணித்தொகை | ₹ 2,60,000/- | ஏல உயர்வுத்தொகை | ₹ 50,000/- |
|---|---|---|---|---|---|

வங்கிக்கு தெரிந்துவரை வில்லங்கங்கள்: ஏதுமில்லை.

**மின் ஏலத் தேதி & நேரம் : 17.10.2025** காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (10 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

சொத்துகளை பார்வையிடும் தேதி: 10.10.2025 , நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://baanknet.com** மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் **www.bank.sbi** என்ற இணையதளங்களில் காணலாம்.

தேதி: வ.எண்.1: 19.09.2025; வ.எண்.2: 20.09.2025
இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II, சென்னை

---

## கனரா வங்கி
**சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]**
எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

### மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக எடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கி, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II [7901]-ன்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் **ஆக்கப்பூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனம்** செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, **"உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 09.10.2025** அன்று **(வ.எண்.1 & 2: காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)** விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**வ.எண்.1:** சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II : கடன்தாரர் பெயர் & முகவரி: **திரு.A.கோகுலசிவராஜா, (கடன்தாரர்)**, எண்.3/2, கஸ்தூரிபாய் தெரு, காவேரி நகர், சைதாப்பேட்டை, சென்னை - 600015. **திரு.R.இராஜாராஜன், (ஜாமீன்தாரர்)**, எண்.3/2, கஸ்தூரிபாய் தெரு, காவேரி நகர், சைதாப்பேட்டை, சென்னை - 600015.

**கடன் நிலுவைத் தொகை : 31.08.2025 அன்றுள்ளபடி ரூ. 1,10,73,961.72/- (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்து எழுபத்து மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்று மற்றும் பைசா எழுபத்து இரண்டுமட்டும்)** அதனுடன் பொருந்தக்கூடிய வட்டி.

**சொத்தின் விவரங்கள்: மூல ஆவணதாரர் பெயர்:திரு.A.கோகுலசிவராஜா. அட்டவணை A:** வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், எண்.16, திருமுல்லைவாயல் கிராமத்தின் பட்டா எண்.1151, சர்வே எண்.501/4B2 இல் அடங்கிய தாமரை நகர், 2வது தெரு, 22.09.2011 தேதியிட்ட துணைப்பிரிவு அங்கீகார எண்.633/11 இன்படி கதவு எண்.3-B, மனை எண்.1 இன் வட புற பாகத்தின் பரப்பளவு 1931ச.அடி காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. நிலத்தின் **எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண்.501/4A இல் உள்ள நிலம், தெற்கில்: மனை எண்.1-இன் தென் புற பாகம் (துணைப்பிரிவின்படி கதவு எண்.3-A), கிழக்கில்: 24அடி சாலை, மேற்கில்: சர்வே எண்.501/4B பகுதி. **நாற்பரப்புகள்:** வட புறம்: 68அடி 6அங்குலங்கள், தென் புறம்: 69அடி 6அங்குலங்கள், கிழக்கு புறம்: 26அடி 0அங்குலங்கள், மேற்கு புறம்: 30அடி 0அங்குலங்கள். **அட்டவணை B:** மனை எண்.1, கதவு எண்.3-B இன் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 522 ச.அடி நிலம் அதனுடன் பொது வசதிகள், பொதுப் பரப்புகள் உட்பட அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் முதல் தளத்தில் பரப்பளவு 1160ச.அடி சூப்பர் கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.F-1.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 38,00,000/- | டேவணித்தொகை | ₹ 3,80,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 25,000/- |
|---|---|---|---|---|---|

**சொத்தினை பார்வையிடும் தேதி : 03.10.2025 ; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை**

**வ.எண். 2:** எழும்பூர் II கிளை : கடன்தாரர் பெயர் & முகவரி: **1) திருமதி. சைலஜா. K (கடன்தாரர் & அடமானதாரர்)** எண்.37, நைனியப்பன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை -600002. **2) திரு.காங்கேயன் (ஜாமீன்தாரர்)**, த/பெ. **S.முருகேசன்**, எண்.37, நைனியப்பன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை -600002.

**கடன் நிலுவைத் தொகை : 31/08/2025அன்றுள்ளபடி ரூ. 1,56,51,872.02/-(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எண்ணூற்று எழுபத்து இரண்டு மற்றும் பைசா இரண்டு மட்டும்)** அதனுடன் பொருந்தக்கூடிய வட்டி.

**சொத்தின் விவரங்கள்: சொத்து எண்.1: மூல ஆவணதாரரின் பெயர்: திருமதி.சைலஜா. K.** தென்சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை-603210 ஊரப்பாக்கம், எண்.7, கரணை புதுச்சேரி கிராமத்தின் சர்வே எண்.5/1A & 5/2Aஇல் அடங்கிய மொத்தம் 52.5 செண்ட்களில் பிரிக்கப்படாத பங்கு 580 சதுர அடி நிலம் மற்றும்'Matrix', எனப் பெயரிடப்பட்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் கட்டிடத்தில், C பிளாக், இரண்டாவது தளத்தில் 1431சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பில் கட்டப்பட்டுள்ள ஃபிளாட் எண். J-2,அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி திருமதி.சைலஜா.K அவர்களுக்குச் சொந்தமானது. எல்லைகள்: வடக்கில்: கரணைப்புதுச்சேரி பிரதான சாலை; தெற்கில்:சர்வே எண்.5/2B & 5/2A பகுதி, கிழக்கில்: சர்வே எண்.5/1Bஇல் உள்ள திரு.ராகேஷ் அவர்கள் சொத்து;மேற்கில்: சர்வே எண்.4இல் உள்ள தைகையரசு கனகுப்பிள்ளை அவர்கள் சொத்து.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 32,50,000/- | டேவணித்தொகை | ₹ 3,25,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 25,000/- |
|---|---|---|---|---|---|

**சொத்து எண்.2: மூல ஆவணதாரரின் பெயர்: திருமதி.சைலஜா. K.** தென்சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை-603210 ஊரப்பாக்கம், எண்.7, கரணை புதுச்சேரி கிராமத்தின் சர்வே எண்.5/1A & 5/2Aஇல் அடங்கிய மொத்தம் 52.5 செண்ட்களில் பிரிக்கப்படாத பங்கு 585 சதுர அடி நிலம் மற்றும் "Matrix", எனப் பெயரிடப்பட்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் கட்டிடத்தில், C பிளாக், இரண்டாவது தளத்தில் 1444சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பில் கட்டப்பட்டுள்ள ஃபிளாட் எண். I-2 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி திருமதி.சைலஜா. K அவர்களுக்குச் சொந்தமானது. எல்லைகள்: வடக்கில்:கரணைப்புதுச்சேரி பிரதான சாலை; தெற்கில்: சர்வே எண்.5/2B & 5/2A பகுதி, கிழக்கில்: சர்வே எண்.5/1Bஇல் உள்ள திரு.ராகேஷ் அவர்கள் சொத்து; மேற்கில்: சர்வே எண்.4இல் உள்ள தைகையரசு கனகுப்பிள்ளை அவர்கள் சொத்து.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 33,00,000/- | டேவணித்தொகை | ₹ 3,30,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 25,000/- |
|---|---|---|---|---|---|

**சொத்தினை பார்வையிடும் தேதி : 03.10.2025 ; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை**

**மின் ஏல தேதி மற்றும் நேரம் வ.எண். 1& 2: 09.10.2025** காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

**டேவணித் தொகை செலுத்த கடைசி தேதி: விருப்பமுள்ள ஏலதாரர் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாக வ.எண்.1 & 2: 08.10.2025 அன்று மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.**

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் **(www.canarabank.com)** 'E- Auction' இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது **கனரா வங்கி, சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17. கைபேசி எண்.9740145622**, மின்னஞ்சல் **cb7901@canarabank.com** மூலமாகவோ (அல்லது) **(M/s PSB Alliance Pvt. Ltd), BAANKNET** போர்டல், **கைபேசி எண். 8291220220**, மின்னஞ்சல் **:support.ebkray@psballiance.com** உதவி சேவை மையத்தை தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction:**https://baanknet.com**

தேதி : வ.எண்.1 & 2: 20.09.2025
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

---

## எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன் : 044 - 4299 5000, 044 - 4299 5050

**அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு**

**பிற்சேர்க்கை IV-A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி | அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் | நிர்ணய விலை டேவணித் தொகை ஏல உயர்வுத் தொகை | மின் ஏல விற்பனைக்கான தேதி & நேரம் | கடன் / மொத்த நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| **வ.எண்.1** **1. திரு. சஞ்சய் காந்தி** த/பெ. பிரகாசன், **2. திருமதி. வித்யா,** க/பெ. சஞ்சய்காந்தி **இருவரின் முகவரி :** எண்.117, அண்ணா தெரு, தொழூர், திருவள்ளூர் - 602 025. | காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா, தொழூர் கிராமம், கிராம நத்தம் பழைய சர்வே எண்.418 பகுதி, புதிய சர்வே எண்.646/13ன்படி **822.5 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். | ரூ. 6,00,000/- ரூ. 60,000/- ரூ. 10,000/- | 08-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை | கடன் கணக்கு எண். **SEAVADI0316347** கோரும் உரிமை தொகை: **25.11.2021** அன்று வரை **ரூ.4,76,963/-** மேலும் **26.11.2021** முதல் பின் வட்டி, மாதாந்திர வட்டியுடன் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மொத்த நிலுவை தொகை **12.09.2025** அன்று வரை **ரூ.13,15,446/-** |
| **சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களைப்பற்றிய ஏதேனும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் : திரு. சதீஷ், 9940286237, திரு. கார்த்திக் குமார்.A - 8939729580, திரு. பிரசாந்த் T. 9894489067** | | | | |
| **வ.எண்.2** **1.திருமதி. பிரியா** க/பெ. வெங்கடேசன் எண்.4/473, C.G.N. கண்டிகை காலனி, VKR புரம், வீரகாவேரி ராஜபுரம், திருவள்ளூர், பள்ளிப்பட்டு - 631 205. **மேலும் :** எண்.09, பஜனை கோயில் தெரு, அக்காட்சிகுப்பம், வேலூர் - 632 510. தமிழ்நாடு. **2. திரு. வெங்கடேசன்,** த/பெ. ஏழுமலை, எண்.4/473, C.G.N. கண்டிகை காலனி, VKR புரம், வீரகாவேரி, ராஜபுரம், திருவள்ளூர், பள்ளிப்பட்டு - 631 205. | **வகை எண்.1 :** காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், R.K. பேட்டை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், க.மு. பேட்டை தாலுக்கா, GCS கண்டிகை B கிராமம், பழைய சர்வே எண்.173/17, புதிய சர்வே எண்.173/99ன்படி **1628 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்க பகுதியில் - 53 அடி, தெற்கு பகுதியில் - 53.8 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 37.4 அடி, மேற்கு பகுதியில் - 23.6 அடி. | ரூ. 5,00,000/- ரூ. 50,000/- ரூ. 10,000/- | 08-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை | கடன் கணக்கு எண். **SEARKNM0298227** **கோரும் உரிமை தொகை: 29.07.2022** அன்று வரை **ரூ.5,03,083/-** மேலும் **30.07.2022** முதல் பின் வட்டி, மாதாந்திர வட்டியுடன் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மொத்த நிலுவை தொகை **12.09.2025** அன்று வரை **ரூ.12,90,308/-** |
| **சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களைப்பற்றிய ஏதேனும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் : திரு. சதீஷ், 9940286237, திரு. கார்த்திக்குமார் .A - 8939729580, திரு. பூபாலன்.E, 8608578142** | | | | |
| **வ.எண்.3** **1.திரு.பார்த்திபன்.A** த/பெ. ஆறுமுகம் **2. திருமதி. மீரா** க/பெ. திரு.பார்த்திபன்.A, **3. திரு. ஆறுமுகம்** த/பெ. சின்னய்யன் **அனைவரின் முகவரி :** எண்.1, மேட்டு தெரு, மின்னல் சித்தாமூர், காஞ்சிபுரம்-603 307. | செங்கல்பட்டு பதிவு மாவட்டம், அச்சரப்பாக்கம் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, மின்னல் சித்தாமூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்ட மின்னல் சித்தாமூர் கிராமம், சர்வே எண்.111/3ன்படி **3052 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : திரு. பத்மநாபன் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : வழி, கிழக்கில் : கிழ்ப்பட்டு கிராம எல்லை, மேற்கில் : சாரா கண்ணன் என்கிற சின்னய்யா அவர்களின் நிலம். மொத்தம் - 3052 சதுர அடி. | ரூ. 7,20,000/- ரூ. 72,000/- ரூ. 10,000/- | 08-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை | கடன் கணக்கு எண். **SEACRPK0365355 / SLMMVTR0404403** கோரும் உரிமை தொகை: **26.05.2023** அன்று வரை **ரூ.4,97,144/-** மேலும் **27.05.2023** முதல் பின் வட்டி, மாதாந்திர வட்டியுடன் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மொத்த நிலுவை தொகை **12.09.2025** அன்று வரை **ரூ.9,45,436/-** |
| **சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களைப்பற்றிய ஏதேனும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் : திரு. சதீஷ், 9940286237, திரு. மனுநீதி சோழன் - 9884854154, திரு. அன்பரசு.S, 9751571950** | | | | |
| **வ.எண்.4** **1.திருமதி.பவானி.D** க/பெ. தனசேகரன் **2. திரு.தனசேகரன்** த/பெ. சுப்ரமணி **இருவரின் முகவரி :** எண்.25/385, பெருமாள் கோயில் தெரு, வெள்ளவேடு, திருவள்ளூர் - 600 124. **3. திரு. மணிவண்ணன்** த/பெ. சுப்ரமணி, எண்.20/384, பெருமாள் கோயில் தெரு, வெள்ளவேடு, திருவள்ளூர் - 600 124. | திருவள்ளூர் பதிவு மாவட்டம், பூந்தமல்லி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, வெள்ளவேடு கிராமம், கிராம நத்தம் பழைய சர்வே எண்.22/2, பட்டா எண்.55, புதிய சர்வே எண்.153/8ன்படி **646 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். | ரூ. 8,90,000/- ரூ. 89,000/- ரூ. 10,000/- | 08-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை | கடன் கணக்கு எண். **SEVLVKM0405304** கோரும் உரிமை தொகை: 28.12.2023 அன்று வரை **ரூ.4,78,980/-** மேலும் **29.12.2023** முதல் பின் வட்டி, மாதாந்திர வட்டியுடன் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மொத்த நிலுவை தொகை **12.09.2025** அன்று வரை **ரூ.8,67,519/-** |
| **சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களைப்பற்றிய ஏதேனும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் : திரு. சதீஷ், 9940286237, திரு. கார்த்திக்குமார்.A, 8939729580, திரு. பிரசன்னா.J, 9514100285** | | | | |

விருப்பமுள்ள வாங்குபவர் / ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக **"Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725** மற்றும் **IFSC CODE-ESFB0001001**, Bhaggyam Galleria, New No.18, Bazullah Road, T.Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி **07.10.2025** அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் **www. Equitasbank.com & https://www.bankeauctions.com** என்ற இணையதளம் மூலம் காணலாம்.

**தேதி : 21.09.2025**
**இடம் : சென்னை**

**அதிகாரப்பூர்வ அலுவலர், எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

---

ஞாயிற்றுக்கிழமைதோறும்
இளமை! புதுமை! இனிமை!
தினமணி கதிர்

---

## Union Bank of India
**காஞ்சிபுரம் கிளை**
எண்.54, வணிகர் தெரு, ஜோயலூக்காஸ் எதிரில், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631502.

**கடன்தாரருக்கு விற்பனைப்பற்றி தெரிவிக்கும் அறிவிப்பு (30 நாட்கள் அறிவிப்பு)**
பிணைக்காப்பு உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் விதி 6(2) / 8(6)

பெறுநர் — நாள் : 03.09.2025

**கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/இணை-மனுதாரர்/அடமானதாரர்:**

**1. Ms சுதா M** D/o மணி S, 127ஏ ஈஸ்வரன் கோயில் பின் தெரு, சதாவரம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631501.

**2) திரு. மணி S** த/பெ. சிங்காரம் பிள்ளை, 127ஏ ஈஸ்வரன் கோயில் பின் தெரு, சதாவரம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631501

ஐயா/அம்மா,

**பொருள்-2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதியின்கீழ் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையினை மீட்பது தொடர்பாக திரு. S மணி அவர்களுக்கு சொந்தமான அடமான சொத்தினை விற்பனை செய்தல்.**

யூனியன் பேங்க் ஆப் இந்தியா, காஞ்சிபுரம் கிளை, எண்.54, வணிகர் தெரு, ஜோயலூக்காஸ் எதிரில், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631502, அடமான கடன் வழங்கியவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி பிரிவு 13(2)-ன்கீழ் **13.03.2025** அன்று கோரிக்கை அறிவிப்பினை அதில் குறிப்பிட்ட நோக்கிற்குள் நிலுவைத் தொகையினை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்துமாறு அறிவுறுத்தினார். குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் அந்த அறிவிப்பிற்கு இணங்கத் தவறியதால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 6/8 உடன் படிக்கப்பட்ட சட்டத்தின் 13(4) பிரிவின்கீழ் **02.06.2025** அன்று பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார்.

பாதுகாக்கப்பட்ட சொத்தை கையகப்படுத்திய பிறகும், வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை நீங்கள் செலுத்தவில்லை. எனவே, இந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு ஆன்லைன் மூலம் பொது மின்-ஏலத்தை நடத்துவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மின்-ஏலத்தின் தேதி மற்றும் நேரம் மற்றும் சொத்தின் குறைந்தபட்ச அனுமதிக்கப்பட்ட விலை மற்றும் சேவை வழங்குநரின் விவரங்கள் மின்னணு ஏலத்தின் போது தங்களுக்கு தனியாக தெரிவிக்கப்படும்.

எனவே, நீங்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை, விற்பனை அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன், வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை வட்டி மற்றும் இதர செலவு, கட்டணங்களுடன் செலுத்தி சொத்தின் மீதான இந்த நடவடிக்கையினை சட்டத்தின் பிரிவு 13(8)-யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உங்கள் சொத்தை நீங்கள் மீட்டெடுக்கலாம்.

**சொத்தின் அட்டவணை**

மனை எண்.63 கொண்ட வீடு மற்றும் வீட்டு சைட் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், சர்வே எண். 58/1ஏ, (பட்டாவின்படி ச.எண்.58/5), விஷ்ணு காஞ்சி கிராமம், காஞ்சிபுரம் தாலுகா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டது, அளவுகள் 1210 சதுர அடி பரப்பு. எல்லைகள் : மனை எண். 64-க்கு வடக்கே, மனை எண். 62-க்கு தெற்கே, ஈஸ்வரன் கோயில் தெருவிற்கு கிழக்கே, மனை எண். 66 மற்றும் குட்டை புறம்போக்கிற்கு மேற்கே.

**இடம் : காஞ்சிபுரம்**
**தேதி : 03.09.2025**

**அதிகாரபூர்வ அதிகாரி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா**

---

## தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிட்
(பதிவு அலுவலகம் 57, V.E.ரோடு, தூத்துக்குடி)
**சென்னை பெரம்பூர் கிளை**
பழைய எண்.82, புது எண்.213 & 215, திலகா டவர்ஸ், மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை - 600 011

### சுவாதீன அறிவிப்பு

செக்யூரிட்டைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் 2002, சட்டப்பிரிவு 13(12) மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002, விதி 3-ஐ சேர்த்து படிக்கவும் இதன் கீழ் தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிட், சென்னை பெரம்பூர் கிளையின், கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் **கடன்தாரர் திரு.M.சதீஷ்வரன்** த/பெ.திரு.S.மதிவாணன், **உரிமையாளர்: M/s.அப்துரா கலெக்ஷன்ஸ்,** எண்.26/43, கபிலர் தெரு, மதுமா நகர், சென்னை - 600 011 **மேலும்:** எண்.1, சின்னகுழந்தை 3வது தெரு, 4வது குறுக்கு தெரு, மதுமா நகர், பெரம்பூர், சென்னை - 600 011 எண்.26/43, கபிலர் தெரு, மதுமா நகர், சென்னை - 600 011 மற்றும் **ஜாமீன்தாரரான திருமதி.ஜெனிதா பிரியா** க/பெ.திரு.M.சதீஷ்வரன், எண்.1, சின்னகுழந்தை 3வது தெரு, 4வது குறுக்கு தெரு, மதுமா நகர், பெரம்பூர், சென்னை - 600 011, **மேலும்:** எண்.26/43, கபிலர் தெரு, மதுமா நகர், சென்னை - 600 011, ஆகியோர்களுக்கு **26.09.2023** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள **31.08.2023** அன்று வரை கடன் பாக்கித் தொகையான **ரூ.1,83,764.43 (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும்)** மேலும் அதனை தொடர்ந்து பின் வட்டி மற்றும் செலவுகளை சேர்த்து கேட்பு அறிவிப்பு தேதியிலிருந்து **60** தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவர்கள் பிணை காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி 8 பிரிவு 13 உப பிரிவு 4-ன் கீழ் **18.09.2025** அன்று சுவாதீனம் செய்துள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பேரங்களும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பேரம் வைத்து கொண்டால் அது தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிட், சென்னை பெரம்பூர் கிளைக்கு **17.09.2025** அன்று வரை உள்ள கடன் பாக்கி தொகையான **ரூ.1,65,451.16 (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து நானூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா பதினாறு மட்டும்)** மேலும் அதனை தொடர்ந்து வரும் பின் வட்டி மற்றும் செலவுகளை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**அசையா சொத்தின் விபரம்**

திரு.M.சதீஷ்வரன் அவர்கள் பெயரில் உள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள பெரம்பூர் - புரசைவாக்கம் தாலுகா, செம்பியம் கிராமத்தில் கதவு எண்.1/1, சின்ன குழந்தை 3வது தெரு, தற்போது சின்ன குழந்தை 4வது குறுக்கு தெரு, செம்பியம், சென்னை என்ற முகவரியில் பிளாக் எண்.6, (பட்டாவின்படி) சர்வே எண்.12/2A, டவுன் சர்வே எண்.47-ன்படி 578 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் அதில் உள்ள வீட்டு கட்டிடம் மற்றும் எல்லைகள் : வடக்கில்: சின்ன குழந்தை 4வது குறுக்கு தெரு, தெற்கில்: திரு.செல்வராஜ் அவர்களின் சொத்து, கிழக்கில்: சின்ன குழந்தை 3வது தெரு, மேற்கில்: அட்டவணை A- சொத்தின் மீதமுள்ள பகுதி.

தேதி : 18.09.2025
இடம் : சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்., (சென்னை பெரம்பூர் கிளைக்காக)

---

## பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
**சைதாப்பேட்டை கிளை**
AGS டவர்ஸ், முதல் தளம், எண்.2, அப்துல் ரசாக் முதல் தெரு சைதாப்பேட்டை, சென்னை-600015.
தொலைபேசி : 91 44 23454396 / 397

### கடன் பெற்றவருக்கு வழங்கப்படும் அறிவிக்கை
(2002ஆம் ஆண்டின் நிதிசார்ந்த சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களை அமலாக்குவதற்கான சட்டத்தின் பிரிவு 13இன் உட்பிரிவு (2)இன் கீழ்)

திரு. மணிவண்ணா P (கடன்தாரர்), திருமதி. அனுசுயா M (கடன்தாரர்), க.எண். A29, பாதல் பேலஸ், எண். 23, ஹஸ்தினாபுரம் பிரதான சாலை, குரோம்பேட்டை, சென்னை-600044. மேலும் திரு. மணிவண்ணா P, திருமதி. அனுசுயா M, எண். 2A, வட்டம் 3, [illegible] காலனி, பள்ளிக்கரணை டவுன், காஞ்சிபுரம்-601302. திரு.நவீன் (ஜாமீன்தாரர்), த/பெ. [illegible], எண். 2/1, வள்ளியம்மை தெரு, வடபழனி, சென்னை-600026.

**பொருள்: எமது சைதாப்பேட்டை கிளையில் பெற்றிருந்த கடன் வசதி தொடர்பாக**

1. எமது கடித தேதி 05.12.2018 தேதிய ஒப்புதல் கடிதத்தின்படி தங்களுக்கு வழங்கப்படுவதற்கான கடன் வசதிக்கான ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் வசதியை தாங்கள் பெற்றுக் கொண்டு, பின்னர் குறிப்பிடப்படும் வகையில் அதற்கான பிணையை வழங்கிய பிறகு இந்தக் கடன் வசதிகளை பயன்படுத்தத் தொடங்கினீர்கள். மேற்கூறிய கடன்/ரொக்கக் கடன் வசதியில் தற்போதைய நிலுவைத் தொகை மற்றும் இத்தகைய பொறுப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள பிணைக்கான வட்டித் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| S. No. | பெற்றுள்ள கடன் வசதியின் வகை மற்றும் தன்மை | அளவு (ரூபாய்களில்) | வட்டி விகிதம் | 31.08.2025 தேதிப்படி நிலுவைத்தொகை + மேலும் 31.08.2025 தேதி முதல் செலுத்தப்படாத வட்டி மற்றும் செலவுகள் |
|---|---|---|---|---|
| 1 | Od வீட்டுக்கடன் 44830400000105 | ரூ. 9,00,000/- | 12.90% | ரூ. 8,38,926.11/- |
| | மொத்தம் | | | ரூ. 8,38,926.11/- (ரூபாய் எட்டு லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மற்றும் காசுகள் பதினொன்று மட்டும்) |

**விவரங்களுடன் கூடிய பிணை ஒப்பந்தம் சொத்து**

**அட்டவணை - A:** காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, ஹஸ்தினாபுரம் கிராமம், பழைய எண் 160, புதிய எண் 101, பழைய ச.எண் 30/5 மற்றும் R.S. எண். 30/5-A2, லேஅவுட் எண். 317/3 மற்றும் 317/5, பட்டா எண். 2452ன்படி 13.02.2024 தேதியிட்ட பல்லாவரம் நகராட்சி கட்டிட அனுமதி எண்.PPA எண். 109/04/02, CMDA வரைபட அனுமதி எண் B/SPL.BLDG/20/A/D/2004ன் ஹஸ்தினாபுரம் பிரதான சாலை குரோம்பேட்டையில் உள்ள மொத்தம் 1 ஏக்கர் (100 செண்ட்) நிலத்தில் 1.010/88ன் (500.436 சதுர அடி) பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் / நிலத்தில் உரிமையுள்ள காலி நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். **எல்லைகள் : வடக்கு** : ஹஸ்தினாபுரம் பிரதான சாலை (ச.எண். 30/4, 14ஃப் சாலை), **தெற்கு** : சர்வே எண் 30/10, **கிழக்கு** : சர்வே எண் 32, **மேற்கு** : 30 அடி சாலை. இச்சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

**அட்டவணை - B** : மேலே கூறப்பட்ட அட்டவணை A சொத்தில் 1.010/88 பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் அல்லது (500.436 சதுர அடி).

**அட்டவணை - C** : "பாதல் பேலஸ்" என பெயர் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பின் A பிளாக்கில் இரண்டாவது தளத்தில் பிளாட் எண். 29ன் கட்டுமான பரப்பு 890 சதுர அடி (பொது பகுதிகள் இணைந்த) இச்சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

2. நீங்கள் வாங்கிய கடனுக்கு செலுத்த வேண்டிய அக்டோபர் 2023 மாத இறுதி வரை செலுத்த வேண்டிய மாத தவணை மற்றும் வட்டி செலுத்த தவறி உள்ளீர்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். மேலும் தாங்கள் பெற்ற கல்வி கடனுக்கு (7912060000475) கூட்டு கடன்தாரர் என்பதையும் அறிவீர்கள்.

3. மேற்குறிப்பிட்ட வகையில் நீங்கள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாத நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி **29.01.2024** அன்றைய நிலவரப்படி உங்களது கடன் கணக்குகள் செயல்படாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து தாங்கள் இது பற்றிய கோரிக்கைகளையும் வேண்டுதல்களையும் விடுத்த போதிலும் தொகையை செலுத்த வேண்டிய காலம் கடந்த போதிலும் பெற்ற கடன்களையும் அதன் மீதான வட்டியையும் நீங்கள் செலுத்தவில்லை.

4. மேற்கூறிய முதல் பாராவில் குறிப்பிடப்பட்டிருந்த கடன் வசதிகளை பெற்றதன் அடிப்படையில் உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற தவறியது மட்டுமின்றி மற்றும் உங்கள் கணக்கானது செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 2002 ஆம் ஆண்டின் நிதிசார்ந்த சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன்களை அமலாக்குவதற்கான சட்டத்தின் பிரிவு 13இன் உட்பிரிவு (2)இன் கீழ் இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்கை செய்வதோடு, இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் முதல் பாராவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நீங்கள் வங்கிக்கு **31.08.2025** தேதிப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை **ரூ 8,38,926.11**ஐ (ரூபாய் எட்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு மற்றும் காசுகள் பதினொன்று மட்டும்) மேலும் **01.09.2025** தேதி முதல் வட்டி, ... [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

**குறிப்பு : எமது 22.12.2022 தேதியிட்ட SARFAESI சட்டத்தின் கோரிக்கை அறிவிப்பானது சில தவிர்க்க முடியாத தொழில்நுட்ப காரணத்திற்காக விலக்கிக் கொள்ளப்படுகிறது.**

இடம் : சைதாப்பேட்டை, தேதி : 06.09.2025 — அங்கீகாரம் பெற்ற அலுவலர், பாங்க் ஆஃப் பரோடா

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

ஞாயிற்றுக்கிழமை
21 செப்டம்பர் 2025
சென்னை
20 பக்கங்கள் ரூ.10

# ஹைச்-1பி விசா கட்டணம் ரூ.88 லட்சம்

## அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு; இந்தியர்களுக்குப் பாதிப்பு

**நியூயார்க்/ வாஷிங்டன், செப். 20:** ஹெச்-1பி விசா (நுழைவு இசைவு) கட்டணத்தை ஆண்டுக்கு ரூ.88 லட்சமாக (ஒரு லட்சம் டாலர்) உயர்த்தும் கோப்பில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை கையொப்பமிட்டார்.

தற்போது ரூ.1.49 லட்சமாக உள்ள இந்தக் கட்டணம் அதிரடியாக உயர்த்தப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (செப். 21) முதல் அமலாகவுள்ளது.

இது அமெரிக்காவில் பணியாற்றிவரும் இந்தியர்களுக்கு, முக்கியமாக தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதும் இருந்து திறமையான பணியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு அதிக ஊதியத்துடன் அமெரிக்காவில் வேலை வழங்க ஹெச்-1பி விசா நடைமுறையை அந்நாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக ஹெச்-1பி விசா திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் 71 சதவீதத்துடன் இந்தியா முதலிடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

**டிரம்ப் உத்தரவு:** கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற டிரம்ப் 'அமெரிக்கா முதலில்' என்ற கொள்கையின்படி உள்நாட்டு வேலைவாய்ப்புகளை அமெரிக்கர்களுக்கே வழங்க வேண்டும் என அந்நாட்டில் உள்ள பெரும் தொழில்நுட்ப நிறுவனங்களிடம் அறிவுறுத்தி வருகிறார்.

இந்நிலையில், ஹெச்-1 பி விசா கட்டணத்தை ஆண்டுக்கு ரூ.88 லட்சமாக உயர்த்தும் கோப்பில் டிரம்ப் வெள்ளிக்கிழமை கையொப்பமிட்டார்.

இதுதவிர, அமெரிக்காவில் கோடிக்கணக்கில் முதலீடு செய்பவர்களுக்கு நிரந்தர வசிப்பிட உரிமை வழங்க வழிவகுக்கும் தங்க அட்டை (கோல்டு கார்டு) திட்டத்துக்கும் ஒப்புதல் அளித்து டிரம்ப் கையொப்பமிட்டார்.

**திறமையானவர்கள் மட்டுமே தேவை:** இதுகுறித்து அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் கூறியதாவது:

ஹெச்-1 பி விசா விண்ணப்பக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.88 லட்சமாக உயர்த்தப்படுகிறது. இதனால் எந்தவொரு பெரும் தொழில்நுட்ப நிறுவனமும் வெளிநாட்டினருக்குப் பயிற்சி வழங்கி பணியமர்த்தாது. ஏனெனில் இது பொருளாதார ரீதியாக மிகவும் கடினமானது.

அமெரிக்காவில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் அண்மையில் பட்டப் படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு இந்த நிறுவனங்கள் பயிற்சி வழங்க விரும்பினால், அதை அமெரிக்க மாணவர்களுக்கே வழங்கட்டும். வெளிநாட்டு மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வேலைவாய்ப்பை வழங்குவதை முற்றிலுமாக நிறுவனங்கள் நிறுத்த வேண்டும். இதுவே அரசின் திட்டம்.

ஓர் ஊழியருக்கு ஓராண்டுக்கு ரூ.88 லட்சம் என 6 ஆண்டுகளுக்கு நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டும்.

எனவே, பெரும் கட்டணத்தை ஓர் ஊழியருக்காகச் செலுத்த வேண்டுமென்றால், அவர் அமெரிக்காவுக்கும் நிறுவனத்துக்கும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவரா என்பதை அந்த நிறுவனம் தான் முடிவு செய்ய வேண்டும் என்றார்.



### அனைவருக்கும் மகிழ்ச்சி: டிரம்ப்

ஹெச்–1பி விசா கட்டண உயர்வு மற்றும் தங்க அட்டை திட்ட தொடக்கம் குறித்து டிரம்ப் பேசியதாவது: அமெரிக்காவுக்கு மிகச் சிறந்த ஊழியர்கள் மட்டுமே தேவை. அதற்காகவே ஹெச்–1பி விசாவுக்கான கட்டணத்தை உயர்த்த ஒப்புதல் அளித்தேன்.

ஹெச்–1 பி விசா கட்டணம் மற்றும் தங்க அட்டை திட்டம் மூலம் அரசுக்கு பலநூறு கோடி டாலர்கள் கிடைக்கவுள்ளன. இந்தப் பணம் அமெரிக்க வரிகளையும் கடனையும் குறைக்கப் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த முன்னெடுப்புகள் மிகப்பெரிய அளவில் வெற்றி பெறும் என நம்புகிறேன். இதற்கு தொழில்நுட்ப நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இனி நிபுணத்துவம் பெற்ற அதிதிறன்வாய்ந்த ஊழியர்களுக்கு மட்டுமே நிறுவனங்கள் விசா கட்டணம் செலுத்தும். தற்போதைய முன்னெடுப்புகள் அரசு, நிறுவனங்கள் என அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

### புதிய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே கட்டண உயர்வு: வெள்ளை மாளிகை

அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் சனிக்கிழமை கூறியதாவது: ஹெச்1–பி விசா கட்டண உயர்வானது அந்த விசாவுக்கு விண்ணப்பிக்கும் புதிய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஏற்கெனவே இந்த விசாவை பெற்றவர்களிடம் உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்கப்படாது. அமெரிக்காவில் இருந்து இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் சென்ற ஹெச்–1 பி விசாதாரர்கள் அவசரகதியில் ஞாயிற்றுக்கிழமைக்குள் அமெரிக்கா திரும்பவோ, ஒரு லட்சம் டாலரை (ரூ.88 லட்சம்) செலுத்தவோ வேண்டியதில்லை என்றார்.

### ஆய்வுக்குப் பின் நடவடிக்கை: வெளியுறவு அமைச்சகம்



ரண்தீர் ஜெய்ஸ்வால்

**புது தில்லி, செப். 20:** அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஹெச்1–பி விசா கட்டணத்தை சுமார் ரூ.88 லட்சமாக உயர்த்தியுள்ள நிலையில், இதன் தாக்கத்தை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அமெரிக்க அரசின் இந்த நடவடிக்கை மனிதாபிமான ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்னைகளையும் உருவாக்கும் வாய்ப்புள்ளது. இதற்கு அமெரிக்க அதிகாரிகள் உரிய வகையில் தீர்வுகாண்பார்கள் என்று நம்புகிறோம். இந்திய தொழில் துறை உள்பட அனைத்து நிலைகளிலும் இந்த நடவடிக்கையின் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பது ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்திய அமெரிக்க நிறுவனங்கள் இணைந்து பல புத்தாக்கங்களையும், புதிய முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன. திறமை வாய்ந்த பணியாளர்கள் பரிமாற்றம் மூலம் மிகப்பெரிய தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, போட்டித்திறன், செல்வ உருவாக்கம் ஆகியவை இரு நாடுகளுக்கும் இதன்மூலம் சாத்தியமாகி வந்துள்ளது. இரு நாடுகள் இடையே மக்கள் தொடர்பு என்பது மிகவும் முக்கியமானது. கொள்கைகளை வகுப்பவர்கள் இவை அனைத்தையும் கருத்தில் கொள்வார்கள் என்று நம்புகிறோம் என்று கூறப்பட்டுள்ளது.

### ஹெச்–1 பி விசா

- வெளிநாட்டில் இருந்து திறமையான ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தற்காலிகமாக அமெரிக்காவில் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு வழங்குவது.
- இந்த விசாக்கள் 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். மேலும் 3 ஆண்டுகளுக்கு இதைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.
- இப்போது ஹெச் –1 பி விசா கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1.49 லட்சம், அதிகபட்சம் ரூ.3.96 லட்சமாக (ஆண்டுக்கு) உள்ளது. புதிய கட்டணம் ரூ.88 லட்சம் (ஆண்டுக்கு).

### தங்க அட்டைத் திட்டம்

- அமெரிக்காவை மேம்படுத்த கோடிக்கணக்கில் அங்கு முதலீடு செய்வதை ஊக்குவிப்பது.
- தேர்வு செய்யப்பட்ட நபர்கள் அந்நாட்டு நிதித் துறைக்கு முதலில் நிதி வழங்குவது அவசியம்.
- தனிநபராக இருப்பின் ரூ.8.8 கோடி அல்லது ஒரு நபரை நிறுவனம் முன்மொழிந்தால் ரூ.16 கோடி வழங்குவது கட்டாயம்.
- நிதி வழங்குபவர்களுக்கு விசா நடைமுறையில் பல்வேறு சலுகைகள் வழங்குவதோடு கிரீன் கார்டு வழங்கவும் அரசு முன்மொழிவு.







### நடிகர் மோகன்லாலுக்கு தாதா சாகேப் பால்கே விருது



**புது தில்லி, செப். 20:** இந்திய திரைத்துறையின் மிக உயரிய தாதா சாகேப் பால்கே விருது நடிகர் மோகன்லாலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி உள்ளே)

### தமிழக மீனவர்களை கைவிட்ட திமுக, பாஜக



**நாகப்பட்டினம்/திருவாரூர், செப். 20:** தமிழக மீனவர்களை திமுக அரசும், பாஜக அரசும் கைவிட்டுவிட்டதாக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் குற்றஞ்சாட்டினார்.

(விரிவான செய்தி உள்ளே)

இன்றைய 4 பக்க
கொண்டாட்டம்



தஞ்சாவூர் மருத்துவப் பள்ளி

- வாழ்க்கை வாழ்வதற்கே..!
- இலங்கையின் தமிழ்த் தொலைக்காட்சி நட்சத்திரம்
- புதுச்சேரியின் பொக்கிஷம்!
- சிறுவர்மணி
- மகளிர்மணி
- 300 கதைகளில் 3 கதைகள் மட்டுமே...

இன்றைய இதழுடன்
24 பக்க கதிர் இணைப்பு

# தமிழ்நாடு 11.19% பொருளாதார வளர்ச்சி

## முதல்வர் பெருமிதம்



**சென்னை, செப். 20:** தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 11.19 சதவீதமாக உயர்த்தியிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

ஜெர்மனி, லண்டனில் அவர் மேற்கொண்ட பயணங்கள் குறித்தும், திராவிட மாடல் அரசின் புதிய திட்டங்கள் பற்றியும் 'மக்களுடன் ஸ்டாலின்' செயலியில் கேள்விகள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றுக்கு காணொலி வடிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை அளித்த பதில்:

ஜெர்மனியில் முதலீட்டாளர்களைச் சந்தித்தபோது, தமிழ்நாட்டில் எப்படியெல்லாம் கட்டமைப்புகளை உருவாக்கியிருக்கிறோம், எவ்வளவு படித்த திறமையான இளைஞர்கள் இருக்கிறார்கள், இங்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு பாடத்திட்டத்தைத் தாண்டி, எப்படியெல்லாம் திறன் மேம்பாடு செய்கிறோம் என்று காட்சி விளக்கங்களைச் செய்தோம். அதைப் பார்த்த அவர்கள், தமிழ்நாட்டைப் பற்றி வியந்து பேசினார்கள்.

முதலீட்டாளர்கள் பேசும்போது, இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் பெண்களுக்கு நாம் வேலைவாய்ப்பு கொடுத்திருப்பதை பெருமையுடன் சொன்னார்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியைக் கொண்டுசெல்வதையும், ஒரு தொழில் பிரிவுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், அனைத்துப் பிரிவுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பதையும் பாராட்டினர்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த மாற்றத்தையும், வளர்ச்சியையும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**சுய கட்டுப்பாடு அவசியம்:** எனது வெளிநாட்டுப் பயணம் பல அனுபவங்கள் கொண்டதாக இருந்தது. அங்குள்ள மக்கள், பொது இடங்களில் எந்த அளவுக்கு சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று கவனித்தேன். இந்தப் பொறுப்புணர்வு இங்கேயும் வரவேண்டும்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை இரட்டை இலக்கத்தில் அதாவது 11.19 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதிமுக ஆட்சியில் 6.7 சதவீதமாக மட்டுமே இருந்தது. ஏற்றுமதி தரக் குறியீட்டில் முதலிடத்துக்கு முன்னேறி இருக்கிறோம். உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பை எடுத்துக்கொண்டால், 35 லட்சத்தில் இருந்து 73 லட்சமாக உயர்த்தியிருக்கிறோம். எங்களுடைய சாதனைகளை நாங்களே முறியடிப்போம்.

இன்னும் நிறைய பணிகள் இருக்கின்றன. நாம் உலக அளவில் போட்டி போட்டு ஓட வேண்டும். அதற்கான பணிகள் 2026-ஆம் ஆண்டிலும் அமையக் கூடிய திமுக ஆட்சியில் தொடரும் என்று முதல்வர் பேசியுள்ளார்.




# இரு தரப்பு உறவில் புதிய அத்தியாயம்

## இந்தியா – கனடா முடிவு

**புது தில்லி, செப். 20:** இந்தியா–கனடா உறவில் புதிய அத்தியாயத்தை தொடங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல், கனடா தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நத்தாலி டிரோயுனிடம் தில்லியில் அண்மையில் பேச்சு நடத்தினார். அப்போது, இருதரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

கனடாவில் கடந்த 2023-ஆம் ஆண்டில் காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய அரசுக்கு தொடர்பிருப்பதாக அப்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். இது இரு நாட்டு உறவில் சிக்கலை உருவாக்கியது. ட்ரூடோவின் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்த இந்தியா, காலிஸ்தான் பிரிவினைவாத சக்திகளுக்கு ட்ரூடோ அரசு ஆதரவளிப்பதாக சாடியது.

நிஜ்ஜார் கொலையில் விசாரிக்கப்பட வேண்டிய நபராக, கனடாவுக்கான இந்திய தூதராக இருந்த சஞ்சய் வர்மா அறிவிக்கப்பட்ட நிலையில், அவர் உள்பட 6 தூதரக உயரதிகாரிகளை கடந்த ஆண்டு திரும்ப அழைத்த இந்தியா, கனடா தூதர் உள்ளிட்ட உயரதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டது. இதனால், இருதரப்பு உறவு முன்னெப்போதும் இல்லாத அளவில் பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்தச் சூழலில், ஜஸ்டின் ட்ரூடோ ராஜிநாமாவைத் தொடர்ந்து, பொருளாதார வல்லுநரான மார்க் கார்னி கனடா பிரதமராக கடந்த மார்ச் மாதம் பதவியேற்றார். அவர் இந்தியாவுடன் இணக்கமான உறவுக்கு நடவடிக்கை எடுத்தார். பிரதமர் மோடி கனடாவில் நடைபெற்ற ஜி7 மாநாட்டிலும் பங்கேற்றார். அப்போது கார்னியுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தையும் நடத்தினார். இதைத் தொடர்ந்து, இரு நாட்டு உறவை மேம்படுத்த பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவும், கனடாவும் தொடர்ந்து நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட ஒப்புக் கொண்டுள்ளன. இதன்மூலம் இரு நாட்டு உறவில் புதிய அத்தியாயத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரு தரப்பிலும் பரஸ்பரம் நம்பிக்கையை அதிகரிப்பது, தொடர்ந்து பேச்சு நடத்துவது ஆகியவற்றுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு, இரு நாடுகள் இடையே குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்களைப் பரிமாறிக் கொள்வது குறித்து இரு நாட்டு தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்மிக சிந்தனை

ஆன்மிக லட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு, மேலை நாட்டு நாகரீகத்தின் பின்னால் செல்வாயானால் மூன்றே தலை முறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும்.

-சுவாமி விவேகானந்தர்

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

சங்கீதம் 91:11

மேலும், (இறைநம்பிக்கையாளர்களான அவர்கள் எத்தகைய வர்கள் எனில்), தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாக்கின்றார்கள்.

(அல்குர்ஆன் 23.5)

## இன்றும் நாளையும்

**ஞாயிற்றுக்கிழமை**
(21—9—2025)
**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–5**
**பிறை:** தேய்பிறை

**திதி** : அமாவாசை நள்ளிரவு 1.42 வரை பிறகு பிரதமை.
**நட்சத்திரம்** : பூரம் காலை 10.56 வரை பிறகு உத்திரம்
**யோகம்** : சித்த / அமிர்தயோகம்
**ராகுகாலம்** : மாலை 4.30 - 6.00 மணி.
**எமகண்டம்** : நண்பகல் 12.00 - 1.30 மணி.
**சூலம்** : மேற்கு.
**நல்ல நேரம்** : காலை 7 - 8 மணி. மாலை 3 - 4 மணி

**இன்றைய விசேஷம்:** சர்வ மஹாளய அமாவாசை. (இராமேஸ்வரம், வேதாரண்யம், திலகைப்பதி, திருவெண்காடு, திருவள்ளூர் தலங்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய நன்று). திருக்கண்ணபுரம் ஸ்ரீ செளரிராஜப் பெருமாள் ஸ்ரீ விபீஷணாழ்வாருக்கு நடையழகு சேவை காண்பித்தருளல். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில் குளக்கரை ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு திருமஞ்சனம். திருத்தணி ஸ்ரீ முருகப் பெருமான் பால் அபிஷேகம். இராமேஸ்வரம் ஸ்ரீ பர்வத வர்த்தினியம்மன் ஊஞ்சலில் காட்சி. காஞ்சி ஸ்ரீ காமாட்சியம்மன், இருக்கன்குடி ஸ்ரீ மாரியம்மன், சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் தலங்களில் காலை பால் அபிஷேகம். சாத்தூர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் புறப்பாடு. வைத்தீஸ்வரன் கோவில் ஸ்ரீ அங்காரகருக்கும், ஸ்ரீ செல்வமுத்துக் குமார சுவாமிக்கும் அபிஷேகம். ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி புறப்பாடு.

**திங்கள்கிழமை**
(22—9—2025)
**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–6**
**பிறை:** வளர்பிறை

**திதி** : பிரதமை பின்னிரவு 2.49 வரை பிறகு துவிதியை.
**நட்சத்திரம்** : உத்திரம் நண்பகல் 12.25 வரை பிறகு அஸ்தம்
**யோகம்** : சித்தயோகம்
**ராகுகாலம்** : காலை 7.30 - 9.00 மணி.
**எமகண்டம்** : காலை 10.30 - 12.00 மணி.
**சூலம்** : கிழக்கு.
**நல்ல நேரம்** : காலை 6 - 7 மணி. மாலை 3 - 4 மணி

**இன்றைய விசேஷம்:** தௌஹத்ர பிரதமை. நவராத்திர பூஜை ஆரம்பம். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் புஷ்பப் பாவாடை தரிசனம். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாளுக்கு அலங்கார திருமஞ்சன சேவை. சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் மஹா அபிஷேகக் காட்சி. கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியில் ஸ்ரீ கருடாழ்வாருக்குத் திருமஞ்சன சேவை. திருமயிலை, திருவான்மியூர், பெசன்ட்நகர், திருவிடைமருதூர் தலங்களில் காலை சிறப்பு சோமவார அபிஷேகம், அலங்காரம் வழிபாடு. திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கொலு தர்பார் காட்சி. நத்தம் வரகுணவல்லித் தாயார் சமேத ஸ்ரீ விஜயாசனப் பெருமாள் காலை அலங்கார திருமஞ்சன சேவை. திருச்சேறை ஸ்ரீ சாரநாதர் புறப்பாடு. கோவில்பட்டி ஸ்ரீ செண்பகவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ பூவண்ணநாதர் காலை பால் அபிஷேகம்.

| ராசி | ஞாயிறு (21-9) | திங்கள் (22-9) |
|---|---|---|
| மேஷம் | அமைதி | பக்தி |
| ரிஷபம் | நட்பு | ஓய்வு |
| மிதுனம் | நம்பிக்கை | பணிவு |
| கடகம் | நன்மை | சிந்தனை |
| சிம்மம் | வெற்றி | உறுதி |
| கன்னி | ஆதாயம் | முயற்சி |
| துலாம் | பக்தி | ஊக்கம் |
| விருச்சிகம் | பாசம் | நன்மை |
| தனுசு | நற்செய்தி | பாசம் |
| மகரம் | ஓய்வு | விருத்தி |
| கும்பம் | வெற்றி | தெளிவு |
| மீனம் | சிறப்பு | லாபம் |

# அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் கருவூலமாக திகழும் அரசியல் சாசனம்

## உச்சநீதிமன்ற நீதிபதி கோட்டீஸ்வர் சிங்

**தாம்பரம், செப். 20:** அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் கருவூலமாக இந்திய அரசியல் சாசனம் திகழ்கிறது என உச்சநீதிமன்ற நீதிபதி கோட்டீஸ்வர் சிங் தெரிவித்தார்.

பல்லாவரம் வேல்ஸ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன சட்டக் கல்லூரியின் 10-ஆம் ஆண்டு நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில், உச்சநீதிமன்ற நீதிபதி கோட்டீஸ்வர் சிங் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியதாவது:

சட்டத்தின் ஆளுமை குறித்த ஆழ்ந்த அறிவாற்றலை வழங்குவதுதான் சட்டக் கல்வியின் உயரிய நோக்கம் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் சட்ட அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், உரிமை ஆகியவற்றை பாதுகாத்து நீதிநெறி கடைப்பிடிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சாசனம் அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தியாகத் திகழ்கிறது.



பல்லாவரம் வேல்ஸ் உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனச் சட்டக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற 10–ஆம் ஆண்டு நிறைவு விழாவில் விருது பெற்ற மாணவர்களுடன் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் கோட்டீஷ்வர் சிங், ஆர்.மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா, உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.நிர்மல்குமார் ,ஜி.கே.இளந்திரையன், டி.பரத சக்கரவர்த்தி, ஆர்.கலைமணி, வேல்ஸ் உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவன வேந்தர் ஐசரி கே.கணேஷ், துணைத் தலைவர் ப்ரீத்தா கணேஷ், சட்டக் கல்லூரி முதல்வர் எஸ்.அம்பிகா குமாரி உள்ளிட்டோர்.

ஒழுக்கம், விடாமுயற்சி, கடின உழைப்பு உள்ளிட்டவற்றை கடைப்பிடிப்பது மூலம் வழக்குரைஞர் தொழிலில் சிறந்து விளங்க முடியும். சட்டக் கல்வி பயின்றோருக்கான வேலை வாய்ப்புகள் பன்மடங்காக அதிகரித்துள்ளன. வழக்குரைஞர் பணி தொடர்பான செயற்கை நுண்ணறிவாற்றல், தடயவியல், சைபர் குற்றவியல் உள்ளிட்ட தொழில்நுட்பத் திறன்களையும் மாணவர்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

உச்சநீதிமன்ற நீதிபதி **ஆர். மகாதேவன்:** அன்றாட மனித வாழ்வில் சட்டமும், நீதியும் பின்னிப் பிணைந்துள்ளன. உலகில் மிகச் சிறந்த கல்வியாகக் கருதப்படும் சட்டக் கல்வியைத் தேர்வு செய்து பயிலும் மாணவர்கள், வெறும் படிப்பாகக் கருதாமல் துறை சார்ந்த அறிவாற்றலைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்வது மூலம் உயர் நிலையைப் பெற முடியும்.

வழக்கின் தன்மையை நன்கு புரிந்துகொண்டு சிறப்பாக எடுத்துரைக்கும் திறமையை வளர்த்துக் கொள்வது மூலம் வெற்றிகரமான வழக்குரைஞராக திகழ முடியும் என்றார்.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா பேசுகையில், வழக்குரைஞர் தொழிலை பணம் சம்பாதிக்கும் தொழிலாகக் கருதாமல் சமூகத்துக்கு சேவை செய்யும் தொழிலாகக் கருத வேண்டும் என்றார்.

இதில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.நிர்மல் குமார், ஜி.கே.இளந்திரையன், டி.பரத சக்கரவர்த்தி, ஆர்.கலைமணி, வேல்ஸ் உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவன வேந்தர் ஐசரி கே.கணேஷ், துணைத் தலைவர் ப்ரீத்தா கணேஷ், சட்டக் கல்லூரி முதல்வர் எஸ்.அம்பிகா குமாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பிளவுபடுத்தும் சக்திகளுக்கு மாணவர்கள் இடம் தரக் கூடாது: ஆளுநர் ஆர்.என்.ரவி

**சென்னை, செப். 20:** நாட்டில் பிளவுபடுத்தும்சக்திகளுக்குமாணவர்கள் இடம் தரக்கூடாது என்று ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுறுத்தினார்.

சென்னை ஐஐடி வளாகத்தில் திங்க் அமைப்பு சார்பில் நடைபெற்ற பாரதத்துக்காக புதுமைகளை உருவாக்குங்கள், உலகை வழி நடத்துங்கள் என்ற தலைப்பிலான இரு நாள் மாநாட்டை சனிக்கிழமை தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

இளம் தலைமுறையின் வலிமை, எதிர்கால நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. சுதந்திரத்துக்குப் பிறகு, நமது பாடத் திட்டங்களில் பாரதத்தின் உண்மையான சிந்தனைகள் புறக்கணிக்கப்பட்டன. காலனித்துவ சிந்தனையால் கல்வி பாதிக்கப்பட்டது. 5,000 ஆண்டுகள் பழைமையான நமது பாரத நாடு ஆன்மிகம், கலாசாரம், வேத சிந்தனை, தர்மம் என்ற அடிப்படையில் உருவானது. அனைவரும் ஒரே குடும்பம் என்பதை வலியுறுத்துகிறது.

சுதந்திர இந்தியாவில் மொழி, ஜாதி, இனம், மதம் போன்றவற்றால் பிரிவினையை ஏற்படுத்தினர். அமைதியாக இருந்த வடகிழக்கு



சென்னை ஐஐடி–யில் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி.

மாநிலங்களில், சுதந்திரம் பெற்ற 10 ஆண்டுகளில் வன்முறை உருவானது. மொழி, இனப் பிரச்னைகள் உருவாகின. ஜம்மு காஷ்மீரில் பிரச்னைகள் நீடிக்கின்றன.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு உருவான பிறகு, நாட்டில் வன்முறை குறைந்துள்ளது. ஆபரேஷன் சிந்தூர் போன்ற நடவடிக்கைகளை இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்களால் செய்திருக்க முடியாது. இந்தியாவில் பிளவுகள் ஏற்படாமல் இருக்க மாணவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல பயன்களைத் தருகிறது. இதுபோன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, இந்தியா முன்னேற வேண்டும் என்றார்.

விழாவில், சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி பேசுகையில், இந்தியாவில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை 28 சதவீதமாக உள்ளது. இதை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பதை தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. ஐஐடியில் படித்து முடிக்கும் மாணவர்கள்,கிராமங்களைத் தத்தெடுத்து, உயர்கல்விக்கு வருவோரின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் திங்க் இந்தியா அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அகன்ஷா வரதே, ஏ.பி.வி.பி.தேசிய ஒருங்கிணைப்பு செயலர் ஆஷிஷ் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஸ்டேட் வங்கி, கிரெடாய் சார்பில் 2 நாள்கள் வீட்டுக்கடன், சொத்துக் கண்காட்சி


நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் பாரத ஸ்டேட் வங்கி சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற வீட்டுக்கடன் கண்காட்சியில் பங்கேற்றோர்.

**சென்னை, செப். 20:** ஸ்டேட் வங்கியின் வீட்டுக் கடன்கள் வழங்கும் பிரிவு, சென்னை கிரெடாய் அமைப்பு இணைந்து நடத்தும் 2 நாள்கள் வீட்டுக்கடன் மற்றும் சொத்துக் கண்காட்சி சனிக்கிழமை தொடங்கியது.

'எஸ்பிஐ-நம்ம ட்ரீம் ஹோம் எக்ஸ்போ 4.0' என்ற பெயரில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் இந்த கண்காட்சியை ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத் தலைவருமான ஷிவ் தாஸ் மீனா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

ஸ்டேட் வங்கியின் துணைப் பொது மேலாளர் பெனுதர் பர்ஹி தலைமை வகித்தார். துணைப் பொது மேலாளர்கள் பிரசாத் எல். கே.எம்.வி.நோரி, ரோஹித் கமல் ஷாஹா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சவுத் இந்தியா ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநரும், சென்னை கிரெடாய் அமைப்பின் தலைவருமான ஏ.முகமது அலி, சபரி பவுண்டேஷன்ஸ் நிறுவனத் தலைவரும், தேசிய கிரெடாய் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினருமான ந.ஸ்ரீதரன், சென்னை கிரெடாய் அமைப்பின் உடனடி முன்னாள் தலைவர் எஸ்.சிவகுருநாதன் ஆகியோர் பேசினர்.

**52 அரங்குகள் அமைப்பு:** கண்காட்சியில் வீட்டுக்கடன்கள் வழங்கும் ஸ்டேட் வங்கி நிர்வாகம், அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகள் மற்றும் தனிவீடுகள் விற்பனை செய்யும் நிறுவனங்கள், ஸ்டேட் வங்கியின் லைப் இன்சூரன்ஸ், ஸ்டேட் வங்கியின் கிரெடிட் கார்டு வழங்கும் பிரிவு என பல்வேறு நிறுவனங்கள் சார்பில் மொத்தம் 52 அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. கண்காட்சி 2-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை (செப். 21) காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது.

# கடையின் பூட்டை உடைத்து திருட்டு

**சென்னை, செப். 20:** சென்னை அண்ணா நகரில் கடையின் பூட்டை உடைத்து பணம் திருடப்பட்டது குறித்து போலீஸார் விசாரணை நடத்தினர்.

கோடம்பாக்கம் ரயில்வே சாலைப் பகுதியைச் சேர்ந்தவர் பக்கீர் முகமது (40). அண்ணா நகர் 13-ஆவது பிரதான சாலையில் ஸ்டேஷனரி கடை வைத்து நடத்தி வருகிறார். வெள்ளிக்கிழமை காலை கடையைத் திறக்க வந்தபோது, கடை கதவின் பூட்டை உடைத்து, உள்ளே பெட்டியில் இருந்த ரூ.50,000 திருடப்பட்டிருப்பது தெரிய வந்தது.

இதுகுறித்து திருமங்கலம் காவல் நிலையத்தில் பக்கீர் முகமது புகார் செய்தார். அதன்பேரில், போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமியின் புதிய வளாகம் திறப்பு விழா:** முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி தலைமை நிர்வாக அதிகாரி சத்யஸ்ரீ பூமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்பு, கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி வளாகம், 6-ஆவது அவென்யூ, பி. பிளாக், அண்ணா நகர், மாலை 5.

**பாரதத்துக்காக புதுமைகளை உருவாக்குங்கள்-உலகை வழி நடத்துங்கள் தலைப்பில் மாநாடு:** மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், ஜோஹோ நிறுவனர் மற்றும் தலைமை விஞ்ஞானி ஸ்ரீதர் வேம்பு, துக்ளக் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி, ராம்கோ குரூப் நிறுவனர் மற்றும் தலைவர் பி.ஆர்.வெங்கட்ராம ராஜா, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், சின்மயா மிஷன் ஆன்மிக வழிகாட்டி சுவாமி மித்ரானந்தா, ஆர்ய வைத்ய பார்மசி நிர்வாக இயக்குநர் சி.தேவிதாஸ் வாரியர், சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, ஏ.பி.வி.பி. தேசிய ஒருங்கிணைப்பு செயலர் ஆஷிஷ் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்பு, சென்னை ஐஐடி, கிண்டி, காலை 10.30.

**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்-கலைஞர்கள் சங்கம் சார்பில் கவிஞர் தமிழ்ஒளியின் 102-ஆவது பிறந்த நாள், திருவல்லிக்கேணி-சேப்பாக்கம் கிளை மாநாடு:** எழுத்தாளர் உதயை மு.வீரையன், கவிஞர் நா.வீரபெருமாள், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க திருவல்லிக்கேணி-சேப்பாக்கம் கிளைத் தலைவர் ச.சாஹிர் உசேன், மத்திய சென்னை மாவட்டத் தலைவர் அ.ப.அருண் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்பு, தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழக அலுவலகக் கட்டடம், சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, காலை 9.45.

**உலகத் திருக்குறள் பேரவையின் மூன்றாம் ஞாயிறு கூட்டம்:** மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத் துணை இயக்குநர் ந.சி. கலைவாணி, கவிஞர் இரா.கருணாநிதி, உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் புதுகை வெற்றிவேலன் உள்ளிட்டோர் பங்கேற்பு, வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப் பள்ளி, தாம்பரம், மாலை 5.

**பாரதி, பாரதிதாசன் கவிதை அமைப்பு-கவியரசர் கண்ணதாசன் விழா:** சொற்பொழிவாளர் சரஸ்வதி ராமநாதன், காந்தி கண்ணதாசன், ஓவியக் கவிஞர் மலர்மகன், கவிஞர் தமிழ் அமுதன், சோவியத் தூதரக முன்னாள் அதிகாரி யு.எஸ்.எஸ். ஆர்.நடராஜன் உள்ளிட்டோர் பங்கேற்பு, வியாபாரிகள் சங்க திருமண மண்டபம், மூவரசம்பேட்டை, மடிப்பாக்கம், காலை 9.30.

**சீவக சிந்தாமணி தொடர் சொற்பொழிவு:** முனைவர் ப.ஜீவகன் பங்கேற்பு, திகம்பர ஜினாலயம், கொளத்தூர், பிற்பகல் 2.30.

வீணா மஹோத்சவம் 2025: 108 வீணை கலைஞர்களின் நாதாஞ்சலி, நாரத கான சபா, டி.டி.கே.சாலை, மாலை 6.30.

**திருவல்லிக்கேணி கல்சுரல் அகாதெமி-கஸ்தூரி சீனிவாசன் நூலகம் சார்பில் இசை நிகழ்ச்சி:** ராகசுதா அரங்கம், லஸ், மயிலாப்பூர், மாலை 6.

# வெளிநாட்டு கல்வி, வேலைவாய்ப்பு ஆவணங்கள் சான்றளிப்புக்கு இ–சனத் இணைய தளம்

## வெளியுறவுத் துறை அதிகாரி தகவல்

**சென்னை, செப். 20:** வெளிநாட்டு தூதரகங்கள் அல்லது வெளிநாடுகளில் இந்திய குடிமக்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை சரிபார்த்து எண்ம முறையில் சான்றளிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் இ-சனத் இணையம் தொடங்கியுள்ளது என்று மத்திய வெளியுறவுத் துறையின் சென்னை செயலகத் தலைவர் எஸ்.விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வெளிநாடுகளில் படிக்கச் செல்லும் மாணவர்கள், வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளவர்களுக்கு அவர்களது கல்வி மற்றும் தனிப்பட்ட விவர ஆவணங்கள், சான்றிதழ்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல் அல்லது அப்போஸ்டில் சான்றளிப்புகள் வழங்கப்படுகின்றன. இதற்காக முன்பு குடிமக்கள் தில்லி செல்ல வேண்டிய சூழல் இருந்தது. தற்போது சென்னையிலே இவற்றை பெறுவதுடன், இந்த ஆவணங்களை எண்ம முறையில் சமர்ப்பிப்பதற்கும் சரிபார்ப்பதற்கும் இ-சனத் இணையத்தை வெளியுறவு அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை கிளை அலுவலகத்துக்கு உள்பட்ட தமிழகம், புதுச்சேரி, அந்தமான் நிகோபரை சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை இ-சனத் ( https://esanad.nic.in/register ) தளத்தில் பதிவு செய்யலாம். விண்ணப்பதாரர்கள் ஸ்கேன் செய்யப்பட்ட தங்கள் ஆவணங்களை நேரடியாக பதிவேற்றலாம். பின்னர், இந்த ஆவணங்கள் அந்தந்த வழங்கல் அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டு 7 வேலை நாள்களுக்குள் எண்ம சான்றளிப்பு அல்லது அப்போஸ்டில் வெளியிடப்படும். ஒப்புதல் அளிக்கப்பட்ட சான்றிதழ்களை வெளிநாட்டு துறைகளும் அதிகாரிகளும் சரி பார்த்துக் கொள்ள முடியும். மேலும் 'இ-சனத்' தளத்துக்கு வெளியே சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு கிளைச் செயலகத்துக்கு அனுப்பும் செயல்முறைக்காக ஐந்து நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இ-சனத் தளம் தொடங்கப்பட்டு இதுவரை 200 பேர் பயனடைந்துள்ளனர். மறு சான்றளிப்பு தேவையில்லாத அப்போஸ்டில் செய்யப்பட்ட ஆவணங்கள் 114 ஹேக் மாநாட்டு நாடுகளால் அங்கீகரிக்கப்படுகின்றன. அந்த நாடுகளின் பட்டியலை விண்ணப்பதாரர்கள் இணையத்தில் அறிந்து கொள்ளலாம்.

அப்போஸ்டில் என்பது ஹேக் உடன்படிக்கை நாடுகளில் ஒரு நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆவணம் மற்றொரு நாட்டில் செல்லுபடியாகும் என்பதாகும் என்றார் அவர்.

# மொபெட் மீது மாநகரப் பேருந்து மோதல்: இளம்பெண் உயிரிழப்பு

**சென்னை, செப். 20:** சென்னை அடையாறில் மொபெட் மீது மாநகர பேருந்து மோதிய விபத்தில் இளம்பெண் உயிரிழந்தார்.

அடையாறு கஸ்தூரிபாய் நகர், கால்வாய் கரைச் சாலை பகுதியைச் சேர்ந்தவர் நேகா சேவியர் (28). இவர், சென்னை மயிலாப்பூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வந்தார். நேகா, தனது மொபெட்டில் அடையாறு சர்தார் பட்டேல் சாலை வழியாக சனிக்கிழமை சென்று கொண்டிருந்தார்.

அடையாறு மேம்பாலம் இணைப்புச் சாலையில் சென்றபோது, பின்னால் வந்த மாநகர பேருந்து மோதியது. இதில், பலத்த காயமடைந்த நேகா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த அடையாறு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் அங்கு சென்று அவரது சடலத்தை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து, மாநகர பேருந்து ஓட்டுநர் வேளச்சேரியை சேர்ந்த அண்ணாதுரையை (54) போலீஸார் கைது செய்தனர்.

# நீதிபதி வீட்டில் நகை திருட்டு: இளைஞர் கைது

**சென்னை, செப். 20:** சென்னை அண்ணா நகரில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி வீட்டில் நகைகள் திருடப்பட்ட வழக்கில் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

பூந்தமல்லி பகுதியைச் சேர்ந்தவர் விவேகானந்தன். இவரது தந்தை ஞானபிரகாசம், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி. இவர்களுக்கு அண்ணா நகர், சாந்தி காலனி, 8-ஆவது பிரதான சாலையில் வீடு உள்ளது. பூந்தமல்லியில் வசிக்கும் விவேகானந்தன் குடும்பத்தினர், அவ்வபோது இந்த வீட்டுக்கு வந்து செல்வது வழக்கம். அதன்படி, கடந்த 17-ஆம் தேதி விவேகானந்தன் அண்ணா நகர் வீட்டுக்கு வந்தார். அப்போது, வீட்டின் இரும்பு கேட்டு உடைக்கப்பட்டு, பீரோவில் இருந்த 13 பவுன் தங்க நகை, பூஜை அறையில் இருந்த ஒன்றரை உயரமுள்ள ஐம்பொன் நடராஜர் சிலை, பித்தளை விளக்குகள் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து விவேகானந்தன் அளித்த புகாரின்பேரில் அண்ணாநகர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

மேலும் அந்தப் பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில், திருட்டில் ஈடுபட்டது அமைந்தகரை பாரதிபுரத்தைச் சேர்ந்த லிங்கம் என்ற கணேஷ் (37) என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த கணேஷை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர். அவரிடமிருந்து ஒன்றரை அடி நீளமுள்ள நடராஜர் ஐம்பொன் சிலை, 30 கிலோ எடை கொண்ட பித்தளை குத்து விளக்கு, வெள்ளி முலாம் பூசப்பட்ட மரக்கிளையுடன் கூடிய குருவி சிலை, பித்தளை முலாம் பூசப்பட்ட 2 குவளைகள் ஆகியவை மீட்கப்பட்டன. விசாரணையில் லிங்கம் மீது ஏற்கெனவே சென்னை மற்றும் புறநகர் காவல் நிலையங்களில் 25 திருட்டு வழக்குகள் இருப்பது தெரியவந்தது.

# 'கண் தொடர்பான நோய்களை விரைந்து கண்டறிய பயிற்சி தேவை'

**சென்னை, செப். 20:** கண் தொடர்பான நோய்கள் அதிகரித்து வரும் நிலையில், நுட்பமான சிகிச்சைகளின் மூலம் அவற்றை உடனடியாக கண்டறிய அனைத்து கண் மருத்துவர்களுக்கும் சிறப்பு பயிற்சி வழங்க வேண்டும் என டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகள் குழுமத்தின் முதன்மை மருத்துவ அதிகாரி மருத்துவர் அஸ்வின் அகர்வால் தெரிவித்தார்.

டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை சார்பில் 18-ஆவது கல்பவிருக்ஷா தேசிய கண் மருத்துவ கருத்தரங்கின் தொடக்க விழா சென்னையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், சட்டப்பேரவை உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகள் குழுமத்தின் முதன்மை மருத்துவ அதிகாரி மருத்துவர் அஸ்வின் அகர்வால் கூறியதாவது:

கண் தொடர்பான நோய்கள் அதிகரித்து வரும் நிலையில், நுட்பமான சிகிச்சைகளின் மூலம் அவற்றை உடனடியாகக் கண்டறிய சிறப்புப் பயிற்சி வழங்க வேண்டும். அகர்வால்ஸ் மருத்துவமனையில் கடந்த ஆண்டு மட்டும் 1,200 விழி வெண்படல மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அதிக அளவில் விழி வெண்படல மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யும் மருத்துவமனைகளில் அகர்வால்ஸ் மருத்துவமனையும் ஒன்றாகும். கண் பார்வைப் பிரச்னை உள்ளவர்களில் 5 முதல் 10 சதவீத பேருக்கு விழி வெண்படல அறுவை சிகிச்சைக்கு பதிலாக 'பின்ஹோல் பியூபிலோ பிளாஸ்டி' அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை மேலும் உயர வேண்டும். இது எளிதான ஒன்று அல்ல. எனினும், கண் மருத்துவர்கள் மாற்று அறுவை சிகிச்சைக்கு பதிலாக பின்ஹோல் அறுவை சிகிச்சைக்கு முன்வர வேண்டும் என்றார் அவர்.



டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை சார்பில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற 18–ஆவது கல்பவிருக்ஷா தேசிய கண் மருத்துவ கருத்தரங்கில், மருத்துவர் சிகா பின்ஸ், சிறந்த விளக்க உரை சமர்ப்பித்ததற்காக மருத்துவர் எஸ்.சாரா ஆகியோருக்கு விருது வழங்கிய எம்எல்ஏ மருத்துவர் எழிலன் நாகநாதன். உடன், டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகள் குழுமத்தின் முதன்மை மருத்துவ அதிகாரி மருத்துவர் அஸ்வின் அகர்வால் உள்ளிட்டோர்.

இந்தக் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில், அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் துறை தலைவர் மருத்துவர் எஸ்.செளந்தரி, அமைப்புக் குழு செயலர்கள் மருத்துவர் திவ்யா அசோக் குமார், மருத்துவர் ப்ரீத்தி நவீன் மற்றும் 300-க்கும் மேற்பட்ட முதுநிலை கண் மருத்துவ மாணவர்கள் கலந்துகொண்டனர்.





**மாரத்தான்...**



சென்னை பெசன்ட் நகரில் உள்ள ஓல்காட் பள்ளி சாலையில் சனிக்கிழமை நடைபெற்ற 'ரன் 4 ஃபிட் பாரத்' விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த ஆளுநர் ஆர்.என்.ரவி.

# சென்னையில் ரூ.14 கோடியில் 15 வாகன சுரங்கப் பாதைகள் சீரமைப்பு

சென்னை, செப். 20: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகனங்கள் செல்லும் சுரங்கப் பாதைகளை ரூ.14.57 கோடியில் சீரமைக்கும் பணிகள் நடைபெறுவதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கால்வாய், ஆறுகள் இடையே 152 பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, 19 இடங்களில் பெட்டக வடிவ பாலங்களும், 23 சிறுபாலங்களும், 14 ரயில்வே மேம்பாலங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ரயில்வே சுரங்கப் பாதைகள் 19, பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதைகள் 5, தரைப் பாலங்கள் 2, நடைபாலங்கள் 39, நடைமேம்பாலங்கள் 5, மேம்பாலங்கள் 14 மற்றும் ஆகாய நடை மேம்பாலம் 1 என மொத்தம் 293 பாலங்கள் உள்ளன. 19 வாகன சுரங்கப் பாதைகள் மாநகராட்சி சார்பிலும், 5 சுரங்கப் பாதைகள் நெடுஞ்சாலைத் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



நுங்கம்பாக்கம் வாகன சுரங்கப் பாதையில் மழைநீரை வெளியேற்ற அதிக திறன் கொண்ட மோட்டார்களை இயக்குவதற்கு பொருத்தப்படும் ஜெனரேட்டர்.

மாநகராட்சி சுரங்கப் பாதைகளில் 15 இடங்களில் நீர் கசியாத வகையிலும், மழைக் காலத்தில் தேங்கும் தண்ணீரை அகற்றுவதற்காக டீசல் மோட்டார்கள், மின் மோட்டார்கள் அமைத்தும், மின்சாரமில்லாத நேரங்களில் மின்மோட்டாரை இயக்க ஜெனரேட்டர் அமைத்தும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னையின் ரங்கராஜபுரம், மேட்லி, எம்.சி.சாலை, ஜோன்ஸ் சாலை, பவளவண்ணன் சாலை, பஜார் சாலை, வில்லிவாக்கம், கெங்குரெட்டி, மாணிக்கம், ஆர்.பி.ஐ., வியாசர்பாடி உள்ளிட்ட 17 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்கினால் போக்குவரத்தை தானியங்கியாகவே தடுக்கும் அமைப்புகள் பொருத்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கினால், அந்த சுரங்கப்பாதைகளில் உரிய முறையில் அறிவிப்பு வெளியிடும் வசதியும், மழைநீர் குறைந்தால் போக்குவரத்தை அனுமதிக்கும் தானியங்கி சாதன வசதிகளும் உள்ளன.

சுரங்கப்பாதைகளை மாநகராட்சி மழைக்கால கட்டுப்பாட்டு அறைகளில் இருந்து கண்காணிக்கும் வசதியும் உள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

# கிண்டி ரேஸ் கிளப் இடத்துக்கு மாறுகிறது சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

சென்னை, செப். 20: சென்னை கிண்டியில் ரேஸ் கிளப் செயல்பட்டு வந்த இடத்துக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மாற்றப்பட உள்ளது. இதற்கான உத்தரவை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா பிறப்பித்துள்ளார்.

**உத்தரவு விவரம்:** சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைந்துள்ள நிலத்தில் புதிய பல அடுக்கு நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட உள்ளது. எனவே, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைப் பிற மாவட்டங்களில் இருப்பதைப் போன்று, ஆட்சியர் முகாம் அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலர் முகாம் அலுவலகம் என அனைத்து வசதிகளுடன் கூடியதாக மாற்றுவது இன்றியமையாததாகும்.

இதைக் கருத்தில் கொண்டு, சென்னை கிண்டியில் உள்ள வெங்கடாபுரம் கிராமத்தில் காலியாக உள்ள 1.43 ஹெக்டேர் பரப்பிலான புறம்போக்கு நிலத்தில் ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட உள்ளது.

நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் ஒரு சதுர மீட்டருக்கான மதிப்பு ரூ.68,515 ஆகும்.

இது தொடர்பாக, வருவாய் ஆவணங்களில் உரிய திருத்தங்களை ஒரு மாத காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டும் என்று நில நிர்வாக ஆணையரும், சென்னை மாவட்ட ஆட்சியரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தனது உத்தரவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா தெரிவித்துள்ளார்.

**ரேஸ் கிளப்:** கிண்டி வெங்கடாபுரம் கிராமத்தில் செயல்பட்டு வந்த ரேஸ் கிளப் கட்டுமானங்கள் இடிக்கப்பட்டன. அரசுப் புறம்போக்கு காலி நிலமாக உள்ள பகுதியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை கட்டுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

# சென்ட்ரல் மெட்ரோவில் மீட்கப்பட்ட பொருள்கள் பாதுகாப்பு அலுவலகம் திறப்பு

சென்னை, செப். 20: சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் மீட்கப்பட்ட பொருள்கள் பாதுகாப்பு அலுவலகம் சனிக்கிழமை திறக்கப்பட்டது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

சென்னை மெட்ரோவில் பயணிப்போர் தங்களது பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என மெட்ரோ நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. பொருள்களை தவறவிட்டால் மெட்ரோ நிர்வாகம் பொறுப்பேற்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், மெட்ரோவில் பயணிப்போர் ஏதேனும் பொருள்களைத் தவறவிட்டு மீட்கப்பட்டால், அவை தொடர்புடைய நிலையம் மூலமாகவோ அல்லது இழந்த மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பொருள்கள் அலுவலகம் மூலமாகவோ சம்பந்தப்பட்டோர் பெறமுடியும்.

சென்னை சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் முதல்முறையாக இழந்த மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பொருள்கள் அலுவலகத்தை நிறுவன இயக்குநர் மனோஜ் கோயல் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் நிறுவன ஆலோசகர் கோபிநாத் மல்லையா, பராமரிப்பு பொது மேலாளர் எஸ்.சதீஷ்பாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில்வே பாதுகாப்பு படை நாள்: மரக்கன்றுகள் நடுதல், பேரணி

சென்னை, செப். 20: ரயில்வே பாதுகாப்புப் படை நாளையொட்டி சென்னையில் சென்ட்ரல் மற்றும் எழும்பூர் ரயில் நிலையங்களில் மரக்கன்றுகள் நடுதல், விழிப்புணர்வு பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

ரயில்வே பாதுகாப்புப் படை செப். 20-ஆம் தேதி தொடங்கப்பட்டது. இதை நினைவுகூரும் வகையிலும், ரயில்வே பாதுகாப்புப் படையினரின் பணியைப் போற்றும் வகையிலும் ரயில்வே பாதுகாப்பு படை தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதையொட்டி, சென்னை சென்ட்ரல் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்பு படை அலுவலக வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, அதன் ஆய்வாளர் மதுசூதனரெட்டி தலைமை வகித்தார். அவரது தலைமையில் ரயில்வே பாதுகாப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இதையடுத்து மரக்கன்றுகள் நடப்பட்டன.

எழும்பூர் ரயில்நிலையத்தில் ஆய்வாளர் கே.பி.ஜெபாஸ்டியன் தலைமையில் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியும், பயணிகளுக்கு தண்ணீர், குளிர்பானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

சென்னையில் உள்ள அனைத்து ரயில்வே நிலையங்களிலும் ரயில்வே பாதுகாப்புப் படைப் பிரிவினர் சார்பில் விழிப்புணர்வு பேரணி, ரத்த தானம் நடைபெற்றதாக பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 70 புதிய துணை மின் நிலையங்கள்: ஒப்பந்தம் கோரியது மின் வாரியம்

சென்னை, செப். 20: தமிழகம் முழுவதும் 33 கிலோவோல்ட் மின்சாரம் கையாளும் திறன் கொண்ட 70 துணை மின் நிலையங்கள் அமைக்க மின் வாரியம் ஒப்பந்தம் கோரியுள்ளது.

தமிழகம் முழுவதும் சீரான மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதன்படி, 33 கிலோவோல்ட் மின்சாரம் கையாளும் திறன் கொண்ட 133 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க மின் வாரியம் திட்டமிட்டு அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

அதன் முதல்கட்டமாக 70 துணை மின்நிலையங்கள் அமைப்பதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

இது குறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியது: துணை மின் நிலையங்கள் அமையவுள்ள சூழல், இட அமைப்புக்கு ஏற்ப 133 புதிய துணை மின் நிலையங்களும் 'இன்டோர்' மற்றும் 'அவுட்டோர்' என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு அவுட்டோர் துணை மின் நிலையம் அமைக்க சுமார் ரூ.7 கோடியும், இன்டோர் துணை மின் நிலையம் அமைக்க ரூ.15 முதல் ரூ.20 கோடி வரை ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இதற்கான ஒப்பந்தத்தை மின் வாரியம் கோரியுள்ளது.

ஒப்பந்தப்புள்ளியில் நிறுவனம் தேர்வு செய்யப்படும்பட்சத்தில் அதற்கான பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டு விரைவில் பணிகளை முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதமுள்ள 63 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்படும் என்றனர்.


**BRANCH SHIFTING**

மதிப்பு மிக்க எமது வாடிக்கையாளர்களின் சிறப்பான வசதிக்காக, எங்களது **CHENNAI - NEW PERUNGALATHUR** கிளையானது **20.12.2025** முதல் கீழே தரப்பட்டுள்ள புதிய முகவரியிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

**Muthoot Finance Ltd**
Ground Floor, Door No.44/20,
Kalaigner High Road, New Perungalathur,
Chennai, Chengalpattu District,
Tamil Nadu State, Pin - 600063.
Phone No - 04422743818,
09188902207, 09567889436.
Email id : mgper2603@muthootgroup.com

ஏதேனும் குறைகள் இருப்பின் 0484 4804074 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்

உங்களது ஆதரவையும் உதவியினையும் நாங்கள் தொடர்ந்து வரவேற்கிறோம்.

Muthoot Finance
A Muthoot M George Enterprise


## பொது அறிவிப்பு

**NEW INDIA ASSURANCE**
दि न्यू इन्डिया एश्योरन्स कंपनी लिमिटेड
The New India Assurance Co. Ltd

**தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**
**CIN No. L66000MH1919GOI000526**

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் கீழ்க்கண்ட **சிறு வணிக அலுவலகங்கள், 31 அக்டோபர் 2025** முதல் மூடப்படும் என்பதை காப்பீட்டுதாரர்கள், முகவர்கள் மற்றும்பிற தொடர்புடையவர்கள் அனைவரும் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது:

1) **பெரம்பூர் சிறு வணிக அலுவலகம் (710906)** 314, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரம்பூர், சென்னை – 600 011 மூடப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தொடர் சேவைகளுக்கு அணுக வேண்டிய முகவரி: **கோயம்பேடு நடுத்தர வணிக அலுவலகம் (710200) பிளாட் எண் 10 & 11, முதல் மாடி, ஜவஹர்லால் நேரு சாலை, ரத்தினபுரி, கோயம்பேடு, சென்னை – 600 107. தொடர்புக்கு: திரு. K.S. கிருஷ்ணகுமார், வணிக மேலாளர் – 9787120904**

2) **உத்திரமேரூர் சிறு வணிக அலுவலகம் (712014)** எண்.66, எஸ்.பி.கோயில் தெரு, பேருந்து நிலையம் அருகில், உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம் – 603406 மூடப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தொடர் சேவைகளுக்கு அணுக வேண்டிய முகவரி: **காஞ்சிபுரம் நடுத்தர வணிக அலுவலகம் (712000) எண்.15, நெல்லுக்காரா தெரு, காஞ்சிபுரம்– 631 501. தொடர்புக்கு: திரு. D. அபிஷேக், மூத்த வணிக மேலாளர் – 9933234101.**

3) **ஊத்துக்கோட்டை சிறு வணிக அலுவலகம் (712009)** 44/1, நாகலாபுரம் ரோடு, ஊத்துக்கோட்டை - 602026 மூடப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தொடர் சேவைகளுக்கு அணுக வேண்டிய முகவரி: **திருவள்ளூர் நடுத்தர வணிக அலுவலகம் (712005) MRN டவர்ஸ், முதல் மாடி, எண்.166, J.N. ரோடு (தலைமை தபால் அலுவலகம் எதிரில்), திருவள்ளூர் – 602 001. தொடர்புக்கு: திரு. K. ரகுபதி, வணிக மேலாளர் – 9444936054**

4) **ராமாபுரம் சிறு வணிக அலுவலகம் (713302)** எண்.4/323, வள்ளுவர் சாலை, ராமாபுரம், சென்னை – 600 089 மூடப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தொடர் சேவைகளுக்கு அணுக வேண்டிய முகவரி: **போரூர் நடுத்தர வணிக அலுவலகம் (713300) சுபம் ஸ்கொயர், F F 3 A, எண்.41/9, முதல் மாடி, முதல் மெயின் ரோடு, முதல் தெரு, காரம்பாக்கம், போரூர், சென்னை-600116. தொடர்புக்கு:திருமதி. J.சந்திராகௌரி, தலைமை வணிக மேலாளர் – 9884207440**

மண்டல மேலாளர், சென்னை மண்டல அலுவலகம்

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

சோழிங்கநல்லூர் பால் பண்ணை, சென்னை - 600 119

கீழ்க்கண்ட வேலை / கொள்முதல் செய்ய புகழ் பெற்ற நிறுவனங்களிடமிருந்து இரண்டு பகுதி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர்/ கொள்முதல் | முன்வைப்பு தொகை விபரம் |
|---|---|---|
| 1 | சென்னை 600 119 சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் ஒப்பந்த அடிப்படையில் தினமும் 3 முறைப்பணிகளில் தயாரிக்கப்படும் சுமார் 5.50 லட்சம் லிட்டர் பாலை, 1/2 லிட்டர் பால் பாக்கட்டுகளை பரிசோதித்தல், அவைகளை பால் டப்புகளில் அடுக்கி குளிரூட்டும் அறைக்கு கொண்டு சென்று வரிசையாக அடுக்குதல், பின்னர் லோடு ஏற்றும் தளத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் பணி மேற்கொண்ட இடத்தை சுத்தம் செய்தல், உள்ளிட்ட பணிகளை தினமும் 3 முறைப்பணிகளில் 50 நபர்களுக்கு குறையாமல் வேலையாட்களைக் கொண்டு செய்து முடிக்க. | ரூ.8,00,000/- |
| 2 | பால் பொருட்கள் பண்ணை, அம்பத்தூருக்கு ஒரு வருட தேவையை பூர்த்தி செய்ய I) முந்திரி பருப்பு தரம் W-320 -27,000 கிலோ கிராம் மற்றும் II) முந்திரி பருப்பு தரம் S(W 320)-3,500 கிலோ கிராம் பாதி பிரிப்பு - கொள்முதல் செய்தல் | ரூ.2,00,000/- |
| 3 | ஆவின் பால் மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை அம்மாபாளையம், திருவண்ணாமலையில் ஒரு வருட காலத்திற்கு (2025-2026) பால் பவுடர் மற்றும் வெண்ணெய் உற்பத்தி பொருட்களை நிரப்புதல் மற்றும் அடுக்குதல் பணி செய்ய | ரூ.61,000/- |

ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை "https:/www.tntenders.gov.in" என்ற இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை ஆன்லைன் மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும். முன் தகுதி விதிமுறைகள், தொழில்நுட்ப விவரக்குறிப்புகள், செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை விபரம், உள்ளிட்டவைகளை www.tntenders.gov.in மற்றும் "http://www.aavinmilk.com/" என்ற இணையதளங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து தெரிந்துகொள்ளலாம்.

| வ. எண் | டெண்டர் ஆவணம் பதிவிறக்கம் மற்றும் மின் சமர்ப்பிப்பதற்கான போர்ட்டலில் அனுமதிக்கப்பட்ட நாட்கள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படுமுன், ஒப்பந்ததாரர்களுடன் நடத்தப்படும் கலந்தாய்வுக்கூட்ட நாள் மற்றும் நேரம் | நிறைவு செய்யப்பட்ட இரு பகுதி (Part-I Technical Bid) & (Part-II Financial Bid) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஆன்லைன் டெண்டர் சமர்ப்பிப்பு மூலம் பெறப்படுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | ஆன்லைன் டெண்டர் சமர்ப்பிப்பு மூலம் பெறப்பட்ட பகுதி தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 22.09.2025 முதல் 24.10.2025 வரை மாலை 3.00 மணி வரை | 06.10.2025 அன்று காலை 11.00 மணி | 27.10.2025 அன்று மாலை 3.00 மணி வரை | 28.10.2025 அன்று காலை 11.00 மணிக்கு |
| 2 | 22.09.2025 முதல் 13.10.2025 வரை மாலை 3.00 மணி வரை | 06.10.2025 அன்று காலை 11.30 மணி | 13.10.2025 அன்று மாலை 3.00 மணி வரை | 14.10.2025 அன்று பிற்பகல் 12.30 மணிக்கு |
| 3 | 22.09.2025 முதல் 15.10.2025 வரை மாலை 3.00 மணி வரை | 03.10.2025 அன்று காலை 11.00 மணி | 15.10.2025 அன்று மாலை 3.00 மணி வரை | 16.10.2025 அன்று காலை 11.00 மணிக்கு |

செமதொஇ/5263/ஒப்பந்தப்புள்ளி/2025

இணை நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

## நெடுஞ்சாலைத்துறை

தமிழ்நாடு அரசு

**திருவண்ணாமலை நெடுஞ்சாலை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.53/2025–2026/தவஅ/நாள்:17.09.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2025–26 மற்றும் திட்டம் சாரா பணிகள் 2025–26** கீழ் **வேலூர் மற்றும் திருப்பத்தூர் நெ), க(ம)ப,** கோட்டங்களைச் சார்ந்த பணிகளுக்கு **ஒரு உறை முறையில் (3 பணிகளுக்கு)** இணைய வழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.10.2025 அன்று 11.00 மணி வரை** வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, இணையவழி முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.09.2025 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/ மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/5238/ஒப்பந்தப்புள்ளி/2025

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருவண்ணாமலை**

## திருப்பெரும்புதூர் நகராட்சி

தமிழ்நாடு அரசு

ந.க.எண்.1697/2025/இ1 நாள்:12/09/2025

**நகராட்சி அலுவலகம், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.**

**மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**

நகராட்சி ஆணையாளர், திருப்பெரும்புதூர் நகராட்சி அவர்களால் 15வது நிதிக்குழு மான்யம்/ திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | பணியின் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | பணி முடிக்கும் காலம் | முன்வைப்பு தொகை 1% |
|---|---|---|---|---|---|
| 1. | வேலையின் பெயர்: Supply and delivery of Jetting cum special purpose super sucker vehicle mounted suction Machine with blow back, mounted on 16Ton GVW (BS VI) Chassis, 6000 Lit Tank capacity. Air flow 1500 cum/hr. | 1 | 72.50 | 180 நாட்கள் | 72500 |
| 2. | ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேரம் | 26.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி வரை | | | |
| 3. | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம் | 26.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி வரை | | | |
| 4. | ஒப்பந்தப்புள்ளி நமூனா பெறுதல் மற்றும் இதர விவரங்கள் தெரிந்து கொள்ளுதல். | இதர விவரங்கள் http//tntenders.in.gov.in என்ற வலைபதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். | | | |

தொடர்புக்கு:
தொலைபேசி எண்.044–27162440

செ.ம.தொ.இ/5270/ஒப்பந்தப்புள்ளி/2025

ஆணையாளர்,
திருப்பெரும்புதூர் நகராட்சி.

## NOTICE TO THE RESPONDENT TO SHOW CAUSE

**(SCR, Order XXII)**
**IN THE SUPREME COURT OF INDIA**
**CRIMINAL APPELLATE JURISDICTION**
**PETITION FOR SPECIAL LEAVE PETITION (CIVIL)**
**No. 6889 OF 2021**
**WITH**
**I.A. No. 84102/2025 - APPLICATION FOR SUBSTITUTED SERVICE**

THE TAMIL NADU HOUSING BOARD ....... Petitioner(s)/Appellant(s)

VERSUS

KOUNDATHAL AND OTHERS .....Respondent(s)

To.

1. **A. KUPPUSAMY S/O ARUKUTTY GOUNDER, NO. 67, VADAKKUTHOTHAM, VELLAIKINAR, THUDIYALORE VIZ., DISTRICT-COIMBATORE, TAMIL NADU**

**PID: 221525/2025 FOR R(2) IN SLP(C) NO.6889/2021 (SEC XII)**

Whereas the Petition for SPECIAL LEAVE PETITION (CIVIL) above-mentioned (Copy enclosed) filed in the Registry by **Ms. G. INDIRA,** advocate on-record, on behalf of the Petitioner(s) above named, was listed for hearing before the Court on **17th September, 2021** and the Court was pleased to pass the following order:-

**"Issue notice returnable within six weeks.**

**Until further orders, status quo, as on today, shall be maintained by the parties."**

AND WHEREAS, the service of show cause notice could not be effected on unserved Respondent No.2 and the matter above-mentioned was listed before **Hon'ble Court (In Chambers) on 28th August, 2025,** When the following order was passed:-

**"IA No. 250109/2024, IA No. 250106/2024, IA No. 250107/2024, AND IA No.84102/2025**

Delay in filling application for setting aside abatement is condoned. Abatement is set aside.

Delay in filling application for substitution in respect of deceased respondent nos.1 and 3 is condoned. Application for substitution is allowed.

Application seeking substituted service by way of newspaper publication in respect of the legal representatives (if any) of deceased respondent no.2 is allowed. Notice shall be published in two newspapers namely, The Hindu (English) and Dinamani (Tamil) circulated in the area concerned. The publication shall be effected in four weeks and learned counsel for the petitioner is directed to file proof of the same within two weeks thereafter."

NOW, THEREFORE, TAKE NOTICE that the above matter(s) will be posted for hearing before the Court in due course when you may appear before this Court either in person or through an advocate-on-record of this Court duly appointed by you in that behalf within thirty days from the date of service of notice. You may thereafter show cause to the Court on the day that may subsequently be specified as to why special leave and Interim relief, as prayed for, be not granted and the resultant appeal be not allowed.

You may file your affidavit in opposition to the petition as provided under Rule VI of Order XXII, SCR 2013, within thirty days from the date of receipt of notice or not later than two weeks before the date appointed for hearing, whichever be earlier, but shall do so only by setting out the grounds in opposition to the questions of law or grounds set out in the SPECIAL LEAVE PETITION (CIVIL) and may produce such pleadings and documents filed before the Court against whose order the SPECIAL LEAVE PETITION (CIVIL) is filed and shall also set out the grounds for not granting interim order or for vacating interim order if already granted.

TAKE FURTHER NOTICE that if you fail to enter appearance, as aforesaid, no further notice shall be given to you even after the grant of special leave for hearing of the resultant appeal and the matter above mentioned shall be disposed of in your absence.

**Dated : 15th September, 2025** DIPR / 1110 / DISPLAY / 2025 **ASSISTANT REGISTRAR**

## பாரத ஸ்டேட் வங்கி

SBI — **ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II**

எண்.44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729

தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. ஜித்தின் ஆன்டோ – மொபைல் : 9043563133

**அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)**

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.**

இந்த அறிவிப்பானது கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் **மெய்நிலை சுவாதீனத்தில்** எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் **சென்னை, பாரத ஸ்டேட் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II க்கு கடன்தாரரான திருமதி. சுஜாதை குப்புசாமி, க/பெ. திரு. நாகராஜ். B,** அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய **18.09.2025** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ.39,20,015.00 (ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து இருபது ஆயிரத்து பதினைந்து மட்டும்)** மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்களை, வசூலிப்பதற்காக, **"உள்ளது உள்ளவாறு", "உள்ள இடத்தில் உள்ளவாறு", மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **31.10.2025** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

**கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி:** திருமதி. சுஜாதை குப்புசாமி, க/பெ. திரு. நாகராஜ். B, **முகவரி.1)** J.54, கம்பர் தெரு, திருநகர், ஜாஃபர்கான்பேட்டை, சென்னை - 600083. **முகவரி.2)** A K Doors, எண்.3/2, சஞ்சய் காந்தி தெரு, MGR நகர், சென்னை – 600078. **முகவரி.3)** ஃப்ளாட் எண் - S1, 2வது தளம், பிளாக்-A, மனை எண்.29 & 52B, விசோகா அஸ்வினி ஃப்ளாட்ஸ், இந்திரா நகர், 5வது மேற்குத் தெரு, காட்டுப்பாக்கம், சென்னை - 600056

**சொத்துக்களின் விவரங்கள்**

**மூல ஆவணதாரர் பெயர்: திருமதி. N. K. சுஜாதை . 07.03.2017 தேதியிட்ட கட்டுமான ஒப்பந்த எண்.4043/2017 மற்றும் 31.03.2017 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.4044/2017 இன்படி திருமதி. N. K. சுஜாதை அவர்களின் பெயரில் உள்ள சொத்து. அட்டவணை A சொத்து** தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், காட்டுப்பாக்கம் கிராமத்தின் சர்வே எண்.100, பட்டா எண்.1786 இன்படி சர்வே எண்.100/26 இல் அடங்கிய இந்திரா நகர், 5வது மேற்குத் தெரு, மனை எண்.29 மற்றும் 52 ஆகியவற்றின் பரப்பளவு 4948சதுர அடி விஸ்தீரணங்கொண்ட காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: திரு. பழனி அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து, தெற்கில்: சர்வே எண்.98 இன் நிலம், கிழக்கில்: சாலை, மேற்கில்: சர்வே எண்.129பகுதி, நாற்புறங்கள்: கிழக்கு மேற்காக வட புறம்: 51அடி, கிழக்கு மேற்காக தென்புறம்: 54அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 100அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 88அடி 6அங்குலங்கள், அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 4948சதுர அடி விஸ்தீரணங்கொண்ட காலி நிலம். **அட்டவணை B சொத்து** அட்டவணை "A" சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 353சதுர அடி நிலம். இது பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் மற்றும் காட்டுப்பாக்கம் ஊராட்சி எல்லைகளுக்குட்பட்டு அமைந்துள்ள சொத்து. அட்டவணை C சொத்து பொதுப்பரப்பு உட்பட பிளாக் - "A", இரண்டாம் தளத்தில் பரப்பளவு 722சதுர அடி கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்.S-1.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 28,00,000/- | டேவணித்தொகை | ₹ 2,80,000/- | ஏல உயர்வுத்தொகை | ₹ 50,000/- |
|---|---|---|---|---|---|

**வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள்: ஏதுமில்லை.**

**மின் ஏலத் தேதி & நேரம் : 31.10.2025** காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (10 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

**சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 23.10.2025 நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 ணி வரை.**

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://baanknet.com** மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான **www.bank.sbi** என்ற இணைப்பில் காணலாம்.

இடம்: சென்னை, தேதி: 18.09.2025

அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II , சென்னை

## கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

**செங்குன்றம் கிளை**

Can Fin Homes Ltd (Sponsor : CANARA BANK) HOME LOANS • DEPOSITS

எண்.7,மாதவரம் நெடுஞ்சாலை, (GNT ரோடு அருகில்), லஷ்மி அம்மன் கோவில் அருகில், செங்குன்றம், சென்னை - 600 05 2. தொலைபேசி : 2632 2077, 7625079195.
CIN NO.L85110KA1987PLC008699
E Mail: redhills@canfinhomes.com

**கோரிக்கை அறிவிப்பு**

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச்சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் விதி 3 (1) -ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு (சட்டம் 54/2002)**

SARFAESI சட்டம் பிரிவு 13 (1), விதி 3 ன் கீழ் கீழே கையொப்பமிட்டவர் கேன்பின் ஹோம்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கின்றபடியால் மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13 (2)ன்கீழ் கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு (இனிமேல் கடன்தாரர்கள் என்று அழைக்கப்படுவார்) கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள தொகையை இந்த அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது. விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் கடன்தாரர்களால் ஏற்கப்படாமல் தபால் அதிகாரி அவர்களால் பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டிருக்கிறது. ஆகையால் கம்பெனியானது இந்த கேட்பு அறிவிப்பை நாளிதழ் மூலமாக (விதி 3 (1)ன்படி) வெளியிடப்படுகிறது. எனவே, கீழே கையொப்பமிடப்பட்டவர், மேற்படி சட்டத்தின்படி மேற்கூறிய கடன்தாரர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளின் வளாகத்தில் இந்த அறிவிப்புகளை ஒட்டப்படவுள்ளார். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உத்தரவாதமாக கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி அந்தந்த தரப்பினரால் பின்வரும் சொத்துக்கள் நிறுவனத்திற்கு அடமான வைக்கப்பட்டுள்ளன, கடனுக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடாக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை கம்பெனிக்கு சொத்தின் தொடர்புடைய நபர்கள் கம்பெனிக்கு அடமானம் செய்துள்ளார்கள்.

| எண். | கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி | கடனீட்டு சொத்துக்களின் விவரங்கள் | கேட்பு அறிவிப்பு /NPA தேதி | கேட்பு அறிவிப்பின்படி கோரும் தொகை |
|---|---|---|---|---|
| 1. | 1. திருமதி.கிரிஜா. P<br>2. திரு. பிரசாத்.D<br>இருவரின் முகவரி :<br>41, லஷ்மிபுரம் காலனி, திருவள்ளூர் - 602 001. | எண். 75, காக்களூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் தாலுகா, பூங்கா அண்டு கோ மனை பிரிவில் கூட்டு பட்டா எண். 16915-ன் படி பழைய சர்வே எண். 239/5, புதிய சர்வே எண். 239/5C-ன்படி மனை எண்.724 தெற்கு பகுதி (மனை எண்.724A) நிலத்தின் மொத்தப்பரப்பளவு - மொத்தமுள்ள 3239 சதுர அடியில் 864 சதுர அடி, ப்ளாட்-ன் கட்டுமான பரப்பளவு : 800 சதுர அடி. வடக்கில்: மனை எண்.724 -ன் மத்திய பகுதி, தெற்கில்: 30 அடி சாலை, கிழக்கில்: 8 அடி வழி, மேற்கில்: மனை எண்.722. | கேட்பு அறிவிப்பு தேதி 05.08.2025<br>NPA தேதி 29.07.2025 | 05.08.2025 அன்று வரை ரூ. 27,57,749/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) |
| 2. | 1. திரு.ராஜ்குமார். A<br>2. திருமதி. பாக்யலஷ்மி<br>இருவரின் முகவரி :<br>எண்.21/13, PV கோவில் தெரு, ராயபேட்டை, சென்னை - 600 014 | மனை எண். 60, ஸ்ரீ சாய் பாலசுப்ரமணியம் நகர், நந்தியம்பாக்கம், மீஞ்சூர், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 601 203. நிலத்தின் மொத்தப்பரப்பளவு - 1550 சதுர அடி கட்டிடத்தின் பரப்பளவு : 750 சதுர அடி. வடக்கில்: மனை எண்.55, தெற்கில்: 24 அடி பொது சாலை, கிழக்கில்: மனை எண்.61, மேற்கில்: மனை எண்.59. | கேட்பு அறிவிப்பு தேதி 23.08.2025<br>NPA தேதி 29.07.2025 | 18.08.2025 அன்று வரை ரூ. 25,13,259/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஒன்பது மட்டும்) |

*** குறிப்பிட்டுள்ள தொகையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த விகிதப்படி மேற்குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து கடன் வசூலாகும் தேதிவரை பின்வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.**

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேலே கூறப்பட்ட தொகையை ஒப்பந்த வட்டி விகிதத்துடன் செலுத்துமாறு நீங்கள் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள், தவறினால் மேற்கூறிய பாதுகாப்பைச் செயல்படுத்துவதற்கு SARFAESI சட்டத்தின் கீழ் நடவடிக்கையைத் தொடங்குவதற்கு கீழே கையொப்பமிடப்பட்டவர்கள் கட்டுப்படுத்தப்படுவார்கள். மேலும், சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

நாள்: 21.09.2025
இடம்: செங்குன்றம், சென்னை

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

ஞாயிறுதோறும் தினமணியுடன்... தினமணி கொண்டாட்டம்

# பூம்புகாரில் கடலுக்கு அடியில் தொல்லியல் ஆய்வு: முதல்வர் பாராட்டு

சென்னை, செப். 20: பூம்புகாரில் கடலுக்கு அடியில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இது குறித்த அறிவிப்பை நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார். எக்ஸ் தளத்தில் அவர் பதிவு:



மூவேந்தர் காலத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்க காலத்துக்குப் பின்னான காப்பியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் மிகப்பெரும் கடல்வாணிபத் துறைமுகமாக பூம்புகார் விளங்குகிறது. காவிரிப்பூம்பட்டினம் என்றழைக்கப்பட்ட இன்றைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பூம்புகாரில் பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையைக் கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடலுக்கு அடியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் இந்தப் பணியை பேராசிரியர் கே. ராஜன் தலைமையில், தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் உள்ளடக்கிய வல்லுநர் குழு தொடங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

முதல்வர் பாராட்டு: அமைச்சரின் அறிவிப்பை அவர் மீள் பதிவிட்டு, எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'கீழடி நம் தாய்மடி எனச் சொன்னோம். இரும்பின் தொன்மையை உலகுக்கு உணர்த்தினோம்.

அடுத்து, 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், காலின் வந்த கருங்கறி மூடையும்...' என நிறைந்து வளம் பெற்ற பூம்புகாரின் பெருமையை வெளிக்கொணர்வோம் எனத் தெரிவித்துள்ளார்.


ਪੰਜਾਬ ਨੈਸ਼ਨਲ ਬੈਂਕ punjab national bank ...the name you can BANK upon!
(பஞ்சாப் நேஷனல் வங்கி)
ARMB, PNB டவர், தரைதளம், எண்.46-49, ராயப்பேட்டை, சென்னை - 600 014.
9840037314, 9392387502, Email: cs3612@pnb.co.in

அசையா சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையா சொத்துக்களின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
17.10.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 8 & 9 -ன் கீழ் அசையா சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு
[illegible]
கடன் அளித்தவருக்கு தெரிந்த வரையில் வில்லங்கங்கள் : தெரியவில்லை.

வரிசை எண்.1 கிளை அலுவலகம் : மவுண்ட் ரோடு (016510) திரு. மாதவன் மலையமானிடு, வாடிக்கையாளர் குறியீடு : R31643864, கணக்கு எண். 016510NC00000224
[illegible]
சொத்துக்களின் விபரங்கள்: திரு. மாதவன் மலையமானிடு அவர்களுக்கு சொந்தமான சொத்து:
[illegible]
அட்சரேகை - 12.934113, தீர்க்கரேகை - 80.217475 சொத்தின் குறியீடு: PUNBGH157584140
குறைந்த பட்ச விலை : ரூ. 50,63,000/- | முன்வைப்புத் தொகை : ரூ. 5,06,300/- | ஏல உயர்வு தொகை : ரூ. 1,00,000/-
மொத்த நிலுவை தொகை : 18.09.2025 அன்று வரை ரூ. 71,20,707.79/- மேலும் 01.10.2025 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம். சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி : 01.10.2024 / பிரிவு 13 (4)-ன் கீழ் : 08.01.2025

வரிசை எண்.2 கிளை அலுவலகம் : மயிலாப்பூர், ((034300) திரு.ராஜூ அழகு மற்றும் திருமதி.போதுமணி வாடிக்கையாளர் குறியீடு : HSO001625, கணக்கு எண்.521500NC00008431 5215009900000540
[illegible]
சொத்துக்களின் விபரங்கள்: திருமதி.போதுமணி அவர்களுக்கு சொந்தமான சொத்து:
[illegible]
அட்சரேகை, தீர்க்கரேகை & இணைப்புகள் - 13.057556, 80.201091, சொத்தின் குறியீடு: PUNB36120428
குறைந்த பட்ச விலை : ரூ. 70,00,000/- | முன்வைப்புத் தொகை : ரூ. 7,00,000/- | ஏல உயர்வு தொகை : ரூ. 1,00,000/-
மொத்த நிலுவை தொகை : 30.06.2025 அன்று வரை ரூ. 64,95,055.57 மேலும் 01.07.2025 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம். சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி : 12.07.2019 / பிரிவு 13 (4)-ன் கீழ் : 21.09.2019

வரிசை எண்.3 கிளை அலுவலகம் : திருநகர் (028820), திரு. V. முருகன் & M/s. நிது D.S. புரூட் மெர்சன்ட், வாடிக்கையாளர் குறியீடு : U46241804, கணக்கு எண்.0288300500003, 0288300013828
கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: திரு. V. முருகன் உரிமையாளர்: M/s. நிது D.S. புரூட் மெர்சன்ட், திரு. V. முருகன், ப்ளாட் எண்.S1, 2வது தளம், ஆஸ்சர் எலைட் அப்பார்ட்மெண்ட், அம்பிகா நகர், ஐயன்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் - 603 210. போன்: 9382716161
சொத்துக்களின் விபரங்கள்: திரு.V.முருகன் அவர்களுக்கு சொந்தமான சொத்து :
அட்டவணை A: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, அய்யன்சேரி கிராமம், அம்பிகா நகர், பழைய சர்வே எண். 1770, புதிய சர்வே எண். 30/138-ன்படி மனை எண்.60 (வடக்கு பகுதி) 1775 சதுர அடி நிலம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: மனை எண். 59, தெற்கில்: மனை எண். 60 (பகுதி), கிழக்கில்: காலி நிலம், மேற்கில் 20 அடி சாலை.
அட்டவணை B: இந்த விற்பனை பத்திரத்தின் கீழ் கொள்முதல்தாரர்களுக்கு சொல்லப்பட்ட அட்டவணை A-ல் விரிவாக குறிப்பிட்டுள்ள நிலத்தில் 386 சதுர அடி (35.860 சதுர மீட்டர்) பிரிக்கப்படாத பங்கு உரிமை உள்ள நிலம்.
அட்சரேகை - 12.863619, தீர்க்கரேகை - 80.081374, சொத்தின் குறியீடு : PUNB82150077
குறைந்த பட்ச விலை : ரூ. 26,00,000/- | முன்வைப்புத் தொகை : ரூ. 2,60,000/- | ஏல உயர்வு தொகை : ரூ. 50,000/-
மொத்த நிலுவை தொகை : 31.08.2025 அன்று வரை ரூ.65,28,778/- மேலும் 01.09.2025 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம் (ஏதேனும் செலுத்தியது போக). சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி : 19.09.2015 / பிரிவு 13 (4)-ன் கீழ் : 18.01.2016

வரிசை எண்.4: கிளை அலுவலகம் : இருங்காட்டுக்கோட்டை, சென்னை (607600), திரு. P. விக்னேஷ்வரன், வாடிக்கையாளர் குறியீடு : IZR004341, கணக்கு எண்.607600NC00000156
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரி : திரு. P. விக்னேஷ்வரன், த/பெ பாண்டி, (கடன்தாரர் / அடமானதாரர்), திருமதி. M. சிந்துஜா, க/பெ திரு. P. விக்னேஸ்வரன், (கடன்தாரர் / அடமானதாரர்). இருவரின் முகவரி : ப்ளாட் எண்.S1 & S2, 2வது தளம், மனை எண்.14, குட்வில் நகர் பிரதான சாலை, ஸ்ரீ கருமாரி அம்மன் நகர்), பாரதி நகர், பெருங்களத்தூர், தாம்பரம் (மேற்கு), சென்னை - 600 063. போன்: 9994194794
சொத்துக்களின் விபரங்கள்: திரு.P.விக்னேஷ்வரன் மற்றும் திருமதி.M.சிந்துஜா ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து. தென்சென்னை பதிவு மாவட்டம், படப்பை துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, பெருங்களத்தூர் கிராமம், தற்போது குட்வில் நகர் என்று அறியப்படுகிற ஸ்ரீ கருமாரியம்மன் நகர் மனை பிரிவு என்ற முகவரியில் சர்வே எண். 370/1-ன் படி CMDA-ஆல் வழங்கப்பட்ட 30.07.2012 தேதியிட்ட பிளானிங் பர்மிட் எண். PP / D/12539/12-13 மற்றும் கட்டிட அனுமதி எண். PP / D/12540/12-13-ன் படி மனை எண். 14 மற்றும் 15-ல் மொத்தமுள்ள 4807 சதுர அடி நிலத்தில் 690 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் 600 சதுர அடி கொண்ட ப்ளாட் எண். S1 மற்றும் 826 சதுர அடி கொண்ட ப்ளாட் எண். S-2 கட்டுமான ஒப்பந்தத்தின் படி தனி யூனிட்டாக மாற்றப்பட்டு மொத்த பிளிந்த் ஏரியா 1426 சதுர அடி ப்ளாட், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் அங்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கவர்டு கார் பார்கிங். மனை எண்.14-க்கான எல்லைகள் : வடக்கில் : மனை எண்.15, தெற்கில் : மனை எண். 13, கிழக்கில் : சர்வே எண். 369, மேற்கில் : 30 அடி சாலை. மனை எண்.15-க்கான எல்லைகள் : வடக்கில் : மனை எண்.16, தெற்கில் : மனை எண். 14, கிழக்கில் : சர்வே எண். 369, மேற்கில் : 30 அடி சாலை.
அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை இணைப்புகள் - 12.928194, 80.091722 சொத்தின் குறியீடு : PUNBC5A10514665
குறைந்த பட்ச விலை : ரூ. 50,60,000/- | முன்வைப்புத் தொகை : ரூ.5,06,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-
மொத்த நிலுவை தொகை : 31.08.2025 அன்று வரை ரூ. 56,58,218/- மேலும் 01.09.2025 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம். சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்.
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி :24.07.2024, பிரிவு 13 (4)-ன் கீழ் : 23.10.2024

வரிசை எண்.5 : கிளை அலுவலகம் : அடையார் (033800), கமலாக்காரன் வீராசாமி, வாடிக்கையாளர் குறியீடு : AMZ010029, கணக்கு எண். 033800NC00081156
கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: கமலாக்காரன் வீராசாமி, எண். 39-A, பஜனை கோவில் தெரு, மேட்டு அரும்பாக்கம், நாகவேடு, வேலூர் - 631 002, மொபைல் : 9361610906, மேலும்: G-1, தரை தளம், பழைய எண்.12, புதிய எண்.21, பிளாக் எண். 21, காந்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 9361610906.
சொத்துக்களின் விபரங்கள்: கமலாக்காரன் வீராசாமி, அவர்களுக்கு சொந்தமான சொத்து. பழைய கதவு எண். 12, புதிய கதவு எண்:21, பிளாக் எண்.12 மற்றும் பிளாட் எண். G1 தரை தளம், காந்தி தெரு, மாம்பலம் கிராமம், தி.நகர் தாலுகா, சென்னை மாவட்டம் என்ற முகவரியல் டவுன் சர்வே எண்.130, 131, 114/2 & 117/2-ன் படி 268 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு உட்பட 680 சதுர அடி சமமாக அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து நிலம், எல்லைகள்: வடக்கில்: நடராஜன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து, தெற்கில்: வாசு மற்றும் லோகாம்பாள் ஆகியோர்களுக்கு சொந்தமான அசையா சொத்து, கிழக்கில்: பாலு ரெட்டியார் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து, மேற்கில்: ஆறுமுகம் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து.
அட்சரேகை, தீர்க்கரேகை & இணைப்புகள் : 13.035114, 80.223259, சொத்தின் குறியீடு : PUNB82150075
குறைந்த பட்ச விலை : ரூ. 28,00,000/- | முன்வைப்புத் தொகை : ரூ.2,80,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-
மொத்த நிலுவை தொகை : 31.08.2025 அன்று வரை ரூ.1,00,07,227.89 மேலும் 01.09.2025 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம். சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி : 31.08.2019/ பிரிவு 13 (4)-ன் கீழ் : 20.02.2021

வரிசை எண். 6 : கிளை அலுவலகம் : கோடம்பாக்கம், (108510), D.பச்சையப்பன், வாடிக்கையாளர் குறியீடு : O35278621, கணக்கு எண்.10856015002618
கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: திரு.D.பச்சையப்பன் எண்.24/59, சரவண பெருமாள் தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 084. மொபைல் : 919445529835, மேலும் : மனை எண்.13, நர்மதா என்கிளேவ், பிளாட் G1, தரை தளம், வாசுகி அப்பார்ட்மெண்ட்ஸ், நர்மதா நகர், 3வது தெரு, ஐயஞ்சேரி கிராமம், ஊரப்பாக்கம், சென்னை - 603 210. போன்: 919445529835
சொத்துக்களின் விபரங்கள்: D.பச்சையப்பன் அவர்களுக்கு சொந்தமான சொத்து: காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, ஐயஞ்சேரி கிராமம், நர்மதா நகர் 3வது தெரு என்ற முகவரியில் பழைய சர்வே எண்.57/4, பட்டா எண். 3958-ன் படி புதிய சர்வே எண்.57/4A5-ன் படி நர்மதா என்கிளேவ் என்ற பெயர் கொண்ட மனை எண்.13-ல் உள்ள 1826 சதுர அடி நிலத்தில் 354 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் வாசுகி அப்பார்ட்மெண்ட்ஸ் -ல் தரை தளத்தில் 820 சதுர அடி கொண்ட குடியிருப்பு பிளாட் எண். G1 எல்லைகள்: வடக்கில்: 23 அடி சாலை, தெற்கில்: காலி நிலம், கிழக்கில்: மனை எண்.14, மேற்கில்: மனை எண்.12-A.
அட்சரேகை, தீர்க்கரேகை & இணைப்புகள் : 12.8642297, 80.0839279, சொத்தின் குறியீடு : PUNB36120018
குறைந்த பட்ச விலை : ரூ.24,50,000/- | முன்வைப்புத் தொகை : ரூ. 2,45,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-
மொத்த நிலுவை தொகை : 31.08.2025 அன்று வரை ரூ.49,25,677/- மேலும் 01.09.2024 முதல் அதற்குண்டான வட்டி மற்றும் கட்டணம் ஏதேனும் வசூல் செய்தது போக. சுவாதீன நிலை : அடையாளப்பூர்வ சுவாதீனம்
SARFAESI சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு தேதி : 05.07.2018 / பிரிவு 13 (4)-ன் கீழ் : 17.09.2018

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
(1) இந்த சொத்து "எங்கு எப்படி உள்ளதோ" மற்றும் "என்ன உள்ளதோ" மற்றும் "அங்கு அப்படி அதே நிலையில்" விற்கப்படும். (2) மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரை உள்ள தகவலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது இந்த பிரகடனத்தின் விடுபடுதல் போன்றவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3) இந்த விற்பனை அடியில் கையொப்பமிட்டவரால் மின் ஏலம் மூலம் https://baanknet.com என்ற வலைதளத்தில் 17.10.2025 அன்று காலை 11.00 மணி முதல் 4.00 மணி வரை நடத்தப்படும். (4) விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை https://baanknet.com & www.pnbindia.in., என்ற இணையதளத்தை பார்க்கவும்.
SARFAESI சட்டம் 2002 விதி 8 & 9 -ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு
நாள் : 19.09.2025
இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி
பஞ்சாப் நேஷனல் பேங்க் (கடன் அளித்தவர்)



बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda
மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, நுகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008, போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு
"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.
இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி: கடன்தாரரின் பெயர்: கமலதாசன்.R எண்.32, பெரிய தெரு, கீழ்ஒண்டியூர், கர்லபாக்கம், திருவள்ளூர் - 602 024 மொத்த நிலுவை தொகை: 13.09.2025 அன்று வரை ரூ.46,37,482.42 மேலும் 14.09.2025 முதல் பின்வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை - அசல் சுவாதீனம்: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ஆவடி துணைபதிவு அலுவலகத்திற்குட்பட்ட ஆவடி மாநகராட்சி வரம்பிற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், ஆவடி தாலுகா, பெருமாள் கோவில் தெரு, அண்ணனூர் பிரதான சாலை, ரெட்டிப்பாளையம், பருத்திப்பட்டு கிராமத்தில் பிளாக் எண்.58, வார்டு 1, சர்வே எண்.315/3B, 315/3/B2, டவுன் சர்வே கள பதிவேட்டின்படி டவுன் சர்வே எண்.3/16 (CMDA-ஆல் அங்கீகரிக்கப்பட்ட 28.03.2014 தேதியிட்ட மனை பிரிவு அங்கீகார எண். PP எண்.163/14/F1 மற்றும் 28.03.2014 தேதியிட்ட BA எண்.142/14/F1) -ன் படி மொத்தமுள்ள 2830 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 452 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் "ப்ரைனஸ் கேசில்" என அறியப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் 2வது தளத்தில் 877 சதுர அடி கட்டுமான பரப்பளவு கொண்ட (பொது பகுதிகள் மற்றும் ஒரு கார் பார்க்கிங் உட்பட) அடுக்குமாடி குடியிருப்பு ஃப்ளாட் எண்.S1, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : டவுன் சர்வே எண்.3/17-ல் உள்ள நிலம், தெற்கில்: டவுன் சர்வே எண்.3/15-ல் உள்ள நிலம், கிழக்கில்: டவுன் சர்வே எண்.3/20-ல் உள்ள நிலம் (20 அடி அகல பெருமாள் கோவில் தெரு), மேற்கில்: டவுன் சர்வே எண்.3/9 & 3/10-ல் உள்ள நிலம்.
அட்சரேகை: 13.11036 N , தீர்க்கரேகை: 80.12164 E
குறைந்த பட்ச விலை : ரூ. 31,50,000/- | முன் வைப்பு தொகை : ரூ. 3,15,000/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 07.10.2025 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |
| சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 25.09.2025 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் 05.00 மணி வரை |

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com. மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 99874 78064-ல் தொடர்பு கொள்ளவும்.
விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்
தேதி : 19.09.2025
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா



केनरा बैंक Canara Bank கனரா வங்கி
சொத்து மீட்பு மேலான்மை கிளை-I
எண்.524, 8வது தளம், கனரா பேங்க் வட்டார அலுவலக கட்டிடம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018, போன் : 2849 6339 / 6900
e-mail id cb2361@canarabank.com
Website: www.canarabank.com

சுவாதீன அறிவிப்பு
பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 (சட்டம் 54/2002) மற்றும் பிணைக்காப்பு செயலாக்க விதிகள் 2002-ன் கீழ் கனரா வங்கி, சென்னை சொத்து மீட்பு மேலாண்மை கிளை I-ன், அதிகாரப்பூர்வ பெற்ற அதிகாரி 13(2) பிரிவு மற்றும் விதி 3-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள எங்களது கிளைகளில் பெற்றுள்ள கடன் வசதிகள் தொடர்பாக கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் படி கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள கடன்பாக்கித் தொகையை அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இந்த கணக்கு சொத்து மீட்பு மேலாண்மை கிளை சென்னை-க்கு மாற்றப்பட்டுள்ளது.
கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால், கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, எண்.524, 8வது தளம், கனரா வங்கி வட்டார அலுவலக கட்டிடம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018 -ன் அதிகாரப்பூர்வ அதிகாரி 17.09.2025 அன்று சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார் என்று இந்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.
சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.
கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பேரங்களும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பேரம் வைத்து கொண்டால் அது கனரா வங்கி சொத்து மீட்பு மேலாண்மை கிளை - I, எண்.524, 8வது தளம், கனரா வங்கி வட்டார அலுவலக கட்டிடம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018 -க்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வ.எண்.1 கிளை: கோட்டூர்புரம் கிளை, கடன்தாரர்: திரு. ராஜசேகர் த/பெ. அழகேசன், கேட்பு அறிவிப்பு தேதி : 04.07.2025, கேட்பு அறிவிப்பின்படி நிலுவை தொகை: ரூ.29,86,769.20/-, மொத்த நிலுவை தொகை: 05.09.2025 அன்று வரை ரூ.30,86,875.61 (ரூபாய் முப்பது லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஐந்து மற்றும் பைசா அறுபத்து ஒன்று மட்டும்) மேலும் அதற்குண்டான பின்வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து. சுவாதீனம் எடுத்த தேதி : 17.09.2025
அசையா சொத்துக்களின் விபரங்கள்: சொத்தின் உரிமையாளர் : திரு. ராஜசேகர், த/பெ. அழகேசன் :
அட்டவணை - A சொத்து: தென்சென்னை பதிவு மாவட்டம், மற்றும் கூடுவாஞ்சேரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் மற்றும் 31.03.2017 தேதியிட்ட அங்கீகார எண்.CMDA எண்.B/SPL.Bldg/95A to F/2017 மற்றும் 13.04.2017 தேதியிட்ட மண்ணிவாக்கம் பஞ்சாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அனுமதி எண்.1/2017 - 18, மண்ணிவாக்கம் பஞ்சாயத்து வரம்பிற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, மண்ணிவாக்கம் கிராமத்தில் சர்வே எண்.175/1A, 175/1B, 175/1C (பழைய சர்வே எண்.175/1 & 175/2) 3 பட்டா எண்கள் 09.12.2014 தேதியிட்ட பட்டா எண்.4196, 27.08.2013 தேதியிட்ட பட்டா எண். 3863 மற்றும் 07.03.2014 தேதியிட்ட பட்டா எண்.4053ன்படி மொத்தம் 69324 சதுர அடி (6442.75 சதுர மீட்டர்) (1 ஏக்கர் 59 சென்ட்) காலி நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.176, 181 மற்றும் 40 அடி சாலை, தெற்கில் : சர்வே எண்.173 மற்றும் 40 அடி சாலை, கிழக்கில் : சர்வே எண்.174, மேற்கில் : சர்வே எண்.171.
அட்டவணை - B சொத்து (இணைப்பு சாலைக்காக CMDA-விற்கு தானமாக அளிக்கப்பட்டது): காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, காட்டாங்குளத்தூர் பஞ்யாத்து யூனியன், மண்ணிவாக்கம் கிராமத்தில் சர்வே எண்.175/1Aபகுதி, 175/1B பகுதி-ன்படி 691.81 சதுர மீட்டர் நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : தற்போதுள்ள 12 மீட்டர் சாலை, தெற்கில் : தற்போதுள்ள 12 மீட்டர் சாலை, கிழக்கில் : சர்வே எண்.175/1Aபகுதி & 175/1Bபகுதி, மேற்கில் : சர்வே எண்.175/1Aபகுதி.
அட்டவணை-C சொத்து : தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் மற்றும் மண்ணிவாக்கம், பஞ்சாயத்து வரம்பிற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, மண்ணிவாக்கம் கிராமத்தில் மேற்குறிப்பிட்ட அட்டவணை-A சொத்தில் சர்வே எண்.175/1Aன்படி 16,472.77 சதுர அடி (1,530.92 சதுர மீட்டர்) காலி நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.176 மற்றும் 181, தெற்கில் : சர்வே எண்.173, கிழக்கில் : 40 அடி இணைப்பு சாலை, மேற்கில் : சர்வே எண்.171.
அட்டவணை-D சொத்து : தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் மற்றும் மண்ணிவாக்கம், பஞ்சாயத்து வரம்பிற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, மண்ணிவாக்கம் கிராமத்தில் மேற்குறிப்பிட்ட அட்டவணை-A சொத்தில் சர்வே எண்.175/1B மற்றும் 175/1Cன்படி 44,976.63 சதுர அடி (4179.98 சதுர மீட்டர்) காலி நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.176 மற்றும் 30 அடி சாலை, தெற்கில் : சர்வே எண்.173, கிழக்கில் : சர்வே எண்.174, மேற்கில் : 40 அடி இணைப்பு சாலை.
அட்டவணை-E சொத்து : தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மேற்குறிப்பிட்ட அட்டவணை-D சொத்தில் சராசரியாக 377 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு காலி நிலம்.
அட்டவணை-F (அடுக்குமாடி குடியிருப்பின் விவரங்கள்) : "ஆனந்தம்" என்று அறியப்படும் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் டவர் - 2-ல் பிளாக் -B,-ல் 3வது தளத்தில் 617 சதுர அடி கார்பட் ஏரியா கொண்ட 2 BHK கொண்ட அப்பார்ட்மெண்ட் எண்.B-326.

வ.எண்.2 கிளை: IIT கிளை, கடன்தாரர்: திரு. விக்னேஷ்.C த/பெ. சந்திரசேகரன், கேட்பு அறிவிப்பு தேதி : 04.07.2025, கேட்பு அறிவிப்பின்படி நிலுவை தொகை: ரூ.52,67,765.63/-, மொத்த நிலுவை தொகை: 28.08.2025 அன்று வரை ரூ.53,76,908.93 (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எட்டு மற்றும் பைசா தொண்ணூற்று மூன்று மட்டும்) மேலும் அதற்குண்டான பின்வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து. சுவாதீனம் எடுத்த தேதி : 17.09.2025
அசையா சொத்துக்களின் விபரங்கள்: சொத்தின் உரிமையாளர்: திரு. C. விக்னேஷ்,
அட்டவணை - A : (முழு சொத்து) வகை எண்.1 : செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை - II துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, எண்.14, பெருமாட்டுநல்லூர் கிராமத்தில் "L.S.S. விஜய் அவென்யூ" (DTCP அங்கீகார எண்.9/2007), சர்வே எண்.84/1பகுதி, பட்டா எண்.3135, பட்டாவின்படி புதிய சர்வே எண்.84/20ன் படி மனை எண்.1ல் உள்ள 4312 சதுர அடி காலி வீட்டு மனை. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : காலி நிலம், தெற்கில் : மனை எண்.2, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 98 அடி , கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 98 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 42 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 46 அடி. மொத்தப்பரப்பளவு 4312 சதுர அடி.
வகை எண்.2 : செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை - II துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, எண்.14, பெருமாட்டுநல்லூர் கிராமத்தில் "L.S.S. விஜய் அவென்யூ" (DTCP அங்கீகார எண்.9/2007), சர்வே எண்.84/1பகுதி, பட்டா எண்.3136, பட்டாவின்படி புதிய சர்வே எண்.84/21ன் படி மனை எண்.2ல் உள்ள 3920 சதுர அடி காலி வீட்டு மனை. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.1, தெற்கில் : மனை எண்.3, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 98 அடி , கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 98 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 40 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 40 அடி. மொத்தப்பரப்பளவு 3920 சதுர அடி.
வகை எண்.1 மற்றும் 2 சேர்த்து மொத்தம் - 4312 + 3920 = 8232 சதுர அடி.
அட்டவணை - B : மேற்குறிப்பிட்ட அட்டவணை A சொத்து நிலத்தில் 386 சதுர அடி பரப்பளவு பிரிக்கப்படாத பங்கு நிலம்.
அட்டவணை - C : மேற்குறிப்பிட்ட அட்டவணை-Aல் குறிப்பிட்டுள்ள சொத்து நிலத்தில் அட்டவணை-Bல் குறிப்பிடப்பட்டுள்ள 386 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் 1170 சதுர அடி பில்ட் ஏரியா கொண்ட ப்ளாட் எண்.B-2 என்று குறியிடப்பட்டுள்ள RCC கூரை ப்ளாட் மற்றும் அங்குள்ள பொது வசதிகள் மற்றும் பொது ஏரியா உட்பட.
தேதி : 17.09.2025
இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி



ஞாயிற்றுக்கிழமைதோறும்
இளமை! புதுமை! இனிமை!
தினமணி கதிர்


# கார் – லாரி மோதல்: ஆசிரியை உள்பட இருவர் உயிரிழப்பு

விழுப்புரம்/ சென்னை செப்20: விழுப்புரம் அருகே சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் கார் மீது லாரி மோதியதில் ஆசிரியை உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர். மேலும் 3 ஆசிரியைகள் உள்பட 6 பேர் காயமடைந்தனர்.

விழுப்புரம் மாவட்டம், காரணை பெரிச்சானூர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியையான திருச்சி பாலக்கரை, மல்லிகைபுரம், மணியம் நகர், ஷாகுல் ஹமீது மனைவி நெசர் நிஷா (47), விழுப்புரம் தனலெட்சுமி கார்டன், மூவேந்தர் நகரைச் சேர்ந்த ஜெகதீசன் மனைவி சிவரஞ்சனி (38), கடலூர் மாவட்டம், நல்லாத்தூர் பகுதியைச் சேர்ந்த எல்லப்பன் மனைவி கௌசல்யா (23) மற்றும் விழுப்புரம் மாவட்டம், ராம்பாக்கம் அரசுப் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரியும் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், வானவேந்தல் பகுதியைச் சேர்ந்த முருகன் மனைவி பூவிழி (35) ஆகியோர் ஒரே காரில் சென்னையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்க சனிக்கிழமை அதிகாலை சென்றனர்.

இதில், ஆசிரியைகள் நெசர் நிஷா, கௌசல்யா, பூவிழி ஆகியோர் தங்கள் கணவர்களுடன் தம்பதிகளாகவும், சிவரஞ்சனி மட்டும் தனியாகவும் என காரில் மொத்தம் 7 பேர் பயணித்தனர். காரை கடலூர் மாவட்டம், பண்டரசோழநல்லூர் பகுதியைச் சேர்ந்த சூர்யா (27) ஓட்டிச் சென்றார்.

இவர்களது கார் விழுப்புரம் – சென்னை நெடுஞ்சாலையில் விழுப்புரத்தை அடுத்துள்ள அய்யூர் அகரம் மேம்பாலம் பகுதியில் சென்றபோது, கார் ஓட்டுநர் வலதுபுறமாகச் சென்று எதிர்திசையில் சென்னை – திருச்சி நெடுஞ்சாலையில் இயக்கியதால், அந்த சாலையில் வந்த சரக்கு லாரி, கார் மீது மோதியது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த ஆசிரியை சிவரஞ்சனி, ஷாகுல் ஹமீது (52) ஆகியோர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். பலத்த காயமடைந்த ஆசிரியைகள் நெசர் நிஷா, கௌசல்யா, பூவிழி மற்றும் முருகன், எல்லப்பன், கார் ஓட்டுநர் சூர்யா ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். விழுப்புரம் தாலுகா போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

நிவாரண நிதி-முதல்வர் உத்தரவு: இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.3 லட்சம் வழங்கவும், பலத்த காயமடைந்தோருக்கு தலா ரூ.1 லட்சம், லேசான காயமடைந்தோருக்கு தலா ரூ.50 ஆயிரம் வழங்கவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

# ரயிலிலிருந்து பாம்பன் கடலில் தவறி விழுந்த இளைஞர் மீட்பு

ராமேசுவரம், செப். 20: ராமேசுவரத்திலிருந்து மதுரைக்கு ரயிலில் சென்ற இளைஞர் பாம்பன் பாலத்தில் வந்தபோது, ரயிலிலிருந்து தவறி கடலுக்குள் விழுந்தார். அவரை 12 மணி நேரத்துக்குப் பிறகு மீனவர்கள் மீட்டனர்.



மதுரை பரவை பகுதியைச் சேர்ந்தவர் வரதராஜன் (28) (படம்). இவர் மதுரையிலிருந்து ராமேசுவரத்துக்கு பயணிகள் ரயிலில் வெள்ளிக்கிழமை காலை வந்தார். பின்னர், ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு, மீண்டும் மாலை 6.30 மணிக்கு ராமேசுவரம் ரயில் நிலையத்திலிருந்து மதுரைக்கு ரயிலில் புறப்பட்டார்.

இந்த ரயில் பாம்பன் பாலத்தில் மாலை 6.45 மணிக்கு வந்த போது, வரதராஜன் ரயில் படிக்கட்டு அருகே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது, திடீரென மயக்கம் ஏற்பட்டு அவர் கடலுக்குள் தவறி விழுந்தார். ஆழமான கடல் பகுதியில் விழுந்த அவர், நீந்தி உடனடியாக அருகே இருந்த பாறை மீது ஏறி அமர்ந்து கொண்டார்.

இதையடுத்து, சனிக்கிழமை அதிகாலை வரை அந்தப் பாறையிலேயே அமர்ந்திருந்த வரதராஜனை அந்தப் பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீட்டு, கரைக்கு அழைத்து வந்தனர். பின்னர், மருத்துவமனையில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

# வாக்குத் திருட்டு உண்மையெனில் திமுக ஆட்சி அமைந்திருக்காது

திருப்பரங்குன்றம், செப். 20: வாக்குத் திருட்டு நிகழ்ந்திருந்தது உண்மையெனில், தமிழகத்தில் திமுக ஆட்சி அமைந்திருக்காது என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியதாவது:

வாக்குத் திருட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எந்த ஆதாரத்தை வைத்திருக்கிறார் எனத் தெரியவில்லை. பாஜக வாக்குத் திருட்டில் ஈடுபட்டிருந்தால், தமிழகத்தில் திமுக ஆளும் கட்சியாக இருக்க முடியாது.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் போது இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பலர் கொல்லப்பட்டனர். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான 11 ஆண்டு கால மத்திய பாஜக ஆட்சியில் ஒரு மீனவர்கூட இலங்கைக் கடற்படையினரால் சுடப்படவில்லை. தூக்குத் தண்டனைக்குச் செல்ல இருந்த ஒருவரைக் கூட மீட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போதும் இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தவெக தலைவர் விஜய் இது வரை எந்தத் தேர்தலையும் சந்திக்கவில்லை. முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்து விடுவோம் என அவர் கருதுகிறார். தமிழக மக்கள் எதன் அடிப்படையில் அவருக்கு வாக்களிப்பார்கள் என்பதை அவர் சிந்தித்துப் பேச வேண்டும்.

அண்ணாமலை எங்கள் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர். தற்போதும் அவர் கட்சியில் உள்ளார்.

ஆனால், அவர் தனிக் கட்சி தொடங்கப்போவதாக வதந்தி பரப்பப்படுகிறது. இது தொடர்பான சுவரொட்டியை யார் ஒட்டினார்கள் எனத் தெரியவில்லை. முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலர் டிடிவி. தினகரன் எங்கள் கூட்டணிக்கு வந்தால் சேர்த்துக் கொள்வோம் என்றார் அவர்.

# பழங்குடியின சிறுமி பாலியல் வன்கொடுமை: இளைஞருக்கு 20 ஆண்டுகள் சிறை

உதகை, செப். 20: பழங்குடியின சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த இளைஞருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து உதகை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீலகிரி மாவட்டம், கூடலூர் கோழிப்பாலம் அருகே உள்ள சேப்பட்டி பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமி படிப்பை நிறுத்தி விட்டு வீட்டில் இருந்துள்ளார். அப்போது வீட்டின் அருகே வசிக்கும் சந்தோஷ் (29), சிறுமியைக் காதலிப்பதாகக் கூறி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதுகுறித்து கூடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஷோபனா கடந்த 2022-ஆம் ஆண்டு புகார் தெரிவித்தார். இதன்பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் சந்தோஷ் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கின் விசாரணை உதகை மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது. இதில், சந்தோஷுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் சனிக்கிழமை உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிவாரணமாக ரூ.1 லட்சம் வழங்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

# கட்டுமானப் பணியின்போது சுவர் இடிந்து 2 பேர் உயிரிழப்பு



அவிநாசி, செப். 20: திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே கருவலூர் உப்பிலிபாளையத்தில் கட்டுமானப் பணியின்போது சுவர் இடிந்து விழுந்ததில் இரண்டு தொழிலாளர்கள் சனிக்கிழமை உயிரிழந்தனர்.

அவிநாசி வட்டம், கருவலூர் அருகே உப்பிலிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சண்முகம். இவருக்கு சொந்தமான இடத்தில் கோழிப் பண்ணை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அங்கு சனிக்கிழமை காலை வழக்கம்போல, கட்டடத் தொழிலாளர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். மாலை, கட்டுமானப் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 10 அடிக்கும் மேல் அமைக்கப்பட்ட சுவர் திடீரென இடிந்து விழுந்தது (படம்).

இதில் இடிபாடுகளில் சிக்கி கட்டடத் தொழிலாளர்களான திண்டுக்கல் கொடை ரோடு பகுதியைச் சேர்ந்த துரைசாமி மகன் ரமேஷ் (46), அவிநாசி அருகே கண்டக்காம்பாளையம் பகுதியைச் சேர்ந்த அந்தோணி (55) ஆகியோர் உயிரிழந்தனர்.

மேலும், பலத்த காயமடைந்த கருவலூர் மேற்கு வீதியைச் சேர்ந்த சுந்தர்ராஜ் (42), கோவை மாவட்டம், சூலூரைச் சேர்ந்த முத்தான் ஆகியோர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து அவிநாசி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 40–க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள்

## அமைச்சர் தங்கம் தென்னரசு



**மானாமதுரை, செப். 20:** தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் நடைபெற்று வருவதாக நிதி, தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், கீழடி அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சிந்து வெளி ஆய்வு மையம் ஆகியவை இணைந்து 'கீழடியில் சிந்துவெளி நாள்' விழாவை சனிக்கிழமை நடத்தின.

இந்த விழாவில் நூல்கள், ஆய்விதழ்கள் ஆகியவற்றை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் வெளியிட்டனர். பின்னர், அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்ட நூலகத்தை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்து பேசியதாவது:

தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான சின்னங்களைப் பாதுகாத்தல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை முறையாக ஆய்வு செய்து அகழாய்வு நடத்துதல் போன்ற பணிகளை தமிழ்நாடு தொல்லியல் துறை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

சிந்து சமவெளி நாகரிக காலகட்டத்தில் தமிழர்கள் பண்பாடு, கலாசாரத்துடன் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளன.

உலக வரலாற்றில் சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முன்பு பண்பாடு, கலாசாரத்துடன் வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு இருந்ததாகப் போற்றப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புகள் கிடைக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆராய்ச்சிப் பணிகளை செயல்படுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

கீழடி ஆராய்ச்சி என்பது இந்த மண்ணுக்குக் கிடைத்த பெரிய பாக்கியம். தற்போது 10-ஆம் கட்ட அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகளும் தொடங்கி நடைபெற்று வருகின்றன என்றார் அவர்.

101 ஆண்டுகளுக்கு முன்பு 1924 செப். 20-இல் இந்திய துணைக் கண்டத்தின் தொன்மை வரலாற்றை உலகுக்கு முதன்முதலில் பறைசாற்றியவர் சர் ஜான் மார்ஷல்.

சிந்துவெளி நாகரிகம் குறித்த அறிவிப்பை வெளியிட்ட 101-ஆவது ஆண்டை சிந்துவெளி நாகரிகத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆய்வு மையமும் இணைந்து கீழடியில் சிந்துவெளி நாள் விழாவைக் கொண்டாடின.

இந்த விழாவில் தொல் தடம் ஆய்விதழ்களான தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக் கணக்கீடுகள் போன்ற ஆய்விதழ்களும், நூல்களும் வெளியிடப்பட்டன.

முன்னதாக, கீழடி அருங்காட்சியகத்தினுள் அமைக்கப்பட்ட நூலகத்தை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி தலைமை வகித்தார். மானாமதுரை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், சிந்து சமவெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வளர்ப்பு நாய் கடித்து 14 பேர் காயம்

**அம்பாசமுத்திரம், செப். 20:** திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் வளர்ப்பு நாய் கடித்ததில் 14 பேர் காயமடைந்தனர்.

விக்கிரமசிங்கபுரம் செல்வவிநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணன் (40).

இவர், வீட்டில் நாய் வளர்த்து வருகிறார். வெள்ளிக்கிழமை மாலை நாயை பிடித்தது போல, அவரை கடித்து விட்டு வெளியேறிய நாய், செல்வ விநாயகர் கோயில் தெரு, சிவந்திபட்டி கோயில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் நடந்து சென்ற முப்பிடாதி (50), தூர்பா (54), சுடர்மதி மனைவி கலைவாணி (51), மாரியப்பன் (54), பிச்சையா மனைவி தங்கம் (64), பத்மநாபன் மனைவி கல்யாணி (53) மற்றும் சிறுவர்கள் உள்பட 14 பேரை கடித்ததில், காயமடைந்த அனைவரும் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 4 பேர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**எம்எல்ஏ ஆறுதல்:** நாய் கடித்ததில் காயமடைந்து அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளவர்களை, பேரவை உறுப்பினர் இசக்கி சுப்பையா நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், நாய் வளர்ப்பவர்கள் அவரவர் பராமரிப்பில் சொந்த இடத்தில் கட்டிப் போட்டு வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்களுக்கு இடையூறாக சாலையில் திரியும் நாய்களை அரசு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# தமிழக மீனவர்களைக் கைவிட்ட திமுக, பாஜக

## விஜய் குற்றச்சாட்டு

**நாகப்பட்டினம்/திருவாரூர், செப்.20:** தமிழக மீனவர்களை திமுக அரசும், மத்திய பாஜக அரசும் கைவிட்டுவிட்டதாக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் குற்றஞ்சாட்டினார்.

நாகப்பட்டினம் புத்தூர் அண்ணா சிலை அருகே தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பு பிரசாரத்தில் விஜய் பேசியதாவது:

தமிழகத்தில் மீன் ஏற்றுமதியில் இரண்டாம் இடத்திலுள்ள நாகை துறைமுகத்தில் நவீன வசதியுடன் மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இல்லை. அடிப்படை வசதிகள் இல்லாத வீடுகள் காணப்படுகின்றன.

இலங்கைக் கடற்படையால் மீனவர்கள் தாக்கப்படுவதையும், அதற்கான காரணம், தீர்வு பற்றியும் மதுரை மாநாட்டில் பேசினேன். மீனவர்களுக்காக குரல் கொடுப்பதும், துணை நிற்பதும் நம்முடைய கடமை, உரிமை. அதேபோன்று ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதும், அவர்களின் உயிரும் வாழ்வும் நமக்கு மிக முக்கியம்.

மீனவர்களின் துயரைப்பார்த்து கடிதம் எழுதிவிட்டு பிறகு அமைதியாக இருந்து கபட நாடகமாடுகிறது திமுக. இந்திய, தமிழக மீனவர்கள் எனப் பிரித்துப் பார்க்கிறது பாஜக. இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்பதே தவெகவின் எண்ணம்.

நாகப்பட்டினம் மண்வளத்தைப் பாதிக்கும் இறால் பண்ணைகள் முறைப்படுத்தப்படவில்லை. கடலோர கிராமங்களை மண் அரிப்புகளிலிருந்து பாதுகாக்கும் அலையாத்திக் காடுகள் பாதுகாக்கப்படவில்லை. பாரம்பரிய கடல் சார்ந்த இந்த ஊரில் அரசு மரைன் கல்லூரி, மீன் தொழிற்சாலை அமைக்கப்படவில்லை. வேலை வாய்ப்பு கொண்டுவரும் வகையில் தொழில் வளத்தைப் பெருக்கவில்லை. ஆனால், வெளிநாடு சுற்றுப்பயணம் சென்று திரும்பும் போது ஆயிரக்கணக்கான கோடி முதலீடு என முதல்வர் கூறுகிறார்.

**பிரசாரத்துக்கு இடையூறு:** மக்களைச் சந்திப்பதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அரியலூர் பிரசாரத்தின்போது மின்தடை; திருச்சியில் பேசத் தொடங்கியபோது ஸ்பீக்கர் துண்டிப்பு; பிரசாரம் செய்வதற்கு அமைதியான இடத்தைத் தேர்வு செய்தால், நெருக்கடியான இடத்துக்கு அனுமதி தரப்படுகிறது; நான் மக்களைச் சந்திக்கக் கூடாது, பேசக் கூடாது, அவர்களின் குறைகளை கேட்கக் கூடாது, அவர்களுக்காக குரல் கொடுக்கக் கூடாது என்பதே திமுகவின் எண்ணம்.



திருவாரூரில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற பிரசார பயணத்தில் பேசிய தவெக தலைவர் விஜய்.

2026 பேரவைத் தேர்தலில் தவெக, திமுக இடையே மட்டுமே போட்டி. நேர்மையாக தேர்தலை திமுக சந்திக்க வேண்டும். இனி இதுபோன்ற தடைகள் விதித்தால், நேரடியாக மக்களிடமே அனுமதி கேட்டுக் கொள்கிறேன்.

திமுக மறுபடியும் ஆட்சிக்கு வர வேண்டுமா? உங்கள் நலன் விரும்பும் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைய வேண்டுமா?. இந்தப் போர் முழக்கம் ஒரு நிமிடம் கூட உங்களைத் தூங்கவிடாது, துரத்திக் கொண்டே இருக்கும்.

**சனிக்கிழமை மட்டும் பிரசாரம் ஏன்?:** மக்களைச் சந்திக்கும் எனது பயணத் திட்டம் சனிக்கிழமைகளில் நடைபெறுவது தொடர்பாக விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. மக்களைச் சந்திக்கும் போது, இடையூறுகள் இருக்கக் கூடாது என்பதற்காக சனிக்கிழமைகளில் பிரசார பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. அரசியலில் சில பேருக்கு ஓய்வு கொடுக்கவே, ஓய்வு நாளைத் தேர்ந்தெடுத்தோம் என்றார் விஜய்.

**குடும்ப ஆதிக்கம் இல்லாத தமிழகம்:** திருவாரூரில் சனிக்கிழமை மாலை பிரசாரம் மேற்கொண்ட விஜய் பேசியதாவது: திருவாரூர் என்றாலே ஆழித்தேர் அனைவரின் நினைவுக்கும் வரும். நீண்ட நாள்கள் ஓடாமல் இருந்த தேரை ஓட வைத்த பெருமைக்குரியவர் எனக் கூறிக்கொண்டவரின் மகன் தற்போது தமிழக முதல்வராகி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ளார். முதல்வரின் சொந்த மாவட்டத்தில்கூட அடிப்படைத் தேவையான சாலை வசதிகூட முறையாக இல்லை. ஏழ்மை இல்லாத தமிழகம், ஊழல் இல்லாத தமிழகம், குடும்ப ஆதிக்கம் இல்லாத தமிழகம், உண்மையான மக்களாட்சி, மனசாட்சி உள்ள மக்களாட்சி இவற்றை தவெக வழங்கும் என்றார்.


## விற்பனைக்கு

பயனற்ற 2007 SCORPIO கார் (டீசல்) – TN 01 AD 7779 மற்றும் 2006 BAJAJ ஆட்டோ (பெட்ரோல்) TN 01 AC 4358 டெண்டர் மூலம் விற்பனைக்கு.

தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம்
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை,
சென்னை–6
போன்: 044–28279758

## வடகிழக்கு இரயில்வே

**E-டெண்டர் அறிவிப்பு**
**டெண்டர் அறிவிக்கை எண்: N-235-62**
**டெலி டெண்டர் 09-2025**

இந்தியக் குடியரசுத் தலைவருக்காகவும் மற்றும் அவர் சார்பாகவும், துணை முதன்மை சமிக்ஞை & தொலைத்தொடர்பு பொறியாளர்/Tele/HQ, வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் அவர்கள், பின்வரும் பணிகளுக்கு, டெண்டர் ஆவணத்தில் காணும் தகுதி வரையறைகளின்படி போதுமான அனுபவம் உள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின் டெண்டர்களை வரவேற்கிறார்.

1. டெண்டர் எண்.:N-235-62 டெலி டெண்டர் 09-2025, 2. பணியின் பெயர்: வடகிழக்கு ரயில்வே, கோரக்பூரின் பல்வேறு இடங்களில் உள்ள ரயில் பெட்டி பணிமனைகளில் ரயில்நெட் மற்றும் பிற தொலைத்தொடர்பு வசதிகளை அமைப்பதற்கான பல்வேறு தொலைத்தொடர்புப் பொருள்களை வழங்குதல், நிறுவுதல், சோதனை செய்தல் & இயக்கி வைத்தல். 3. டெண்டர் மதிப்பு: ரூ. 1862914.19/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதிநான்கு மற்றும் பத்தொன்பது பைசா மட்டும்), 4. ஏல காப்புறுதி தொகை : ரூ.37,300/-, 5. விலைப்புள்ளி செல்லுபடியாகும் காலம்: 60 நாள்கள், 6. டெண்டர் நிறைவுற்று அவற்றை பரிசிலீக்கும் இடம், தேதி & நேரம்: DSTE/Tele அலுவலகம், வடகிழக்கு ரயில்வே, கோரக்பூர். 10.10.2025 நாளன்று 15:00 மணிக்கு. 7. பணிநிறைவு காலம்: 03 (மூன்று) மாதங்கள், 8. டெண்டரில் ஏதேனும் மாற்றங்கள் அசல் டெண்டர் அறிவிப்பில் திருத்தம் ஆகியவற்றை அறிய தயவு செய்து எமது இணையதளத்தைப் பார்க்கவும். 9. விரிவான டெண்டர் அறிவிப்பு, ஆவணங்கள், தகுதி வரையறைகள், விதிமுறைகள் & நிபந்தனைகள் ஆகியவை http://www.ireps.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கின்றன.

குறிப்பு: டெண்டர்தாரர்கள் / ஏலதாரர்கள் தங்கள் ஏலத்துடன் தொடர்புடைய அனைத்து இணைப்புகள் / படிவம் / பிற்சேர்க்கைகள் ஆகியவற்றை தமது ஏலப்புள்ளியுடன் சேர்த்து பதிவேற்ற வேண்டும்.

துணை முதன்மை சமிக்ஞை & தொலைத்தொடர்பு பொறியாளர்/ Tele/HQ, கோரக்பூர்
CPRO/Sig.-55

படிகளிலும் கூரையிலும் ஒருபோதும் பயணிக்காதீர்

## கனரா வங்கி — பிராந்திய அலுவலகம் சென்னை வடக்கு

781-785, தரை தளம், ராயலா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை – 600 002.
மின்னஞ்சல் : recro2chn@canarabank.com

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாள / ஆக்கப்பூர்வ சுவாதீனம் (Symbolic/Constructive possession) செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 09.10.2025 ஆம் தேதியன்று (காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட் வளாகம் கிளை, போன்: 91-9444252782, 044-24797739, 24797738, மின்னஞ்சல்:cb2782@canarabank.com

கடன்தாரர் பெயர் & முகவரி: 1) M/s.TVS & Co, சார்பில் அதன் உரிமையாளர்: திருமதி.சுகந்தி.S, க/பெ.திரு.சசிகுமார், எண். 109, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர் புரசைவாக்கம், சென்னை - 600011. 2. திருமதி.சுகந்தி.S, (உரிமையாளர்), க/பெ.திரு.சசிகுமார், 3. திரு.சசிகுமார். J (ஜாமீன்தாரர்), த/பெ.திரு.ஜெயராஜ், 4. திருமதி.J.சொர்ணம் (ஜாமீன்தாரர்), க/பெ.திரு.ஜெயராஜ். அனைவரின் குடியிருப்பு முகவரி: 88/10 96/10, தங்கம் ஃப்ளாட்ஸ், பெரம்பூர், சென்னை - 600011.

கடன் நிலுவைத் தொகை : 31.08.2025 அன்றுள்ளபடி ரூ. 20,48,030.29/- (ரூபாய் இருபது இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து முப்பத்து மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்

சொத்தின் விவரம்: அட்டவணை – A: மூல ஆவணதாரர் பெயர்: திருமதி. J. சொர்ணம் க/பெ. திரு. ஜெயராஜ், குடியிருப்பு முகவரி:88/10, 96/10, தங்கம் ஃப்ளாட்ஸ், படேல் சாலை, பெரம்பூர், சென்னை - 600011 மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் புரசைவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் - பெரம்பூர் வட்டம், பெரம்பூர் கிராமத்தின் பிளாக் எண்.23, பழைய சர்வே எண்.440, புதிய சர்வே எண்கள்.440/22 மற்றும் 440/15 ஆகியவற்றில் அடங்கிய சென்னை - 600011, பெரம்பூர், படேல் சாலை, கதவு எண்.96, 97 & 98, ஆகியவற்றில் அமைந்துள்ள பரப்பளவு 5கிரவுண்டுகள் மற்றும் 1040ச.அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.440/69 மற்றும் 440/70 ஆகியவற்றில் அடங்கிய திரு. கஜேந்திர நாயுடு மற்றும் பலரின் உரிமைப்பெற்றச் சொத்து; தெற்கில்: படேல் சாலை; கிழக்கில்: சர்வே எண்.440/16 இல் உள்ள ஆண்டாள் அம்மாள் அவர்களின் உரிமைப்பெற்ற கிரவுண்டு மற்றும் வீடு; மேற்கில்: சர்வே எண்.440/21 இல் உள்ள திரு. A.G. மோசஸ் அவர்களின் உரிமைப்பெற்றச் சொத்து. நாற்பரப்புகள்: வடக்கில் : 80அடி; தெற்கில் : 80அடி; கிழக்கில் : 163அடி; மேற்கில் : 163 அடி. அட்டவணை – B: குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 712.22ச.அடி நிலம். அட்டவணை – C: "தங்கம் ஃப்ளாட்ஸ்" என்ற பெயரில் உள்ள கட்டிடத்தில் முதல் தளத்தில் பரப்பளவு 1130ச.அடி கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.10.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 56,00,000/- | டேவணித்தொகை ₹ 5,60,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 04.10.2025; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 09.10.2025 காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) ...

... வேலை நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். (அல்லது) சேவை முகவர் baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No.7046612345/ 6354910172/ 8291220220/ 9892219848/ 8160205051, Email :support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com) தொடர்பு கொள்ளலாம்.

Portal of E-Auction:https://baanknet.com

தேதி : 18.09.2025; இடம் : சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி



## படிவம்-A
## பொது அறிவிப்பு

(இந்திய திவால் மற்றும் நொடிப்பு நிலை வாரியம் (பெருநிறுவன நிறுவனதாரர்களுக்கான திவால் அறிவிக்கை நடைமுறை) ஒழுங்குமுறைகள், 2016-இன் ஒழுங்குமுறை 6-இன் கீழ்)

**லோகா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனப் பற்றாளர்கள் கவனத்துக்கு**

| தொடர்புடைய விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் நிறுவனக் கடன்தாரர் பெயர் | லோகா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் |
| 2. | கார்ப்பரேட் நிறுவனக் கடன்தாரர் வணிகம் தொடங்கிய நாள் | 17.07.2018 |
| 3. | இந்த ஆணையத்தின் கீழ் கார்ப்பரேட் நிறுவனக் கடன்தாரரின் வணிகம் தொடங்கப்பட்டது / பதிவு செய்யப்பட்டது | நிறுவனப் பதிவாளர், சென்னை |
| 4. | கார்ப்பரேட் அடையாள எண் / கார்ப்பரேட் நிறுவனத்தின வரையறுக்கப்பட்ட கடன்பொறுப்பு அடையாள எண் | U45500TN2018PTC123743 |
| 5. | கார்ப்பரேட் நிறுவனக் கடன்தாரரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி | பதிவு அலுவலகம்: மனை எண் 5 / ஃபிளாட் எண் 101, 1ஆவது தளம், எண் 14, கண்ணப்பா நகர் விரிவாக்கம், திருவான்மியூர், சென்னை, தமிழ்நாடு-600041. |
| 6. | திவால் நடவடிக்கை தொடக்க நாள் | 18.09.2025 |
| 7. | திவால் தீர்வு நடைமுறை நிறைவடையக்கூடிய உத்தேச நாள் | 17.03.2026 – அதாவது திவால் நடவடிக்கை தொடங்கிய நாளிலிருந்து 180 நாள்கள் |
| 8. | இடைக்காலத் கலைப்பு அலுவலராகச் செயல்படும் திவால் அலுவலரின் பெயர் மற்றும் பதிவு எண் | டாக்டர் S.R.ஸ்ரீராம் சேகர் IBBI/IPA-003/IP-N000144/2017-2018/11598 |
| 9. | இடைக்காலத் கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி - ஆணையத்தில் உள்ள பதிவின்படி | ஃபிளாட் எண் 11, பிரயாக் அபார்ட்மெண்ட்ஸ், 1ஆவது தளம், 8/15, காந்தி நகர் முதல் பிரதான சாலை, அடையாறு, சென்னை-600020. மின்னஞ்சல் முகவரி: shekhershriraam@gmail.com |
| 10. | தகவல் தொடர்புக்கான இடைக்கால கலைப்பு அலுவரின் தபால் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி | ஃபிளாட் எண் 11, பிரயாக் அபார்ட்மெண்ட்ஸ், 1ஆவது தளம், 8/15, காந்தி நகர் முதல் பிரதான சாலை, அடையாறு, சென்னை-600020. மின்னஞ்சல் முகவரி: lokaahousing.cirp@gmail.com |
| 11. | உரிமை கோரல்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 02.10.2025 |
| 12. | இடைக்கால கலைப்பு அலுவலரால் உறுதி செய்யப்பட்ட பிரிவு 21, உட்பிரிவு (6A), ஷரத்து (b)-இன்படி பற்றாளர்களின் வகை - இருப்பின் | இடைக்காலத் கலைப்பு அலுவலருக்கு நாளன்றின்படி தெரிந்த வரையில் இது பொருந்தாது. |
| 13. | பற்றாளர்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாகச் செயல்படுவதற்காக அடையாளம் காணப்பட்ட கலைப்பு அலுவலர்களின் பெயர்கள் (ஒவ்வொரு வகைக்கும் 3 பெயர்கள்) | -பொருந்தாது- |
| 14. | a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் b) அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளின் விவரங்கள் கிடைக்குமிடம்: வரிசை எண் 13-இன்படி பொருந்தாது. | இணைய முகவரி: https://ibbi.gov.in/home/downloads |

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது யாதெனில் M/s. லோகா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் மீது கார்ப்பரேட் நிறுவன திவால் அறிவிக்கை நடைமுறையைத் தொடங்குமாறு மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் (NCLT) சென்னை அமர்வு-II 12.09.2025 அன்று ஆணையிட்டுள்ளது (இந்த ஆணை நகல் இடைக்கால கலைப்பு அலுவலருக்கு 18.09.2025 அன்று பெறப்பட்டது).

எனவே M/s. லோகா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பற்றாளர்கள் தங்களது உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 02.10.2025 அன்றோ அதற்கு முன்பாகவோ, வரிசை 10-இல் குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள இடைக்கால கலைப்பு அலுவலரிடம் தாக்கல் செய்யுமாறு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

நிதிப் பற்றாளர்கள் தங்களது ஆதாரத்துடன் கூடிய உரிமை கோரல்களை மின்னணு வழியில் மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும். மற்ற பற்றாளர்கள் அனைவரும் தங்களது ஆதாரத்துடன் கூடிய உரிமை கோரல்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ, மின்னணு வழியிலோ தாக்கல் செய்யலாம்.

உரிமை கோரல்களை அவரவருக்கான உரிய படிவங்களில் தாக்கல் செய்ய வேண்டும்:- செயல் பற்றாளர் (பணியாளர் & ஊழியர் அல்லாத பிறர்) - படிவம் B, நிதிப் பற்றாளர் - படிவம் C, வகை-A நிதிப் பற்றாளர் - படிவம் CA, பணியாளர் / ஊழியர் - படிவம் D, பணியாளர்களின் / ஊழியர்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதி - படிவம் E, இதர பற்றாளர்கள் - படிவம் F.

**போலியான மற்றும் பிற ஆதாரங்களை உரிமைகோரலுக்காக சமர்ப்பிப்பது தண்டனைக்கு வழிவகுக்கும்.**

டாக்டர் S.R.ஸ்ரீராம் சேகர்
IBBI/IPA-003/IP-N000144/2017-18/11598
AFA செல்லுபடி காலம் 31.12.2025 வரை
இடைக்கால கலைப்பு அலுவலர்
லோகா ஹவுசிங் பிரைவேட் லிமிடெட்

நாள்: 20.09.2025
இடம்: சென்னை



## இந்தியன் வங்கி — மெட்ராஸ் ஜார்ஜ் டவுன் கிளை

321, (பழைய எண்.155), தம்பு செட்டி தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி : 044-2534 1461, 2534 1481. மின்னஞ்சல் : mgt@indianbank.co.in

பிற்சேர்க்கை IV-A [விதி 8(6) நிபந்தனை பார்க்கவும்]

### அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

சொத்து மற்றும் அதன் தொடர்பான ஆவணங்கள் ஆய்வு தேதி மற்றும் நேரம் : 15.10.2025 - 16.10.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 24.10.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டெண்டர் படிவம்/EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 24.10.2025

தேதி : 19.09.2025
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் வங்கி



## கனரா வங்கி — சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கி, கோயம்பேடு கிளையின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்கள் ஆக்கப்பூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனம் செய்துள்ளார். கடன்தாரர்கள் 1) M/s Krivis Traders & Services (கடன்தாரர்) திரு.B.மதன் மோகன் (உரிமையாளர்) எண்.41, MCK நகர் அடையாலம்பட்டு கிராமம் வானகரம் அஞ்சல், சென்னை - 600 095. 2) திரு.B. மதன் மோகன் (கடன்தாரர்) த/பெ. திரு.S.K.பாலசுப்பிரமணியன், எண்.B.43, Willow Block City Lights Meadow அப்பார்ட்மெண்ட்ஸ், எண்.82 ஆண்டாளம்மாள் தெரு நொளம்பூர் சென்னை - 600 082. 3) திரு.S.K.பாலசுப்பிரமணியன் (ஜாமீன்தாரர்/அடமானதாரர்) த/பெ. திரு.கருப்ப கவுண்டர், எண்.41A, அர்த்தனாரி பள்ளி தெரு S P புதூர், நாமக்கல் - 637001 ஆகியோர்கள் சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II-க்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையான 31.08.2025 அன்றுள்ளபடி ரூ.5,04,09,588.96 (ரூபாய் ஐந்து கோடியே நான்கு இலட்சத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 24.10.2025 ஆம் தேதியன்று (காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

சொத்தின் விளக்கம்:

சொத்து எண். 1: மூல ஆவணதாரரின் பெயர்: திரு. S K பாலசுப்ரமணியன்: நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் இணை 1 சார்பதிவு மாவட்ட அதிகார வரம்பிற்குட்பட்ட, நாமக்கல் நகராட்சி சந்தைப்பேட்டைப்புதூர் பெரியபட்டி கிராமத்தின் சர்வே எண்.226/53 & 226/25, T. சர்வே எண்.295/2,272/2,282,283,284,285,286,287,288, D.எண்:39, 41, 41a, 21,23,25,27,29,31& 33, பிளாக் எண்.14 , வார்டு-C, அர்த்தநாரி பள்ளி தெருவில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி (a) சர்வே எண்.226/53 இல் உள்ள பெரிய அளவிலான மொத்தம் 0.38 ஏக்கரில் 3840 சதுர அடியின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறமும் 48அடி, வடக்கு தெற்காக இருபுறமும் 80அடி, எல்லைகள்: வடக்கில்: திருமதி.நல்லம்மாள் மற்றும் திரு.பாலசுப்ரமணியம் ஆகியோர்களின் உரிமை பெற்ற 10 அடி அகல பொது வழி; தெற்கில்:ராஜாமணி அவர்களின் சொத்து, கிழக்கில்: திரு.பழனி கவுண்டர் அவர்களின் சொத்து; மேற்கில்: 20அடி வடக்கு தெற்கு CC சாலை. (b) சர்வே எண்.226/25 இல் உள்ள பெரிய அளவிலான மொத்தம் 0.19 ஏக்கரில் 3925 சதுர அடியின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறமும் 50அடி, வடக்கு தெற்காக இருபுறமும் 78அடி, எல்லைகள்: வடக்கில்:சர்வே எண்.226/55 இல் உள்ள ராஜாமணி அவர்கள் சொத்து. தெற்கில்:அர்த்தநாரி பள்ளி; கிழக்கில்: திரு.ராஜூ அவர்கள் வீட்டு மனை மற்றும் திரு.வேலன் அவர்கள் வீடு; மேற்கில்: 20அடி வடக்கு தெற்கு CC சாலை.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 2,24,64,000/- | டேவணித்தொகை ₹ 22,46,400/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்து எண்.2: மூல ஆவணதாரரின் பெயர்: திரு. S K பாலசுப்ரமணியன்: நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் இணை 1 சார்பதிவு மாவட்ட அதிகார வரம்பிற்குட்பட்ட, நாமக்கல் நகராட்சி சந்தைப்பேட்டைப்புதூர் பெரியபட்டி கிராமத்தின், T. சர்வே எண்.295/1 பிளாக் எண்.14, வார்டு-C, அர்த்தநாரி பள்ளி தெருவில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி (a) சர்வே எண்.295/1 இல் உள்ள பெரிய அளவிலான மொத்தம் 0.38 ஏக்கரில் 2340 சதுர அடியின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறமும் 30அடி, வடக்கு தெற்காக இருபுறமும் 78அடி, எல்லைகள்: வடக்கில்: ராஜாமணி அவர்களின் சொத்து, தெற்கில்:திரு.ரங்கசாமி அவர்களின் சொத்து, கிழக்கில்: திரு.சட்டி கவுண்டர் அவர்களின் சொத்து; மேற்கில்: 20அடி வடக்கு தெற்கு CC சாலை.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 67,38,000/- | டேவணித்தொகை ₹ 6,73,800/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 21.10.2025; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 24.10.2025 காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

Portal of E-Auction:https://baanknet.com

தேதி : 20.09.2025; இடம் : சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி



## வரி விளம்பரம்

**PUBLIC NOTICE**

CHANGE OF NAME

**பெயர் மாற்றம்**

RESHMIKA.G
த/பெ. Govindarajan.G
பிறந்த தேதி: 09/12/2009
பிறந்த மாவட்டம்: சென்னை,
பழைய எண்: 26/3 புதிய எண் 2
கருணாநிதி 1வது தெரு, மேற்கு
மாம்பலம் சென்னை-600033
என்ற முகவரியில் வசிக்கும்
என் மகள் இனி
RESHMIKA.R
என அழைக்கப்படுவார்.
(தாயார்) Rajarajeshwari.V

**பெயர் மாற்றம்**

நான், ஜி.ஏ.அருளானந்தம் என்கிற ராஜா அ அருளந்தம், த/பெ. திரு.அந்தோணிசாமி, பிறந்த தேதி: 1 ஜூலை 1971 (பிறந்த மாவட்டம்: காஞ்சிபுரம்), வசிக்கும் முகவரி: பழைய எண். 49, புதிய எண்.9, கோவில் தெரு, உத்திரமேரூர், ராவதநல்லூர், ஆர்.என்.கண்டிகை, காஞ்சிபுரம் -603403, இன்று முதல் அ.அருளானந்தம் என்று அழைக்கப்படுவேன்.
ஜி.ஏ.அருளானந்தம் என்கிற ராஜா அ அருளந்தம்
காஞ்சிபுரம்,
பிப்ரவரி 7, 2025.

I, B. SMRUTHYA D/o: V. Balaji aged 27 years Residing at Flat F3, Garudathri, New No.2, Subramanian street, West Mambalam,Chennai-600033, Changed my name as From B. SMRUTHYA to B. SMRITHYA. I shall be henceforth be known as B. SMRITHYA

I, RENUKA BALAJI W/o: V. Balaji aged 55 years Residing at Flat F3, Garudathri, New No.2, Subramanian street, West Mambalam, Chennai-600033, Changed my name as From RENUKA BALAJI to G. RENUKA. I shall be henceforth be known as G. RENUKA.

**CHANGE OF NAME**

MY DAUGHTER, **BINA,** born on 13th January 2012, (District of Birth : Kancheepuram), residing at Old No. 1/49, New No. 5/30, Pillaiyar Kovil Street, Vittlapuram Village and Post, Kancheepuram-603 102, shall henceforth be known as **M BINA**
C.K.Mehanathan (Father)
Kancheepuram, 1st August 2025.

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் — இளமை! புதுமை! இனிமை!

தமிழ்மணி
dinamanithamizhmani@gmail.com 21.9.2025

**பறை உணர்த்தும் பாடம்**

**நாலடியார்**

**கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென்று அலறப்**
**பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்,-மணங் கொண்டீண்டு**
**'உண்டுண்டுண்டு' என்னும் உணர்வினாற் சாற்றுமே**
**'டொண் டொண் டொண்' என்னும் பறை.**

*(பாடல் 25 அதிகாரம்: யாக்கை நிலையாமை)*

உறவின் முறையார் எல்லாரும் கூட்டமாகக் கூடிக் கொண்டு கலீரென்று பெருங்குரலிலே கூவி அழ, சடலத்தைத் தூக்கிக் கொண்டு போய்ச் சுடுகாட்டிலே சேர்ப்பவர்களைக் கண்டுள்ளோம். அப்படிப் பார்த்திருந்தும், திருமணம் செய்துகொண்டு, இவ்வுலகத்திலே உறுதியாக இன்பம் உண்டு உண்டு என்று சொல்லும் மயக்கமான அறிவுள்ளவனை என்ன சொல்வது? அவனைக் குறித்து, 'தொண் தொண்' என ஒலிக்கும் சாக்காட்டுப் பறைதான் அவனுக்கு யாக்கையின் நிலையாமையைத் தெரிவிக்கும் போலும்!.

# இயற்கை காத்தோர் எம்சங்க மூத்தோர்

புலவர் வே.பதுமனார்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடிகளாகிய மாந்தர் படைத்துக்கொண்ட மொழி தமிழ். உலகத்து மாந்தர் எல்லாம் தாம் எண்ணியதைக் கையினால் உரை செய்த காலத்தே நாவை அசைத்துப் பேச்சை அமைத்துக் கொண்டனர் தமிழர். தமிழர்தம் வாழ்வியல் இலக்கணத்தைத் தொல்காப்பியர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பதிந்து வைத்துள்ளார். ஒழுக்க நெறிப்பட்ட வாழ்வைத் திணை என்றும், அத்திணை அகம், புறம் என்றும் வகுத்தார் தொல்காப்பியர். மாந்தர் வாழும் நெறிகளுக்கெல்லாம் முதன்மையானவை நிலமும் பொழுதுமே. இதனை,

**முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே**

எனும் தொல்காப்பியத்தின் நான்காம் நூற்பாவால் அறியலாம்.

நிலத்தைக் 'காடுறை உலகம்', 'மைவரை உலகம்', 'தீம்புனல் உலகம்','பெருமணல் உலகம்' என முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்சொல்லிய முறையால் சொல்லியது தொல்காப்பியம். நிலம், பொழுது இவற்றின் சுழற்சியால் கருவான தெய்வம், உணவு, பறவை, பூ, விலங்கு, தொழில் முதலானவற்றைக் கருப்பொருள் என்றும், நிலத்துக்குரிய ஒழுக்க உணர்வை உரிப்பொருள் என்றும் குறித்தனர் நம் முன்னோர். இத்தகைய வாழ்விலக்கணம் உலகில் உள்ள எந்த நாட்டுக்கும், எந்த மொழிக்கும் இல்லை.

உலகத்து உயிர்த்திரள் எல்லாம் உய்தி பெற வேண்டுமானால் விசும்பினின்று வீழும் நீர் வேண்டும். அது அருவி நீரானாலும், ஆற்று நீரானாலும், ஊற்று நீரானாலும், ஏன் உப்புக் கரிக்கும் கடல்நீரே ஆனாலும் உலகத்து உயிர்களுக்கு இன்றியமையாதனவே ஆகும்.

ஈரடிக் குறளால் உலகளந்த திருவள்ளுவர்,

**நீரின்றி அமையாது உலகு எனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு. (திருக்குறள் 20)** எனவும்,

**விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது. (திருக்குறள் 16)**

எனவும் இயற்கை வழிப்பட்ட வாழ்வையே வான்சிறப்பு அதிகாரத்தில் அடையாளப்படுத்தியுள்ளார்.

ஒழுக்க நெறிப்பட்ட வாழ்வைத் திணை என்றும், அஃது அல்லாத வாழ்வை அஃறிணை என்றும் வகைப்படுத்திய தொல்காப்பியர், இயற்கையில் பூத்த பூக்களையே திணைகளின் பெயராக்கிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று குறித்தார். தமிழகமன்னர்கள்சேரர்-பனம்பூ,சோழர்-ஆத்திப்பூ,பாண்டியர்-வேப்பம்பூ அணிந்து போருக்குச் சென்றனர்.

ஒரு நாட்டுக்குக் காவலாக அரணாகத் தமிழர் இயற்கையையே ஆக்கிப் போற்றினர்.

**மணீநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரசு. (திருக்குறள் 742)**

எனப் பட்டியலிடுவார் திருவள்ளுவர். தெளிவான வற்றாத நீர், பரந்து விரிந்து கிடக்கும் மண், உயரிய மலை, நிழல்தரும் அழகிய மரங்கள் அடர்ந்திருக்கும் காடு, இவை எல்லாம் நாட்டுக்குக் காவலாய் அமைந்த உயிர் அரண் ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இளங்கோ அடிகளும் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தைத் **"திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும்"** என இயற்கையைப் போற்றியே தொடங்குகிறார்.

தமிழர்தம் இலக்கியங்களின் பெயர்கள் - குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, பட்டினப் பாலை, நெடுநல்வாடை என்னும் நூல் பெயர்களின் தலைப்புகளே தலைப் புகழாய் அமைவதை எண்ணி வியக்கிறோம்.

பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் பாரியை முடியுடை மன்னர் மூவரும் முற்றுகை இட்டனர். முற்றுகை நீண்டதேயன்றிப் பாரியின் பறம்பு மலையை வெல்ல முடியவில்லை. ஏன்? பாரியின் பறம்பு மலை இயற்கையால் வளம் சுரக்கும் மலையே ஆகும் எனப் பதிகின்றார் புலவர் கபிலர்.

உழவர் உழாமலேயே பறம்பு நாட்டில் நால்வகை இயற்கைப் பொருள்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஓங்கி வளர்ந்து முற்றிய மூங்கில்கள் தரும் மூங்கில் அரிசி; இரண்டாவது - இனிய சுளைகள் உள்ள பலாப்பழங்கள் தரும் மரங்கள்; மூன்றாவதாக வள்ளிக் கொடிகளில் முற்றித் தொங்கும் வள்ளிக் கிழங்குகள்; நான்காவதாக குரங்குக் கூட்டங்கள் பாறைக்குப் பாறை தாவுதலால் தேன் கூடுகள் சிதைந்து மலைத் தேன் ஒழுகும்; அவன் மலை வானாளவியது; வானத்து விண்மீன்களைப் போன்றது அந்த மலையின் சுனைகள் என்கிறார் குறிஞ்சி பாடும் புலவர் கபிலர்.



**நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்,**
**உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே:**
**ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே;**
**இரண்டே, தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே;**
**மூன்றே, கொழுங் கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே;**
**நான்கே, அணி நிற ஓரி பாய்தலின், மீது அழிந்து,**
**திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே;**
**வான் கண் அற்று, அவன் மலையே; வானத்து,**
**மீன் கண் அற்று, அதன் சுனையே;**
**(கபிலர் பாடல் — புறம்—109)**

உலக்கைப் பாட்டு என்னும் வள்ளைப்பாட்டிலும் இயற்கை உவமைகள் தோழி தலைவி உரையாடலால் வெளிப்படுகின்றன. விரைந்து மணம் முடிப்பேன் என்று சென்ற தலைவன் வரவில்லை அவன் பொய்யன். ஆனாலும், அவன் மலையில் அருவி கொட்டுகிறதே; அவன் மலையில் மழை மேகங்கள் சூழ்ந்துள்ளனவே என்று தலைவி தலைவனைப் பழித்து வேதனைப்படுகிறாள். குன்ற நாடன் அவன் அவனிடம் பொய் தோன்றாது; அவ்வாறு பொய் தோன்றினால் குளிர் வெண்ணிலவில் தீத்தோன்றியது போலாகும்; குளிர்ப் பொய்கையில் பூத்த குவளை மலர்கள், வெந்து வீழ்வது போலாகும், சூரியச் சுடரில் இருள் தோன்றுவது போலாகும் என்று இயற்கை உவமைகளை அடுக்கித் தேற்றுகிறாள் தோழி.

**குன்று அகல் நல் நாடன் வாய்மையில் பொய் தோன்றின்,**
**திங்களுள் தீத் தோன்றியற்று... மலைநாடன்**
**ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழல்கயத்து**
**நீருள் குவளைவெந் தற்று...வெற்பன்**
**துறக்குவன் அல்லன்**
**தொடர்புள் இனையவை தோன்றின், விசும்பில்**
**சுடருள் இருள் தோன்றியற்று.**
**(குறிஞ்சி — கலித்தொகை 41)**

கார்காலம் வந்ததும் என் தேர் ஏறி வருவேன் என்ற தலைவன் குதிரை பூட்டிய தன்தேரை வேகமாக ஓட்டிக்கொண்டு தன் தலைவியைக் காண வேகவேகமாய் வருகிறான். தலைவியை அடைய இன்னும் சிலமணித்துளிகளே உள்ளன. தலைவியின் தோழியும் அதைப்பார்த்துவிட்டாள். ஆனால், தலைவன் தன் தேரை நிறுத்தி விட்டு இறங்கினான். வழியில் ஆங்காங்கே தேன் உண்ணும் வண்டுகள் இணை இணையாகப் பூக்களில் அமர்ந்து தேனை உண்கின்றன. தன் தேர்மணிகளின் ஒலியால் அவை பிரியலாகுமே என்று எண்ணிய தலைவன், மணியுள் ஒலிஎழுப்பும் நாக்குகளைச் சேர்த்துக் கட்டிவிட்டு வருகிறான். பிரிந்த தலைவியைக் காணவந்த தலைவன் இணையோடு தேன்உண்ணும் வண்டுகள் பிரியலாகாது என்ற அருள் உள்ளம் இயற்கையோடு வாழ்ந்த எம்சங்க மூத்தோர்க்கு இருந்ததை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

வள்ளல் பெருமான் இறைவனைக் கருவில் கலந்த துணை, கனியில் கலந்த அமுது, கருத்தில் கலந்த களிப்பு, உருவில் கலந்த அழகு, உயிரில் கலந்த உறவு என அழைத்து, உலக உயிர்த்திரள் எல்லாம் மருவிக் கலந்து வாழ்வதற்கே வாய்த்த தருணம் இதுவென்றே வாயே பறையாய் அறைகின்றேன் என்கின்றார். இந்த விழைவின் அடிப்படை இயற்கை நலம் கொழிக்கும் வாழ்வு. அந்த வாழ்வை நோக்கி இவ்வுலகை நடத்திய நம்சங்க மூத்தோர் நெறிநோக்கி இவ்வுலகம் நடக்கட்டும்! சூழலியல் சிறக்கட்டும்!.

# சூளாமணி வலியுறுத்தும் நிலையாமை

முனைவர் ப.ஜீவகன்

மனித மனம் ஆசைவயப்படுவது. ஆசைதான் துன்பத்துக்குக் காரணம் என்பதை புத்தரும் மகாவீரரும் இன்னும் பல மகான்களும் நமக்கு அறிவு புகட்டியுள்ளனர்.

இந்த உலகம் நிலையற்றது. நாம் ஐம்பொறி வாயிலாக அனுபவிக்கும் இன்பம் நிலையற்றது. இளமை, செல்வம், யாக்கை என நிலையாமையை நாலடியாரும் வலியுறுத்துகிறது.

திருக்குறளும்

**'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**

எனக் கூறுகிறது. பிறப்பும் இறப்பும், உறங்குவதும் விழிப்பதும் போல்வது. நாம் வாழ்நாள் கணக்கைக் காண்பிக்கவே இரு சுடரும் தோன்றுகிறதோ என எண்ண வேண்டும்.

சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் பரக்கப் பாடினாலும், நிலையாமையையும் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளது. நிலையாமையை வலியுறுத்தியே புறத்திணையில் வரும் திணைப் பகுப்பும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்மை எனும் போர் முறைகளை வைத்து பகுக்கப்பட்டாலும் 'வாகை' எனும் வெற்றித் திணைக்கு அடுத்தாற்போல 'காஞ்சி' என்ற நிலையாமையை உணர்த்தும் திணையையும் பகுத்துள்ளனர்.

நிலையாமையை உணர்ந்தால் வாழ்வு உயர்வு பெறும் என்கிற நோக்கில் ஆடைக்கு வரம்பு காட்டி வாழ முற்படுவர் என்ற நோக்கில் நம் முன்னோர் நிலையாமையை வலியுறுத்தியுள்ளனர்.

சோழன் நலங்கிள்ளியிடம் மறத்தை விடுத்து அறத்தை வலியுறுத்த நிலையாமையை வலியுறுத்தும் விதமாக,

**'தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்'**
**மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்'**
**— (புறம் பா. 27)**

எனும் நிலையாமை நல்லறத்தை வலியுறுத்தும் புறநானூற்றுப் பாடல்வழி அறிய முடிகிறது போலும்.

**'நில்லா உலகத்து நிலையாமை நீ**
**சொல்ல வேண்டா தோன்றல் முத்து அறிந்த**
**முழுது உணர் கேள்வியான்'**
**—கயமனர் (புறம் 361)**

என்ற பாடல் மூலமும் உலகம் நிலையாமையை எடுத்துரைத்து நம்மை நல்வழிப் படுத்துகிறது. அதைப்போலவே தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியும் நிலையாமையை வலியுறுத்துகிறது.

எதிர்பாராத சூழலில் ஒருவனை மதம் பிடித்த யானை கொலைவெறித் தாக்குதலோடு துரத்துகிறது; அவனோ உயிர்பயத்துடன் விரைந்து ஓடுகிறான். அவ்வாறு தலைகால் தெறியாமல் வெறிக்க ஓடியவன் எதிர்பாராமல் புதர் மண்டிய பாழுங் கிணற்றில் வீழ்கிறான். எதிர்பாராமல் அக்கிணற்றில் தொங்கிய நாணல் புற்களைப் பற்றித் தொங்குகிறான். அக்கிணற்றிலோ விஷம் நிறைந்த பாம்புகள் படமெடுத்தபடி கிணற்றின் கீழ்பகுதியில் இருப்பதைக் காண்கிறான். அவன் பற்றியிருக்கும் நாணல் புல் அறுந்துகொண்டே இருக்கிறது. எந்நேரமும் கைப்பிடி தளர்ந்து பாம்புக்கு இரையாகலாம் என்ற பயத்துடனே நிமிர்ந்து பார்க்கிறான்.

அப்போது, கிணற்றின் மேலுள்ள ஒரு மரக்கிளையிலிருந்த தேனடையிலிருந்து தேன் சொட்டுகிறது. அந்த நேரத்தில் ஒரு சொட்டுத் தேன் அவன் நாவில் விழுகிறது. இத்தனை உயிர் பயத்திற்கிடையிலும் அவன் சுவைத்த ஒருசில நிமிட இன்பம் போன்றது நீர்க்குமிழி, வானவில் போன்ற நிலையற்ற இன்பத்தை எண்ணி மகிழ்ந்திராமல் அடுத்த பிறவிக்கேற்ற நல்லறத்தை நாடிக் கொள்க' என வலியுறுத்துகிறது இப்பாடல்.

**'ஆனை துரப்ப அரவுறை ஆழ்குழி**
**நானவிர் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்**
**தேனின் அழிதுளி நக்கும் திறத்தது**
**மாநுடர் இன்பம் மதித்தினை கொள்நீ'**
**(சூளாமணி —துறவு சருக்கம்)**

என மனிதப் பிறவியின் நிலையற்ற வாழ்வினை படம்பிடித்துக் காட்டுகிறது. மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து 'இனியனவே இனி செய்வேன்' என்று அடங்கி நோற்று இன்னுயிர்க்கு உறுதிபயப்பனவே நாடவேண்டும் என்கிறது.

வாழுயிர் வாங்கும் காலன் வருவதற்குள் நிலையாமையை உணர்ந்து தவமியற்றி உய்வடையச் செய்கிறது.

**'பிறந்தனர் பிறந்து சாலப் பெருகினர்**
**பெருகிப் பின்னை**
**இறந்தனர் என்ப தல்லால் யாவரும்**
**இன்று காறும்**
**மறைந்து உயிர் வாழா நின்றார்**
**இல்லையால் வாழி நெஞ்சே**
**சிறந்தது தவத்தின் மிக்கது இன்மையே**
**சிந்தி கண்டாய்**
**(சூளாமணி —துறவு சருக்கம்)**

என காப்பியத்தில் வரும் பயாபதி மன்னனுக்கு கூறும் நிலையாமையை நமக்குமாக உணர்த்துகிறார் இக்காப்பிய ஆசிரியர் தோலாமொழித் தேவர்.



கம்பனின் தமிழமுதம் - 63

# கருங்கல்லும் பொன்னிறம் பெறலாம்!

வழக்குரைஞர் த. இராமலிங்கம்

கதைப்போக்கு எப்படி இருந்தாலும், ஆங்காங்கே பொதுக் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் பதித்துக்கொண்டே செல்வான் கம்பன். மூல நூலான வான்மீகத்தில் இல்லாத காட்சிகளையும் உருவாக்குவான். அப்படி ஒரு காட்சிதான் இது. இராமன் மிதிலையில் வில் முறித்த பின்னர், சீதைக்கும் இராமனுக்கும் திருமணம் உறுதியானது. அயோத்தியில் இருந்து மிக நீண்ட ஊர்வலம், திருமணத்தில் கலந்துகொள்ள புறப்பட்டது.

பொதுமக்களும், யானைப் படை, குதிரைப் படை, தேர்ப்படை உள்ளிட்ட படைவீரர்களும், அரச குடும்பத்தினரும் ஊர்வலமாகக் கிளம்பினர். இரவு கவிந்தது. வழியில் இருந்த சந்திரசயிலம் என்னும் மலை அடிவாரத்தில் எல்லோரும் தங்கினர். அந்த நாட்டின் இளைஞர்கள் கொண்டு வந்திருந்த குதிரைகள், இரவுக்காக அங்கு கட்டி வைக்கப்பட்டன. அந்தக் குதிரைகள் அமுதம் போன்ற உணவு கொடுத்து வளர்க்கப்பட்டவை. கர்ஜிப்பதைப்போல் கனைக்க வல்லவை. அவையெல்லாம், துருக்கி நாட்டில் இறந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

'உண் அமுதம் ஊட்டி, இளையோர் நகர் கொணர்ந்த; துண்ணெனும் முழக்கின; துருக்கர் தர வந்த;' என்று எழுதிச் செல்கிறான் கம்பன். துருக்கி நாட்டுடன் தமிழ்நாட்டுக்கு வணிகப் போக்குவரத்து, கம்பன் காலத்திலேயே நிகழ்ந்தது என்பதற்கான வரலாற்றுப் பதிவு இது!

நிறைய தேர்களும் அந்த ஊர்வலத்தில் வந்தன. அந்தத் தேர்கள் உருண்டோடும் சக்கரங்களின் சுற்று வட்டம் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன. அயோத்தி நகர் தொடங்கி, மிதிலை நகரில் தங்கும் இடம் வரையிலான சாலைகள் மண் சாலைகள் அல்ல. இருண்ட கல்லாக இருந்த, கருங்கல் பதிக்கப்பட்ட சாலைகள் அவை. வரிசையாகத் தேர்கள் அந்த கருங்கல் சாலைகளில் பயணித்து வந்திருந்தன. அந்த கருங்கல் சாலைகள் இப்போது நிறம் மாறி இருந்தன. தங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த் தேர்ச் சக்கரங்களின் சுற்று வட்டம் கருங்கல்லில் உரசி உரசி, சாலைகளின் கரிய நிறம் மாறி, தங்கத்தால் அமைக்கப்பட்ட சாலைகள்போல் அவை மின்னின. சாலைகளின் கரிய நிறம், தங்க நிறமாக மாறிய இந்தத் தன்மைக்குக் கம்பன் சொன்ன உவமைதான் அபாரம். அந்த அழகை ரசிக்க, நாம் கொஞ்சம் வள்ளுவனுக்குள் போய்வர வேண்டும்.

'அறிவு மனத்தில் இருந்து வருவதுபோலத்தான் தோன்றும். ஆனால், எப்படிப்பட்டவர்களுடன் ஒருவன் பழகுகிறானோ, அவர்களின் அறிவுதான் அவனுக்கு இருக்கும்' என்கிறான் வள்ளுவன்.

'மனத்து உளதுபோலக் காட்டி, ஒருவற்கு இனத்து உளதாகும் அறிவு' என்பது குறள். உயர்ந்தவர்களுடன் பழகினால், அவர்களது குணம் அப்படியே உடன் பழகுபவர்களுக்கு இறங்கிவிடும். இதன் எதிர்மறையும் உண்மைதான். இந்தக் குறளின் பொருளை அப்படியே கொண்டு வந்து தனது கவிதையில் இணைத்துக்கொண்டிருக்கிறான் கம்பன். அந்தப் பாடலைப் பார்த்துவிடலாம்;

**'தெருண்ட மேலவர், சிறியவர்ச் சேரினும், அவர்தம்**
**மருண்ட புன்மையை மாற்றுவர்' எனும் இது வழக்கே;**
**உருண்ட வாய்தொறும், பொன்உருள் உரைத்து உரைத்து ஓடி**
**இருண்ட கல்லையும் தன் நிறம் ஆக்கிய — இரதம்.**

தெளிந்த அறிவுடைய பெரியவர்கள், தம்மைவிட அறிவில் குறைந்த சிறியோரிடம் பழக நேர்ந்தாலும் தங்களது தெளிந்த சிந்தனையை சிறியவர்களுக்குக் கற்றுத் தருவார்களே அல்லாமல், அவர்கள் குணம் மாறிவிடாது. அதைப் போலவே, 'தங்கத்தினால் அமைக்கப்பட்டிருந்த தேர்ச் சக்கரத்தின் சுற்றுவட்டம், கருங்கல் சாலைகளில் உருண்டு செல்லச் செல்ல, அந்த உராய்வினால் கருங்கல் சாலைகள், பொன்னிறத்தில் மின்னிக்கொண்டிருந்தன...' என்பது பொருள். 'எப்போதும் உயர்ந்தவர்களுடன் பழகுவதே நன்மை தரும். அவர்கள், மிகச் சாதாரணமான மக்களுடனும் பழகி, அவர்களையும் உயர்த்துவார்கள்' என்னும் சிந்தனையை, இயல்பாக நடைபெறும் ஒரு நிகழ்வினில், இணைத்துச் சொல்கிறான் கம்பன்.

# இந்த வாரம்

கலாரசிகன்

இரண்டு வாரங்களுக்கு முன்பு சென்னை வந்திருந்தார் கொழும்பில் இருந்து வெளிவரும் 'தமிழன்' நாளிதழின் முதன்மை ஆசிரியரான சிவராஜா என்று அழைக்கப்படும் சிவ. ராமசாமி. நிமிஷங்கள் அல்ல, சில மணி நேரம் நாங்கள் நேற்றைய, இன்றைய இலங்கை அரசியல் குறித்தும், யாழ்ப்பாணத் தமிழர்களின் துயரங்கள், சவால்கள் குறித்தும், இலங்கைத் தமிழ் எழுத்துலகம் குறித்தும் பேசிக் கொண்டிருந்தோம்.

எங்கள் சந்திப்பின் நினைவாக 'தமிழன்' இதழின் ஆசிரியர் கையொப்பமிட்டு எனக்கு அன்பளிப்பாகத் தந்த புத்தகம் த.சபாரத்தினம் எழுதிய 'தந்தை செல்வா'. இலங்கை வரலாற்றில் முன்னணித் தமிழ்த் தலைவராகக் கருதப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் அரசியல் குறித்த வரலாறுதான் 'தந்தை செல்வா'. அவரது 125-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால் மீள்பதிவு செய்யப்பட்டிருக்கிறது த.சபாரத்தினம் எழுதிய அந்தப் புத்தகம்.



'எனக்கும் தந்தை செல்வாவுக்கும் உள்ள தொடர்பு ஓர் அரசியல் தலைவருக்கும், ஒரு பத்திரிகையாளனுக்கும் உள்ள தொடர்பு மட்டுமே. ஒரு நல்ல பத்திரிகையாளரின் பணி என்பது, தான் நெருங்கியும் அதே நேரத்தில் விலகியும் நின்று அவதானித்தவற்றையும், அறிந்தவற்றையும் பதிவு செய்வது' என்று தமது முன்னுரையிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறார் த.சபாரத்தினம்.

தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பியின் அணிந்துரையுடன் வெளிக்கொணரப்பட்டிருக்கும் இந்தப் புத்தகம்தான் தந்தை செல்வாவின் அனைத்துப் பரிமாணங்களையும், நிலைப்பாடுகளையும் பதிவு செய்யும் ஆவணமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அத்தனை விவரங்கள், தகவல்கள், நிகழ்வுகள்... மலைப்பை ஏற்படுத்துகின்றன!

கடந்த நூற்றாண்டு இலங்கைத் தமிழர்களின் அரசியல் சிந்தனைக்கு அடித்தளம் இட்டவர் தந்தை செல்வாதான். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் முடிவை எதிர்த்து, இலங்கையில் தமிழர் அரசியல் உரிமைக்கான இயக்கத்தைத் தொடங்கியவரும் அவர்தான். இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழ் மக்களின் பிரதேச பிரஜா உரிமையை (குடியுரிமையை) இலங்கைத் தமிழர் போராட்டத்தின் ஓர் அங்கமாகப் பிரகடனப்படுத்தியதும், இலங்கைத் தமிழரின் அரசியல் உரிமைக்கான தளத்தை வடக்கு-கிழக்கு என்கிற புவியியல் வரையறைக்குள் கொண்டு வந்ததும் அவர்தான்.

1965 மார்ச் 24-ஆம் தேதி தந்தை செல்வா முன்வைத்த கோரிக்கைகள்தான் இன்றுவரை இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளாகத் தொடர்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழ்; நீதிமன்றங்கள் தமிழில் இயங்க வேண்டும்; அதிகாரங்கள் கொண்ட மாவட்ட சபைகள் நிறுவப்பட வேண்டும்; தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகள் சிங்களவர் மயமாக்கப்படலாகாது-இவைதான் அவை. தமிழர் பிரதேசங்களில் இனிமேல் சிங்களக் குடியேற்றம் இடம்பெற அனுமதியோம் என்பது வாக்குறுதியாகவே தொடர்கிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் பிரவேசத்துக்கு முந்தைய இலங்கை அரசியல் குறித்துத் தெரிந்து கொள்ள விரும்புவோர் கட்டாயம் படித்திருக்க வேண்டிய 'தந்தை செல்வா' என்கிற இந்தப் புத்தகத்தை அன்பளிப்பாகத் தந்து எனது புரிதலை விரிவுபடுத்திய 'தமிழன்' முதன்மை ஆசிரியர் சிவராஜாவுக்கு எத்துணை நன்றி சொன்னாலும் போதாது.

சிறுவர் இலக்கியம் என்பது அநேகமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலைமை. யூடியூபில் வரும் அந்நியத்தனமான அனிமேஷன் கார்ட்டூன்கள், படக்கதைகளைக்கூடக் குழந்தைகளிடமிருந்து அந்நியப்படுத்தி விட்டன. கண்ணன், கோகுலம், அம்புலிமாமா என்று சிறுவர்களுக்கான இதழ்கள் வெளிவந்த காலம் மறந்தே விட்டது. ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகளில் முதன்மை பெற்ற பிறகு, படிப்பதாக இருந்தாலும்கூடக் குழந்தைகள் ஆங்கிலப் புத்தகங்களையும், கதைகளையும் தான் நாடுகின்றனர்.



பெரியவர்கள்கூட ரசித்துப் படிக்கும் அளவில் சிறார் கதைகள் தமிழில் வெளிவந்தன, வந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கதைகளை தங்களது குழந்தைகளுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் சொல்லித் தூங்கவைப்பதும், அவர்களை எழுத்துக்கூட்டி படிக்கவைத்துத் தமிழ் கற்றுக் கொடுப்பதும் எல்லாம் இன்று கனவாய் பழங்கதையாய் மாறிவிட்டன என்றே தோன்றுகிறது. அப்படிப்பட்ட சூழலில் எழுத்தாளர் சுகுமாரன் துணிந்து ஒரு பாராட்டுக்குரிய பணியைச் செய்திருக்கிறார்.

குழந்தைகளைப் பற்றிய படைப்புகள், குழந்தைகளே எழுதிய படைப்புகள், குழந்தைகளுக்கான படைப்புகள் என சிறார் இலக்கியம் மூன்று வகைப்பாட்டில் அமைந்தது. அந்த வகையில், சுகுமாரன் தொகுத்திருக்கும் புத்தகத்தில் உள்ள 60 கதைகள் சிறார்களுக்கானவை என்றால், 40 கதைகள் சிறார்கள் பற்றியவை.

மகாகவி பாரதியார்தான் தமிழில் சிறார் இலக்கிய முன்னோடி எனலாம். (ஔவைப் பாட்டியைப் பட்டியலில் சேர்க்காவிட்டால்...) ராஜாஜி, ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, அழ. வள்ளியப்பா, பெரியசாமி தூரன், வாண்டு மாமா, வை.கோவிந்தன், தி.ஜ.ர. என்று பிரபல எழுத்தாளர்கள் பலர் சிறார்களுக்காகவும் எழுதி இருக்கிறார்கள். அவர்களது படைப்புகளை தனது புத்தகத்தில் இணைத்திருக்கிறார் சுகுமாரன். அழ.வள்ளியப்பாவின் மறைவுக்குப் பிறகான எழுத்தாளர்களின் படைப்புகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழில் வெளிவந்த தேர்ந்தெடுத்த சிறார் கதைகளைத் தொகுத்து '100 சிறந்த சிறார் கதைகள்' என்று தலைப்பிட்டு வெளிக்கொணர்ந்திருப்பதற்காக அவரை விருது வழங்கிப் பாராட்ட வேண்டும். அவரது இந்தத் தொகுப்பை ஒவ்வொரு பள்ளிக்கூட நூலகத்திலும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

2015-ஆம் ஆண்டு எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் திருவண்ணாமலையில் 'டிஸ்கவரி' பதிப்பகம் மூன்று நாள் சிறுவர் இலக்கிய முகாமை நடத்தியது. அதை நான் தவற விட்டுவிட்டேன். அடுத்த முகாம் எப்போது? நான் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள பல குழந்தைகளும்கூட ஆர்வமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.



கவிஞர் அரிமதி இளம் பரிதியின் கவிதைத் தொகுப்பு 'கனல்'. 'கலைமாமணி' விருதுபெற்றவர் என்பதால் தனது தொகுப்பில் தன் விவரக் குறிப்போ, முன்னுரையோ, பிரபலங்களின் அணிந்துரையோ வேண்டாம் என்று கருதிவிட்டார் எனத் தோன்றுகிறது.

**பனியனில்**
**மாவீரன் பிரபாகரன்**
**படத்தோடு**
**பயணித்தவரை**
**உணர்வைக்**
**கட்டுப்படுத்த முடியாமல்**
**'பெருமையாக உள்ளது' என்றேன்**
**அவன்**
**'க்கியா...?' என்றான்...!**

அடுத்த வாரம் சந்திப்போம்...

# தொழில்நுட்பத்துக்கும் மனித சிந்தனைக்குமான வேறுபாட்டை உணர்த்த வேண்டும்

## ஆசிரியர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

**சென்னை, செப். 20:** 'எந்த சந்தேகம் எழுந்தாலும் கூகுள், செயற்கை நுண்ணறிவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்ற மெத்தனம் மாணவர்களுக்கு வந்துவிடக் கூடாது. அவர்களுக்கு தொழில்நுட்பத்துக்கும் மனித சிந்தனைக்கும் உள்ள வேறுபாட்டை ஆசிரியர்கள்தான் உணர்த்த வேண்டும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2,715 புதிய ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியைத் தொடங்கி வைத்து, பயிற்சிக் கையேட்டை வெளியிட்டார்.

தொடர்ந்து, ரூ.277 கோடியில் பாரத சாரண சாரணியர் தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் 243 புதிய பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.94 கோடியில் கட்டப்பட்டுள்ள 59 பள்ளிக் கட்டடங்களை அவர் திறந்து வைத்தார்.




சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சி கையேட்டை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் உள்ளிட்டோர்.

பிளஸ் 2, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற 142 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.10,000-க்கான காசோலைகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ஆசிரியர்கள் புத்தகங்களில் உள்ள பாடங்களை மட்டும் கற்பிக்காமல், தான் கற்றதையும், தங்களது அனுபவத்தையும் சேர்த்து மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து, நல்லொழுக்கம் மிக்க சமுதாயத்தை வடிவமைக்கும் திறன் பெற்றவர்கள். எனவே, புதிய ஆசிரியர்களுக்கு நாட்டின் எதிர்காலத் தூண்களுக்கு சொல்லிக்கொடுக்கிறோம் என்ற பொறுப்புணர்வு மேலோங்கி இருக்க வேண்டும். மாணவர்களின் நண்பர்களாக ஆசிரியர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில், எந்த பாடமாக இருந்தாலும், அதை ஆழமாகவும், எளிதாகவும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகிவிட்டன. பாடம் எடுப்பதும் ஆசிரியர்களுக்கு எளிதாகிவிட்டது. அதே நேரத்தில், எந்த அளவுக்கு அறிவார்ந்த தகவல்கள் கொட்டிக் கிடக்கிறதோ, அதே அளவுக்கு தேவையற்ற குப்பைகளும் கொட்டிக் கிடக்கின்றன.

அதற்காக நாம் தொழில்நுட்ப வளர்ச்சியைக் குறை சொல்ல முடியாது. நாம்தான் நம்முடைய குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் சரியானவற்றை அடையாளம் காட்ட வேண்டும். எதற்கெடுத்தாலும் கூகுள் மற்றும் செயற்கை நுண்ணறிவை (ஏஐ) மட்டுமே மாணவர்கள் நம்பியிருக்கக் கூடாது என்று எடுத்துக் கூறி, தொழில்நுட்பத்துக்கும், மனித சிந்தனைக்குமான வேறுபாட்டை அவர்களுக்கு ஆசிரியர்கள் உணர்த்த வேண்டும்.

**மன அழுத்தம் தரக்கூடாது:** அறம், நேர்மை போன்றவற்றையும் கற்றுக்கொடுக்க வேண்டும். அதேவேளையில், இலக்கியம், பொது அறிவு, சமூக ஒழுக்கம், சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு, காலநிலை மாற்றம் குறித்த தெளிவு, மாற்று எரிசக்திகளின் தேவை போன்றவை குறித்து எடுத்துக் கூறி புரிய வைக்க வேண்டும்.

மாணவர்களுக்கு எந்த அளவுக்கு அறிவாற்றல் முக்கியமோ, அதே அளவுக்கு அவர்களுக்கு உடல் நலமும், மன நலமும் முக்கியம். மாணவர்களுக்கு மிகவும் அழுத்தம் கொடுக்கக் கூடாது என்றார் அவர்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், சா.மு. நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பொதுத் தேர்வு – பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்: அமைச்சர்

விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

கடந்த 2021-இல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தற்போது வரை பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர்கள் உள்பட 8,388 பேருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் 3,227 பேர் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

தமிழ்ப் பாடத்தில் 2023–2024-இல் 48 மாணவர்கள் 100-க்கு மதிப்பெண் பெற்றிருந்த நிலையில் அது கடந்த கல்வியாண்டில் 142-ஆக அதிகரித்திருக்கிறது. இதற்காக ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

அடுத்த 5 மாதங்களில் ஆசிரியர்களாகிய உங்களை நம்பி படிக்க வரும் பிள்ளைகளுக்கு பொதுத்தேர்வு வந்துவிடும். எங்களுக்கு பொதுத்தேர்தல் வந்துவிடும். நீங்களும் வெற்றி பெறவேண்டும், நாங்களும் வெற்றி பெற வேண்டும். நான் அரசியல் பேசவில்லை. அறிவுசார்ந்த மக்களிடம் அரசியல் விஷயத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்றே பேசுகிறேன் என்றார் அவர்.

## இணையவழி படிப்புகள்: மாணவர்களுக்கு யுஜிசி முக்கிய அறிவுறுத்தல்

**சென்னை, செப். 20:** திறந்த நிலை, இணைய வழி படிப்புகளில் சேருவதற்கு முன்பு அதற்கான அங்கீகாரத்தை மாணவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டுமென யுஜிசி தெரிவித்துள்ளது.

இது குறித்து பல்கலை மானியக் குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர். ஜோஷி வெளியிட்ட அறிவிப்பு: உயர் கல்வி நிறுவனங்களில் இணையவழி, திறந்தநிலை படிப்புகளுக்கான சேர்க்கை அக். 15 வரை நடைபெறும். இதன் வழியே படிக்க விரும்பும் மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் பட்டியலை https://deb.ugc.ac.in என்ற இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

இதுதவிர பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம், திட்டமிடல், உணவக மேலாண்மை, உணவு தொழில்நுட்பம், கைவினைப் பொருள்கள் மற்றும் வடிவமைப்பு, இயன்முறை சிகிச்சை, கட்டடக்கலை, சட்டம், வேளாண்மை, தோட்டக்கலை, மருத்துவ சேவை சார்ந்த படிப்புகள் உள்பட பல்வேறு படிப்புகள் திறந்த நிலை மற்றும் இணைய வழியில் பயிற்றுவிக்க அனுமதி கிடையாது. எனவே, அனைத்து மாணவர்களும் இத்தகைய படிப்புகளில் சேரும் முன்பு அதற்கான அங்கீகாரத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அதேபோல், தமிழகத்தைச் சேர்ந்த சேலம் பெரியார் பல்கலைக் கழகம், ராஜஸ்தான் சுரேஷ் கியான் விகார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 2024 -25, 2025- 26 கல்வியாண்டுகளில் இணைய வழி கல்வி வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையும் மாணவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## உணவுத் துறைக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க உத்தரவு

**சென்னை,செப்.20:** தமிழ்நாடு உணவுப்பொருள் விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பதவி உயர்வு கோரி தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழ்நாடு உணவுப்பொருள் விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் தொழில்நுட்ப மேற்பார்வையாளராக பணியாற்றும் ஆர்.சுமன்ராஜ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், கடந்த 2013-ஆம் ஆண்டு இளநிலை தொழில்நுட்ப உதவியாளராக தமிழ்நாடு உணவுப்பொருள் விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் நான் பணியில் சேர்ந்தேன். எனக்கு கடந்த 2015-ஆம் ஆண்டில் பணி வரையறை செய்யப்பட்டது. அதன்பிறகு இதுவரை எந்த பதவி உயர்வும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் கடந்த 2020-ஆம் ஆண்டு, உதவி ஆணையர் (ஆய்வு) பதவி உயர்வு வழங்கக் கோரி அரசுக்கு கடிதம் அளித்தேன். காலியாக உள்ள அந்த பணியிடத்துக்கான பதவி உயர்வைப் பெற, நான் தகுதியான நபர். ஆனால், எனது கோரிக்கை பரிசீலிக்கப்படவில்லை. எனவே, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன். அந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், எனது கோரிக்கையை 3 வாரத்துக்குள் பரிசீலித்து தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று கடந்த 2021-ஆம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை.

இதையடுத்து தமிழ்நாடு உணவுப்பொருள் விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பினேன். எனினும், உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி வினோத்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வி.சண்முகசுந்தர், உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாதது மட்டுமன்றி அதிகாரிகள், உதவி ஆணையர் (ஆய்வு) பணியிடமே வேண்டாம் என்று அரசிடம் சரண்டர் செய்துள்ளனர். இந்த பதவியை சரண்டர் செய்வதற்கு முன்பு மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அனுமதி பெறாமல் அதிகாரிகள் சரண்டர் செய்துள்ளனர், என்று வாதிட்டார்.

அப்போது, இந்த மனுவுக்கு பதிலளிக்க அரசுத் தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது. இதையடுத்து விசாரணையை செப்.26-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## தூத்துக்குடியில் உலகத்தரம் வாய்ந்த கப்பல் கட்டும் தளங்கள்

### தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா

**சென்னை, செப். 20:** தூத்துக்குடியில் ரூ.30,000 கோடி முதலீட்டில் உலகத்தரம் வாய்ந்த இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப்பட உள்ளதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளங்களை நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகி உள்ளன. மாநிலத்தில் கப்பல் கட்டுமானத்தை ஊக்குவிப்பதற்காக பிரத்யேக நிறுவனம் அறிவிக்கப்பட்டது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிப்காட் நிர்வாகமும், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகமும் சில வாரங்களுக்கு முன்பு கையொப்பமிட்டன.



அதன்படி, உலகத் தரம் வாய்ந்த பசுமை வளத்தை அடிப்படையாகக் கொண்ட வணிகக் கப்பல் கட்டும் தளங்கள் நிறுவப்படவுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் வாயிலாக தொழில் துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் எட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரூ.30,000 கோடி முதலீடு செய்யப்பட்டு 55,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட உள்ளது. கொச்சி ஷிப்யார்ட் நிறுவனம், உலக அளவிலான வணிகக் கப்பல் கட்டும் தளத்தை நிறுவ ரூ.15,000 கோடியை முதலீடு செய்யும். முதல்கட்டமாக 10,000-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் (4,000 நேரடி மற்றும் 6,000 மறைமுகம்) உருவாக்கப்படும்.

மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனமானது, ரூ.15,000 கோடி முதலீட்டில் மற்றொரு உலகளாவிய வணிகக் கப்பல் கட்டும் தளத்தை அமைக்கிறது. இது 45,000-க்கும் மேற்பட்டோருக்கு (5,000 நேரடி மற்றும் 40,000 மறைமுகம்) வேலைவாய்ப்பை உருவாக்கும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இந்தியாவின் கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய நகர்வாக இருக்கும்.

இந்த இரண்டு மிகப்பெரிய திட்டங்களும் சேர்ந்து, கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக தமிழகம் உருவெடுக்க வழிவகுக்கும் என்று டி.ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

## வர்த்தக ஒப்பந்தப் பேச்சு: பியூஷ் கோயல் நாளை அமெரிக்கா பயணம்

**புது தில்லி, செப்.20:** இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் திங்கள்கிழமை (செப்.22) அமெரிக்கா செல்ல உள்ளார்.



இதுதொடர்பாக மத்திய வர்த்தக துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த கடந்த செப்.16-ஆம் தேதி அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகள் அலுவலத்தில் இருந்து அதிகாரிகள் குழு இந்தியா வந்தது. அப்போது வர்த்தக ஒப்பந்தம் குறித்த பல்வேறு அம்சங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையிலான இந்திய குழு செப்.22-ஆம் தேதி அமெரிக்கா செல்ல உள்ளது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பரஸ்பரம் பலன் அளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்யும் நோக்கில், பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல இந்திய குழு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

## திருமணத்துக்கு தடை விதிப்பது தனி மனித அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது

**மதுரை, செப். 20:** திருமணத்துக்கு தடை விதிப்பது தனி மனித அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு தெரிவித்தது.

ராமநாதபுரம் மாவட்டம், தினைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த உல்பத்நிஷா சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த நான் குடும்பத்துடன் ராமநாதபுரம் மாவட்டம், தினைக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்தினர் தினைக்குளம் ஜமாஅத்தில் உறுப்பினர்களாக இருந்து வருகிறோம்.

இந்த நிலையில், எனது மகள் தமிமாஅரசிக்கு வரும் 28-ஆம் தேதி திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்து வந்தோம். இதற்கு எங்களது ஜமாஅத் நிர்வாகம் எங்களுக்கு தடையில்லாச் சான்றிதழ் (என்.ஓ.சி.) வழங்க வேண்டும்.



இதற்காக தினைக்குளம் ஜமாஅத்திடம் நான் விண்ணப்பித்தபோது, எங்களது குடும்பத்தை கடந்த 2023-ஆம் ஆண்டு முதல் ஜமா அத்தைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளதாக அதன் நிர்வாகிகள் தெரிவித்தனர். இதனால், திருமணம், இறப்பு குறித்து எந்த சான்றிதழும் வழங்க முடியாது என மறுத்துவிட்டனர்.

ஜமாஅத்தைவிட்டு ஒதுக்கி வைப்பது குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிரானது. இது ஜனநாயக விரோதப் போக்கு எனத் தெரிவித்தும், எனது மகள் திருமணத்துக்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்க மறுத்து வருகின்றனர். எனவே, எனது மகளின் திருமணத்துக்காக தினைக்குளம் ஜமாஅத் நிர்வாகத்திடம் தடையில்லாச் சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை அண்மையில் விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு:

ஜமாஅத் நிர்வாகக் குழு யாரையும் சமூகப் புறக்கணிப்பு செய்யக் கூடாது. திருமணப் பதிவு, இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய மறுப்பது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடக் கூடாது என ஏற்கெனவே வக்ஃப் வாரியம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வக்ஃப் வாரியம் பிறப்பித்த இந்த உத்தரவை நிறைவேற்றுவதுதான் ஜமாஅத் நிர்வாகிகளின் கடமையாகும். திருமணம் செய்து கொள்வது என்பது தனி மனித உரிமை. அதைத் தடை செய்வது தனி மனித அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது.

எனவே, மனுதாரரின் மகளின் திருமணத்துக்கு தடையில்லாச் சான்றிதழை வரும் 23-ஆம் தேதிக்குள் வழங்க வேண்டும். இந்த உத்தரவு நகலை கீழக்கரை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் மூலமாக ஜமாஅத் நிர்வாகிகளுக்கு வழங்க வேண்டும். வழக்கு முடித்து வைக்கப்படுகிறது என்றார்.

## கிராம உதவியாளர் நியமன வயது வரம்பு: ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தல்

**சென்னை, செப். 20:** கிராம உதவியாளர்கள் நியமன வயது வரம்பு தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலமாக கிராம உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்ப நடைமுறைகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கிராம உதவியாளர்களை நியமிப்பதற்கான வயது நிலைகள் குறித்த விவரங்களை வருவாய் நிர்வாக ஆணையரகம் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அனுப்பி வைத்துள்ளது.

இதுகுறித்து, துறையின் கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா அனுப்பியுள்ள கடிதம்:

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நேரடி நியமனம் மூலமாக கிராம உதவியாளர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர். அவர்களுக்கான வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பொதுப் பிரிவினருக்கான அதிகபட்ச வயது வரம்பு 32 ஆகவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான வயது வரம்பு 39 ஆகவும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கான அதிகபட்ச வயது வரம்பு 42 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம உதவியாளர்களாக நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமும் இந்த வயது வரம்பு நிலையை மாவட்ட ஆட்சியர்கள் பின்பற்ற வேண்டும் என்று தனது கடிதத்தில் பெ.அமுதா தெரிவித்துள்ளார்.

## பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கு: முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி மனு தள்ளுபடி

**சென்னை,செப்.20:** பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி மற்றும் அவரது மனைவி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை கூடுதல் சிபிஐ நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

சென்னை சூளைமேடு காமராஜ் நகரில் வசிப்பவர் சுரேஷ். கடந்த 1982-ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரியான இவர், மத்தியப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தார். கடைசியாக முதன்மைச் செயலர் பொறுப்பில் இருந்த அவர் கடந்த 2015-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். தாம்பரத்தில் உள்ள சென்னை ஏற்றுமதி மண்டலத்தின் (மெப்ஸ்) இணை மேம்பாட்டு ஆணையராகவும், சென்னை துறைமுக சபை தலைவராகவும் அயல் பணியில் இருந்துள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக அவர் மீதும், மருத்துவரான அவரது மனைவி கீதா மீதும் கடந்த 2012-ஆம் ஆண்டு சென்னை சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து கடந்த 2023-ஆம் ஆண்டு பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் இருவர் மீதும் அமலாக்கத் துறை தனியாக ஒரு வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கு சென்னை 9-ஆவது கூடுதல் சிபிஐ நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்கக் கோரி சுரேஷ் மற்றும் அவரது மனைவி கீதா ஆகியோர் அதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நீதிபதி ஐஸ்வரனே முன் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

### ஹெச்-1பி விசா கட்டண உயர்வு

## இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதிப்பு: நாஸ்காம்

**புது தில்லி, செப். 20:** ஹெச்-1பி விசா கட்டண உயர்வு இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும் என தேசிய மென்பொருள், சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான நாஸ்காம் சனிக்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ஹெச்-1பி விசா கட்டண உயர்வு குறித்து அமெரிக்க அரசின் உத்தரவை ஆய்வு செய்து வருகிறோம். இருப்பினும், இந்த உத்தரவு அமெரிக்காவில் மேற்கொள்ளக்கூடிய புதிய கண்டுபிடிப்புகளுக்கும் அந்நாட்டின் பெரும் வேலைவாய்ப்பு பொருளாதாரத்துக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், சர்வதேச மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் இதன் தாக்கம் உணரப்படும். இந்த மாற்றங்களுக்கேற்ப தங்களது வாடிக்கையாளர்களுக்கான சேவைகளைத் தடையின்றி வழங்கும் பணிகளை நிறுவனங்கள் மேற்கொள்ளும்.

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) போன்ற நவீன தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துவரும் சமயத்தில் அதிதிறன்வாய்ந்த பணியாளர்கள் தேவை என்ற நிலைப்பாடு சரியானது. ஆனாலும், ஹெச்-1பி விசா கட்டண உயர்வு உடனடியாக அமலாவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை ஆய்வு செய்து, தற்காலிகமாக இந்த உத்தரவு அமலாவதற்கு விலக்களிக்கக் கோரி அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறையிடம் கோரிக்கை வைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

### ஹெச்-1பி விசா பணியாளர்கள் அதிகமுள்ள முதல் 5 நிறுவனங்கள் (2025, ஜூன் 30 வரை)

| அமேசான் | டிசிஎஸ் | மைக்ரோசாஃப்ட் | மெட்டா | ஆப்பிள் |
|---|---|---|---|---|
| amazon.in | tcs | Microsoft | Meta | Apple |
| 10,044 | 5,505 | 5,189 | 5,123 | 4,202 |

### உடனடியாக அமெரிக்கா திரும்ப வலியுறுத்தல்

**நியூயார்க்/வாஷிங்டன், செப். 20:** ஹெச்-1பி விசா கட்டணம் உயர்வு (ரூ.88 லட்சம்) ஞாயிற்றுக்கிழமை முதல் அமலாகவுள்ள நிலையில், தாய்நாட்டுக்குச் சென்றுள்ள ஊழியர்கள் முன்னெச்சரிக்கையாக அமெரிக்கா திரும்ப நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களுக்கான வழக்குரைஞர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து நியூயார்க்கைச் சேர்ந்த வழக்குரைஞர் சிப்ரஸ் மேத்தா வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில்,' வர்த்தகம் அல்லது சுற்றுலாவாக அமெரிக்காவைவிட்டு ஹெச்-1பி விசாதாரர்கள் வெளியே சென்றிருந்தால் உடனடியாக செப். 21-ஆம் தேதி நள்ளிரவுக்குள் அமெரிக்காவுக்கு திரும்பிவிடுங்கள். இந்தியாவில் தற்போது உள்ள ஹெச்1-பி விசாதாரர்கள் குறிப்பிட்ட காலஅவகாசத்துக்குள் அமெரிக்கா வந்தடைய நேரடியான விமான சேவைகள் ஏதும் இல்லை. எனினும் அவர்கள் கலிஃபோர்னியாவை செப்.21-ஆம் தேதிக்குள் வந்தடையலாம்' எனக் குறிப்பிட்டார்.

அதேபோல் அமெரிக்காவில் உள்ள பல நிறுவனங்களும் தங்களது ஊழியர்களை அவர்களது நாட்டில் இருந்து உடனடியாக அமெரிக்காவுக்கு திரும்ப அறிவுறுத்தி வருகின்றன. அதேபோல் ஹெச்-1பி விசாதாரர்களைச் சார்ந்திருக்கும் ஹெச்-4பி விசாதாரர்களும் அமெரிக்காவைவிட்டு வெளியேறுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

# செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னைக்கு கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்






சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள 'சென்னை குடிநீர் செயலி' என்ற புதிய கைப்பேசி செயலியை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, சா.மு.நாசர், ஆட்சியர் மு.பிரதாப், சட்டப்பேரவை உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி உள்ளிட்டோர்.

**திருவள்ளூர், செப். 20:** பூந்தமல்லியை அடுத்த செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து ரூ. 66.78 கோடி மதிப்பில் சென்னை மாநகருக்கு நாள்தோறும் கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து முழுக் கொள்ளளவான 530 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்குவதற்காக ரூ. 66.78 கோடியில் செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரையிலான இரண்டாவது வரிசை குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், சென்னைக்கு கூடுதலாக நாள்தோறும் 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவி நிலநீர் புவியியலாளர் பணியிடத்துக்கு தேர்வு செய்யப்பட்ட 2 பேருக்கு பணி நியமன ஆணைகள், சிறப்பாக செயல்பட்ட அதிகாரிகளைப் பாராட்டி ரொக்கப் பரிசுகளையும் அவர் வழங்கினார்.

**20 லட்சம் பேருக்கு பயன்:** புதிய திட்டத்தின் மூலம் செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர்த் தேவைக்கு ஏற்பவும், பெருகிவரும் சென்னை மாநகரின் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டும், ஏரியின் நீர் இருப்பை கருத்தில்கொண்டும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து ஏற்கெனவே நாள்தோறும் வழங்கி வந்த 265 மில்லியன் லிட்டர் குடிநீருடன், கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் என 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும்.

இதன்மூலம், அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சி, குன்றத்தூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 லட்சம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

**சென்னை குடிநீர் செயலி:** சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் பொதுமக்களின் புகார்களுக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'சென்னை குடிநீர் செயலி' என்ற புதிய கைப்பேசி செயலியை முதல்வர் தொடங்கி வைத்தார்.

இந்தச் செயலி புகைப்படங்களுடன் பதிவு செய்யும் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலியின் முக்கிய சிறப்பம்சமாக புகாரின் நிலை குறித்து பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

இந்த நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, துரை.சந்திரசேகர், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் தா.கார்த்திகேயன், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கே. விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப்குமார், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், திருவள்ளூர் ஆட்சியர் மு.பிரதாப் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# ஏழுமலையான் தரிசனம்: 18 மணி நேரம் காத்திருப்பு

**திருப்பதி, செப். 20:** திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 18 மணி நேரம் காத்திருந்தனர்.



திருமலையில் சனிக்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 31 அறைகளில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர். எனினும், தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 18 மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தர்களும், அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். ஏழுமலையானை வெள்ளிக்கிழமை முழுவதும் 71,951 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 22,734 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 4.04 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# மீண்டும் ரூ.82 ஆயிரத்தை கடந்தது தங்கம்

**சென்னை, செப்.20:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.82,320-க்கு விற்பனையாகி புதிய உச்சத்தை தொட்டது.



உலக நாடுகளுக்கு இடையிலான போர் பதற்றம், பொருளாதார மந்தநிலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி போன்ற காரணங்களால், தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்து வருகிறது. இதனால், தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருகிறது.

இந்த நிலையில், தங்கம் விலை கடந்த செப்.16-ஆம் தேதி பவுன் ரூ.82 ஆயிரத்தை தாண்டி புதிய உச்சத்தை தொட்டது. அதைத்தொடர்ந்து சற்று ஏற்ற, இறக்கமாக இருந்து வந்தது.

கடந்த செப்.18-இல் பவுனுக்கு ரூ.400 குறைந்து ரூ.81,760-க்கும், செப்.19-இல் பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.81,840-க்கும் விற்பனையானது. தொடர்ந்து இறுதிநாளான சனிக்கிழமை கிராமுக்கு ரூ.90 உயர்ந்து ரூ.10,290-க்கும், பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.82,320-க்கும் விற்பனையாகி புதிய உச்சத்தை தொட்டது.

அதேபோல், வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ரூ.145-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2,000 உயர்ந்து ரூ.1.45 லட்சத்துக்கும் விற்பனையானது.

# தமிழகத்தில் செப். 26 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப். 20:** தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை (செப். 21) முதல் செப். 26 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பு:

தென்னிந்திய கடலோரப் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாக, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை (செப். 21) முதல் செப். 26 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் சனிக்கிழமை காலை வரை பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமையும் (செப். 21) இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

**மழை அளவு:** தமிழகத்தில் சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம், திருவள்ளூர் மாவட்டம் ஜெயா பொறியியல் கல்லூரி பகுதி ஆகிய இடங்களில் தலா 80 மி.மீ. மழை பதிவானது. மேலும், அம்பத்தூர் (திருவள்ளூர்), அயப்பாக்கம் (சென்னை), கொரட்டூர் (சென்னை) - தலா 60 மி.மீ., ஆவடி (திருவள்ளூர்), புள்ளம்பாடி (திருச்சி), நம்பியூர் (ஈரோடு) - 50 மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தென்தமிழக கடலோரப் பகுதிகள், வடதமிழக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென் மேற்கு வங்கக்கடல், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக்கடலில் செப். 21 முதல் செப். 24 வரை மணிக்கு 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதனால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈட்டி திருமலாபுரத்தில் கண்டெடுப்பு



அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள்.

**கடையநல்லூர், செப். 20:** தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே திருமலாபுரம் தொல்லியல் அகழாய்வு மையத்தில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருமலாபுரத்தில் குலசேகரப்பேரி கண்மாய் அருகே 35 ஏக்கரில் இரும்புக் கால இடுகாடு உள்ளது. இங்கு தமிழக முதல்வரின் உத்தரவின்பேரில், 2024ஆம் ஆண்டு முதல் அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது. அகழாய்வு இயக்குநர் வசந்தகுமார், துணை இயக்குநர் காளீஸ்வரன் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து துணை இயக்குநர் காளீஸ்வரன் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியது: திருமலாபுரம் தொல்லியல் அகழாய்வு மையத்தில் தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய அளவில் கற்களாலான அரண்களுக்குள் ஈமத் தாழிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 13.50 மீட்டர் நீளம், 10.50 மீட்டர் அகலமுள்ள 35 கற்பலகைகளாலான அரணுக்குள் ஈமத் தாழிகள் இருந்ததும், அவற்றின்மேல் 1.50 மீட்டர் உயரத்துக்கு கூழாங்கற்கள் நிரப்பப்பட்டிருந்ததும் கண்டறியப்பட்டது. இப்பகுதியில் 38 குழிகள் தோண்டப்பட்டதில் 75 சிவப்பு, ஒரு கருப்பு சிவப்பு என 76 ஈமத் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் கழுத்துப் பகுதியில் கூம்பு, கூம்பின்கீழ் வட்டம், வட்டத்துக்குள் கூட்டல் என பல்வேறு சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2.5 மீட்டர் நீள ஈட்டியும் கிடைத்துள்ளது. இதுவரை கிடைக்கப்பெற்றதில் இது மிகவும் நீளமானது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், 3 தங்க வளையங்கள், பல்வேறு குறியீடுகளுடன் ஈமத் தாழிகள், பல வடிவத்தாலான மண்பாண்டங்கள், இரும்புப் பொருள்கள் என 250-க்கு மேற்பட்ட பொருள்கள் கிடைத்துள்ளன. இவை சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகிறது.,

அவை ஆய்வுக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அகழாய்வு குறித்து ஆவணப்படுத்தும் பணியும் நடைபெறுகிறது. அகழாய்வுப் பணியில் ஆய்வு மாணவர்களும் பங்கேற்றுள்ளனர் என்றார் அவர்.

# ஜிஎஸ்டி சீர்திருத்தம் மிகப் பெரிய புரட்சி

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்



**கோவில்பட்டி, செப். 20:** ஜிஎஸ்டி சீர்திருத்தம் மிகப் பெரிய புரட்சி என்றார் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

தமிழ்நாடு தீப்பெட்டித் தொழில் நூற்றாண்டு விழா கோவில்பட்டி எஸ்.எஸ்.டி.எம். கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவில், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டு நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு பேசியதாவது: கோவில்பட்டி பகுதி, வானம் பார்த்த பூமியாக இருந்தாலும்கூட, கைத்தொழிலால் இந்தப் பகுதிக்கு வாழ்வளிக்கக் கூடியவர்கள் பெண்கள்தான். பெண் தொழிலாளர்கள் இல்லாமல் தீப்பெட்டித் தொழில் இல்லை.

**பிரதமருக்கான பாராட்டு விழா:** தூத்துக்குடியில், மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. தென் மாவட்டங்களில், பெரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதற்கு பிரதமர் மோடி தான் காரணம்.

இந்த விழாவை பிரதமருக்கான பாராட்டு விழாவாகவே கருதுகிறேன்.

ஜிஎஸ்டியில் சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை, புரட்சி செய்யப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு பெரிய மாற்றத்தை செய்திருக்கிறோம். 375 பொருள்களின் விலை குறைந்துள்ளது.

28 சதவீதத்தில் இருந்து, 18 சதவீதமாகவும், 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகவும் வரி குறைக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி புரட்சியை, பிரதமர் மோடி மக்களுக்கு தீபாவளி பரிசாக வழங்கியுள்ளார். இதன் மூலம் வரக்கூடிய ஆதாயம் என்பது, மக்களுக்கான சேமிப்புதான். அதனை உங்கள் குடும்ப நலனுக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர், தென் மாவட்டங்களை இணைத்து, எதிர்காலத்தில் வணிகம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குத் தேவையான தொலைநோக்குத் திட்டங்களுக்கு அறிக்கை தயாரித்துக் கொடுத்தால், 2047-க்கு முன்பு பல நல்ல திட்டங்கள் மூலம் தென் மாவட்டங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபடுவோம் என்றார் அவர்.

கோவில்பட்டி தொகுதி எம்எல்ஏ கடம்பூர் செ. ராஜு பேசியதாவது: தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாக்க 18 சதவீதமாக இருந்த ஜிஎஸ்டி, எங்களது கோரிக்கையை ஏற்று 12 சதவீதமாக குறைக்கப்பட்டது. தற்போது, அதை 5 சதவீதமாக குறைத்துள்ளது மத்திய அரசு. கடலை மிட்டாய்க்கு புவிசார் குறியீடு பெற்றுத் தந்தது போல், தீப்பெட்டி தொழிலுக்கும் புவிசார் குறியீடு பெற்றுத் தர வேண்டும் என்றார்.

விழாவில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், பாஜக மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசன் எம்எல்ஏ, பாஜக மாநில பொதுச் செயலர் ராம. சீனிவாசன் ஆகியோரும் பேசினர்.

# திருவனந்தபுரம் நவராத்திரி விழாவுக்குச் செல்லும் சுவாமிகளுக்கு பத்மநாபபுரம் அரண்மனையில் உடைவாளை மாற்றி மரியாதை





பத்மநாபபுரம் அரண்மனையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜிடம் உடைவாளை வழங்கிய கேரள தொல்லியல் துறை அமைச்சர் கடந்தப்பள்ளி ராமச்சந்திரன். (வலது) பத்மநாபபுரம் அரண்மனையிலிருந்து பக்தர்கள் புடைசூழ யானை மீது அமர்ந்து புறப்பட்ட சரஸ்வதி அம்மன், பூப்பல்லக்குகளில் புறப்பட்ட வேளிமலை குமாரசுவாமி, சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன்.

**தக்கலை, செப். 20:** திருவனந்தபுரம் நவராத்திரி விழாவில் பங்கேற்கச் செல்லும் சுவாமி விக்ரகங்களுக்கு தக்கலையில் உள்ள பத்மநாபபுரம் அரண்மனையில் உடைவாளை மாற்றி மரியாதை செலுத்தி வழியனுப்பும் பாரம்பரிய நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

மன்னர் கால முறைப்படி, திருவனந்தபுரத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவுக்கு சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன், வேளிமலை குமாரசுவாமி, பத்மநாபபுரம் தேவாரக்கட்டு சரஸ்வதி அம்மனின் விக்ரகங்கள் ஊர்வலமாக கொண்டுசெல்லப்படுவது வழக்கம். அதன்படி, விக்ரகங்கள் ஊர்வலம் புறப்பாடு சனிக்கிழமை காலை நடைபெற்றது.

இதையொட்டி, விக்ரகங்களுடன் கொண்டுசெல்லும் மன்னர்கள் பயன்படுத்திய உடைவாளை மாற்றும் நிகழ்ச்சி, தக்கலையில் உள்ள பத்மநாபபுரம் அரண்மனை உப்பரிகை பூஜை அறையில் நடைபெற்றது. அரண்மனை அதிகாரி சது, உடைவாளை எடுத்து கேரள தொல்லியல் துறை இயக்குநர் தினேஷிடம் கொடுக்க, அவர் துறையின் அமைச்சர் கடந்தப்பள்ளி ராமச்சந்திரனிடம் கொடுத்தார். அவர் அதை தமிழக பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், குமரி மாவட்ட திருக்கோயில்களின் இணை ஆணையர் ஜான்சிராணி ஆகியோரிடம் வழங்கினார். பின்னர், அந்த உடைவாளை ஊர்வலத்தின்போது ஏந்திச்செல்லும் குமாரகோவில் மேலாளர் மோகன்குமார் பெற்றுக்கொண்டார்.

அதையடுத்து, சிறப்பு பூஜைக்குப் பின்னர், நெற்றிப்பட்டம் கட்டிய யானை மீது சரஸ்வதி அம்மனும், அலங்கரிக்கப்பட்ட இரு பூப்பல்லக்குகளில் வேளிமலை குமாரசுவாமியும், முன்னுதித்த நங்கை அம்மனும் புறப்பட்டனர்.

முதலில், அரண்மனை நிர்வாகம் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது.

அப்போது, கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையிலான போலீஸாரும், திருவனந்தபுரம் காவல் கண்காணிப்பாளர் சுதர்சன் தலைமையிலான கேரள போலீஸாரும் துப்பாக்கி ஏந்தி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, சுவாமிகளுக்கு பிடிபணம் வழங்கி வழியனுப்பி வைத்தனர். இரவில் குழித்துறை மகாதேவர் கோயிலை அடைந்த ஊர்வலம், ஞாயிற்றுக்கிழமை காலை புறப்பட்டு மாலையில் நெய்யாற்றின்கரை கிருஷ்ணசுவாமி கோயிலை அடைகிறது.

வழியனுப்பும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ரா. அழகுமீனா, விஜய் வசந்த் எம்.பி., பத்மநாபபுரம் நகர்மன்றத் தலைவர் அருள்சோபன், பாறசாலை எம்எல்ஏ ஹரியேந்திரன், கோவளம் எம்எல்ஏ எம். வின்சன்ட் உள்பட திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

# மின்கம்பியாள் உதவியாளர் தகுதி காண் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு

**சென்னை, செப். 20:** மின்கம்பியாள் உதவியாளர்களுக்கான தகுதிகாண் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை உத்தரவிட்டுள்ளது.

தேசிய புனரமைப்புத் திட்டம் மற்றும் தமிழக அரசின் வேலைவாய்ப்பு - பயிற்சித் துறை சார்பில் மின்சாரப் பணியாளர், கம்பியாள் தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு தகுதிகாண் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, டிசம்பர் 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் மின்கம்பியாள் உதவியாளர் தகுதிகாண் தேர்வு நடைபெறவுள்ளது. இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அறிவித்துள்ளது.

விண்ணப்பப் படிவம், விளக்கக் குறிப்பேடு ஆகியவற்றை http://skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வுக்குரிய அனைத்து விவரங்களும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி அக். 17 என்று தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கயையில் குடியரசுத் தலைவர் முன்னோர் வழிபாடு



**கயை, செப். 20:** பிகார் மாநிலம், கயையில் உள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணுபத கோயிலில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெள்ளிக்கிழமை முன்னோர் வழிபாடு மேற்கொண்டார்.

மகாளயபித்ருபக்ஷ புண்ணிய காலத்தையொட்டி, கயையில் ஃபால்கு நதிக்கரையில் உள்ள விஷ்ணுபத கோயிலில் பக்தர்கள் தங்களின் முன்னோருக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். தற்போது பித்ரு பக்ஷ காலம் என்பதால், விஷ்ணுபத கோயிலில் பக்தர்கள் வருகை அதிகம் காணப்படுகிறது.

இக்கோயிலுக்கு வெள்ளிக்கிழமை வருகை தந்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தனது முன்னோர்களின் ஆன்ம சாந்திக்காக பிண்டம்-ஜல தர்ப்பண சடங்குகளை மேற்கொண்டு, வழிபாடு நடத்தியதாக கோயிலின் செயல் தலைவர் சாம்பு லால் விட்டல் தெரிவித்தார்.

முன்னதாக, கயை விமான நிலையத்தில் வந்திறங்கிய குடியரசுத் தலைவரை மாநில ஆளுநர் ஆரிஃப் முகமது கான், மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மாஞ்சி, மாநில அமைச்சர் பிரேம் குமார் உள்ளிட்டோர் வரவேற்றனர். அவரது வருகையையொட்டி, கயையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில்: 5 கி.மீ. சுரங்கப் பாதை பணி நிறைவு

**மும்பை, செப். 20:** மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் திட்டத்தில், மகாராஷ்டிர மாநிலம், தாணே அருகே சுமார் 5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப் பாதை அமைக்கும் பணி சனிக்கிழமை நிறைவடைந்தது. 'இது குறிப்பிடத்தக்க சாதனை' என்று ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

கன்சோலி-ஷில்படா இடையிலான சுரங்கப் பாதையின் கடைசி பகுதியை, கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வெடிவைத்து தகர்க்கும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

வெடிக்கான பொத்தானை அஸ்வினி வைஷ்ணவ் அழுத்தியதும், கடைசி பகுதி தகர்க்கப்பட்டு, சுரங்கப் பாதை அமைக்கும் பணி நிறைவு பெற்றது. இனி, சுரங்கப் பாதையில் தண்ணீர் கசிவை தடுக்கும் கட்டமைப்பை ஏற்படுத்துதல், பிற சாதனங்களை நிறுவுதல், இறுதி வடிமளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது: ஜப்பானின் டோக்கியோ, ஒசாகா உள்ளிட்ட முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் உலகின் முதல் புல்லட் ரயில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு ஜப்பான் பொருளாதாரம் பெருகியது.

இந்தியாவிலும் புல்லட் ரயில் அறிமுகத்துக்குப் பின் பொருளாதாரம் பன்மடங்கு பெருகும். மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் திட்டமானது, ஆனந்த், அகமதாபாத், வதோதரா, சூரத், வாபி, மும்பை ஆகிய முக்கிய நகரங்களை ஒற்றை பொருளாதார வழித்தடமாக இணைக்கும்.

21 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப் பாதை அமைக்கும் பணியை 'அஃப்கான்ஸ் இன்ஃப்ராஸ்டிரக்சர்' நிறுவனம் மேற்கொள்கிறது. இதில் 7 கி.மீ. சுரங்கப் பாதை கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளது. புல்லட் ரயில் திட்டத்தில் 50 கி.மீ. தொலைவுள்ள சூரத்-பில்லிமோரா இடையிலான முதலாவது வழித்தட பணிகள், அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் நிறைவடையும். நடுத்தர வகுப்பினரும் பயணிக்கும் வகையில், இந்த ரயில் கட்டணங்கள் நியாயமானதாக இருக்கும் என்றார்.

'மிகக் கடினமான பாறை அடுக்குகள் உள்பட பல்வேறு சவால்களைக் கடந்து, கன்சோலி-ஷில்படா இடையே 5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப் பாதை பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய அதிவேக ரயில் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து, உரிய பாதுகாப்பு தரநிலைகளுடன் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டார்.

நாட்டிலேயே முதல் முறையாக மகாராஷ்டிர தலைநகர் மும்பை - குஜராத்தின் அகமதாபாத் இடையே 508 கி.மீ. தொலைவுக்கு புல்லட் ரயில் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் 320 கி.மீ. தொலைவுக்கு வழித்தட பணிகள் நிறைவடைந்துள்ளன. ரயில் நிலையங்கள் கட்டமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.



மகாராஷ்டிர மாநிலம், தாணே அருகே புல்லட் ரயில் சுரங்கப் பாதை பணி நிறைவையொட்டி, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

## ஆபரேஷன் சிந்தூர் எதிரொலி

# ஆப்கானிஸ்தான் எல்லைக்கு இடம்பெயர்ந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகள்

**புது தில்லி, செப். 20:** ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை அடுத்து ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து வெளியேறியுள்ள பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பினர் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி கைபர் பக்துன்கவா மாகாணத்துக்கு தங்கள் முகாம்களை மாற்றியுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத்தை முன்னின்று நடத்துவதில் பாகிஸ்தானில் இருந்து செயல்படும் ஜெய்ஷ்-ஏ-முகமது, ஹிஸ்புல் முஜாகிதீன் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கு முக்கியத் தொடர்பு உள்ளது.

இந்திய எல்லையை ஒட்டி அமைந்துள்ள பாகிஸ்தான் ஆக்கிமிரமிப்பு காஷ்மீரை மையமாகக் கொண்டுதான் இந்தப் பயங்கரவாத அமைப்புகள் இத்தனை ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்தன. இந்திய எல்லையை ஒட்டி அமைந்துள்ளதால் ஊடுருவுவதற்கும், தாக்குதல் நடத்துவதற்கும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் ஏற்ற இடமாக பயங்கரவாதிகளுக்கு அமைந்தது.

ஆனால், அண்மையில் இந்திய விமானப் படை நடத்திய ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்கள் குண்டுவீசி தகர்க்கப்பட்டன. இதில் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பலர் உயிரிழந்தனர். இந்தியாவில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டால் மீண்டும் ஆபரேஷன் சிந்தூர் தொடங்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகள் தங்கள் முகாம்களை ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய கைபர் பக்துன்கவா பிராந்தியத்துக்கு மாற்றியுள்ளனர்.

பஹாவல்பூர், முர்திக், முஷாஃபராபாத் உள்ளிட்ட இடங்கள் ஆக்கிரமிப்பு காஷ்மீர் எல்லையை ஒட்டி அமைந்திருப்பதால் இந்திய விமானப் படைகள் சில மணி நேரத்திலேயே அங்குள்ள கட்டடங்களைத் தரைமட்டமாக்கிவிட்டன. மேலும், பயங்கரவாதிகளின் செயல்பாடுகளையும் இந்தியா எளிதாக கண்காணித்து விடுகிறது. இதைத் தவிர்க்க இந்திய எல்லையில் இருந்து பல நூறு கி.மீ. அப்பால் ஆப்கானிஸ்தான் எல்லைக்கு தங்கள் முகாம்களை பயங்கரவாத அமைப்புகள் மாற்றி வருகின்றன.

கைபர் பக்துன்கவா மாகாணத்தின் மன்சிகார் மாவட்டத்தில் ஜெய்ஷ்-ஏ-முகமது பயங்கரவாத அமைப்பினர் தங்கள் இயக்கத்துக்கு ஆள்சேர்க்கும் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பயங்கரவாத பிரசாரம் ஜெய்ஷ் அமைப்பின் முக்கியத் தலைவர் மௌலானா முஃப்தி மசூத் என்ற இலியாஸ் காஷ்மீரி தலைமையில் நடைபெற்று வருகிறது.

இலியாஸ் காஷ்மீரி, ஜெய்ஷ்-ஏ-முகமது பயங்கரவாத அமைப்பின் தலைவர் மௌலானா மசூத் அஸாருக்கு நெருக்கமானவர் ஆவார். இந்தப் பயங்கரவாதிகளை இந்திய உளவு அமைப்புகள் தொடர்ந்து கண்காணித்து வருவதால் பாகிஸ்தான் ராணுவமும், காவல் துறையும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் வேலைவாய்ப்பு என்ற பெயரில் நூதன மோசடி

## வெளியுறவு அமைச்சகம் எச்சரிக்கை

**புது தில்லி, செப். 20:** ஈரானில் வேலைவாய்ப்பு என்ற பெயரில் ஆள் கடத்தல் உள்ளிட்ட மோசடிகள் நடப்பதால் இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஈரானில் வேலைவாய்ப்பு அல்லது அங்கிருந்து வேறு நாட்டுக்கு வேலைக்காக அனுப்பிவைக்கிறோம் என்ற பெயரில் இந்தியர்களை ஈரானுக்கு வரவழைப்பது, பின்னர் அவர்களைக் கடத்தி வைத்துக் கொண்டு குடும்பத்தினரிடம் பணம் கேட்டு மிரட்டுவது உள்ளிட்ட குற்றச் செயல்களில் சில கும்பல் ஈடுபட்டு வருகிறது. எனவே, இது போல ஈரானில் இருந்து வரும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அழைப்புகள் விஷயத்தில் இந்தியர்கள் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஈரான் அரசு சுற்றுலா வரும் இந்தியர்களுக்கு மட்டுமே விசா (நுழைவு இசைவு) இல்லாத அனுமதியை வழங்குகிறது. வேலைவாய்ப்புக்காக விசா இல்லாமல் ஈரானில் நுழைய அனுமதி பெற்றுத்தருவதாக முகவர்கள் யாரேனும் கூறினால், அவர்கள் ஆள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். எனவே, இதுபோன்ற குற்ற கும்பலின் போலியான வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் யாரும் சிக்கிவிட வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

# பெங்களூரில் சாலைக் குழிகளை மூட நடவடிக்கை

## டி.கே.சிவகுமார்

**பெங்களூரு, செப்.20:** பெங்களூரில் சாலையில் உள்ள குழிகளை மூடுவதற்கு அரசு உறுதியாக உள்ளது என்று துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பெங்களூரில் காணப்படும் சாலைக்குழிகள் பிரச்னையை தீர்க்க மாநில அரசு உறுதியாக உள்ளது. இதற்காக திட்டமிட்டு செயல்பட்டு வருகிறேன். இந்த விவகாரத்தில் அரசியல் செய்ய யாராவது விரும்பினால், அதை செய்து கொள்ளட்டும். சாலைக்குழிகளை யாரும் உருவாக்குவதில்லை. அதிக மழையால்தான் சாலைக்குழிகள் ஏற்படுகின்றன.

ஏற்கெனவே 7,000 சாலைக் குழிகள் மூடப்பட்டுவிட்டன. இன்னும் 5,000 சாலைக் குழிகளை மூட வேண்டியுள்ளது. சாலையில் ஏற்பட்டுள்ள குழிகள் குறித்த விவரங்களை மாநகரக் காவல் ஆணையரிடம் கேட்டுள்ளேன். சாலைக் குழிகளை பார்த்தால் அதுகுறித்து பொதுமக்கள் உடனடியாக புகார் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாலைக் குழிகளை மூடுவதற்காக பாஜக எம்எல்ஏக்களுக்கு தொகுதிக்கு தலா ரூ.25 கோடி அளிக்கப்பட்டுள்ளது. எவ்வித பாகுபாடும் இல்லாமல் பாஜக எம்எல்ஏக்களின் தொகுதிகளுக்கும் ஒதுக்கியுள்ளோம். ஆனாலும், அவர்களின் தொகுதிகளில் சாலைக் குழிகளை ஏன் இன்னும் மூடவில்லை? அவரவர் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி சாலைக்குழிகளை மூடுவதில் கவனம் செலுத்திவிட்டு, அதன்பிறகு பாஜகவினர் அரசியல் செய்யட்டும் என்றார்.


**மேன்மைமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - III சென்னை**

அசல் விண்ணப்ப எண்: 219 / 2025

பாங்க் ஆப் பரோடா, கோடம்பாக்கம் கிளை, எண். 10, முதல் மெயின் தெரு, யுனைடெட் இந்தியா காலனி, சென்னை- 600024 பிரதிநிதியாக அதன் கிளை மேலாளர் IFSC Code : BARB0KODAMB ... வாதி

-எதிர்-

M/s. KD எண்டர்பிரைசஸ் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. M. கருப்புசாமி மற்றும் ஒருவர் ... பிரதிவாதிகள்

பெறுநர்

1. M/s. KD எண்டர்பிரைசஸ் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. M. கருப்புசாமி, எண். B3, 3/191, அடுத்தளம், VVS சாலை, நெய்தல் தெரு, உதண்டி, சென்னை, செங்கல்பட்டு மாவட்டம்-600 119.
2. திரு. கருப்புசாமி த/பெ. திரு. முத்துராஜன், எண். B3, 3/191, அடுத்தளம், VVS சாலை, நெய்தல் தெரு, உதண்டி, சென்னை, செங்கல்பட்டு மாவட்டம்-600 119.

**வாதியின் வழக்கறிஞர் கொடுக்கும் அறிவிப்பு**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு எண்ணில் பிரதிவாதிகள், வாதி வங்கியில் வாங்கிய கடனுக்காக தங்கள் மீது ரூ.23,78,757.77 வசூலிப்பதற்காக மேன்மைமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் III சென்னை முன் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாகிய தாங்கள் ஆஜராக வாய்தா 13.11.2025ல் உள்ளது. அன்று காலை 11.00 மணியளவில் தாங்கள் மேற்படி தீர்ப்பாயத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்து கொள்ள வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு வாதிக்கு சாதகமாக தீர்மானிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

ஜெ. ராமநாதன், வழக்கறிஞர்

**SBI பாரத ஸ்டேட் வங்கி**

வீட்டு கடன் மையம் (HLC, MRC நகர்)
எண்.4, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.
E-Mail : sbi.17193@sbi.co.in / PHONE: 2498 2008 / 9445395296

**மின்-ஏல விற்பனை அறிவிப்பு**

| | |
|---|---|
| கடன்தாரரின் பெயர் | திரு. ஜிதேந்தர் M. ரங்கா |
| கார் கடன் கணக்கு எண் | 43995877819 |
| வாகனத்தின் பதிவு எண் | TN 04 BE 8986 |
| தயாரிப்பு/வகை | HYUNDAI VERNA 1.5 MPI IVT SX |
| குறைந்தபட்ச விலை | ரூ.11,35,000/- |
| முன்வைப்பு தொகை | ரூ.1,13,500/- |
| ஏல உயர்வு பெருக்கு தொகை | ரூ.10,000/- |
| கடன்தாரரின் பெயர் | திரு. சயத் அப்துல் ஃபரூக் |
| கார் கடன் கணக்கு எண் | 43477610323 |
| வாகனத்தின் பதிவு எண் | TN 14 AM 0216 |
| தயாரிப்பு/வகை | HYUNDAI CRETA 1.5 CRDI MTE |
| குறைந்தபட்ச விலை | ரூ.9,65,000/- |
| முன்வைப்பு தொகை | ரூ.96,500/- |
| ஏல உயர்வு பெருக்கு தொகை | ரூ.9,500/- |
| மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் | 29.09.2025, காலை 11.00 மணி மற்றும் பகல் 12.00 மணிக்கிடையில், மற்றும் விற்பனை முடியும் வரை ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கு தானாக நேர நீடிப்பு. |
| வரிகள், இதர | வெற்றிபெறும் நபர் வெற்றிப்பெறும் ஏலதொகையின் மீது (அதாவது விற்பனை மதிப்பில்) கூடுதலாக 18% GST செலுத்த வேண்டும். (விற்பனை மதிப்புக்கு கூடுதலாக). |
| முன்வைப்பு தொகை செலுத்துதல் | "SBI, HLC MRC NAGAR" பெயரில் டிமாண்ட் டிராப்ட் வழியாக செலுத்தலாம். |
| வாகனம் பார்வையிடும் நாள் | 25.09.2025, காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. |

EMD உடன் ஆன்லைன் விண்ணப்பத்தை செலுத்த கடைசி நாள் : 26.09.2025, மாலை 4.00 மணிவரை.

மேலும் இதர விவரங்களை அறிய விரும்பும் விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் உதவி பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, HLC, MRC நகர், எண்.4, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004, அலுவலக நேரத்தில், போன் எண். : 044 - 2498 2008 / 2004, Mobile : 7871700090/9344175910 (HYUNDAI VERNA) மற்றும் Mobile : 8838860859 (HYUNDAI CRETA) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவரான - C1 India Pvt Ltd. திரு. பிரபாகர்- 7418281709 அவர்களை தொடர்புக்கொள்ளவும். tn@c1india.com, support@bankeauctions.com.

இடம் : சென்னை, நாள் : 20.09.2025 — அதிகாரபூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, HLC, MRC நகர்

**கடன் வசூல் தீர்ப்பாயம்-II சென்னை முன்னிலையில்** — O.A.No.900 of 2024

**பாரத ஸ்டேட் வங்கி** — (விதி - 8(1)ன் கீழ்) சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கானது) — தேதி: 15.09.2025, அதிகாரபூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி

**Karur Vysya Bank** — சொத்து வசூல் கிளை, 2வது தளம், எண்.1, பத்மாவதியார் ரோடு, கோபாலபுரம், சென்னை-600 086, போன்: 044-2835 9331 / 33 Mob: 89398 69789

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை விற்பனை செய்தல். கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை கரூர் வைஸ்யா வங்கி, சென்னை அண்ணாநகர் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 10.10.2025 அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தாரர்: M/s.நஸ்ரீன் கன்ஸ்ட்ரக்ஷன், அதன் சார்பாக உரிமையாளர் Mr.E.யேசுராஜன், எண்.51 & 53, B-3, 1வது தளம், SKM சத்யா ரமணா ப்ளாட்ஸ், வடக்கு செங்குன்றம் ரோடு, வில்லிவாக்கம், சென்னை- 600 049. உரிமையாளர் / கடன்தாரர்: 2.Mr.E.யேசுராஜன், S/o.Mr.T.இசக்கிமுத்து நாடார், ஜாமீன்தாரர்: 3.Mrs.Y.யாஸ்மின் ரேவதி, W/o.Mr.E.யேசுராஜன், இருவரது முகவரி: எண்.12/1, கலைமகள் நகர், ...

**கனரா வங்கி** — சென்னை மவுண்ட் ரோடு கிளை, எண்.781-785, தரைதளம், ராயலா டவர்ஸ், அண்ணாசாலை, சென்னை-600002. Tel +91 44-28521812. Mob:+91-9498305602. Email:cb0911@canarabank.com

**கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13(2) கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்)**

பெறுநர் :
1. M/s.Venture Tradelinks, பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி.நிர்மலா திலிப் குமார், எண்.4, F11, பாலாஜி நகர், Kuv Eye AM Optics பாலாஜி நகர், சென்னை - 600063. மேலும் ஒரு முகவரி: ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை – 600063. மேலும் ஒரு முகவரி: மனை எண்.33, 34, 35, சடையாங்குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 600103
2. திருமதி. நிர்மலா திலிப்குமார், க/பெ. திரு. திலிப்குமார், ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை – 600063.
3. திரு. திலிப்குமார் த/பெ. திரு. லால்சந்த் காந்தி, ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை – 600063.

அன்புடையீர்,

பொருள் : 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் ...

# பிற நாடுகள் மீதான சார்பே மிகப் பெரிய எதிரி

**பாவ்நகர், செப். 20:** 'பிற நாடுகள் மீதான சார்பே, இந்தியாவின் மிகப் பெரிய எதிரி; தற்சார்பின் வாயிலாகவே இந்த எதிரியை முறியடிக்க முடியும்' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

சிப் (செமிகண்டக்டர்) முதல் ஷிப் (கப்பல்) வரை அனைத்தும் உள்நாட்டில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கச்சா எண்ணெய், மின்னணு சாதனங்கள், கனரக இயந்திரங்கள், ரசாயனங்கள், முக்கியத் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட தனது தேவைகளுக்கு இந்தியா பிற நாடுகளைச் சார்ந்துள்ள நிலையில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், பாவ்நகரில் சனிக்கிழமை நடைபெற்ற 'கடலிலிருந்து செழிப்பு' எனும் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

அப்போது, நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கடல்சார் மேம்பாட்டுப் பணிகள் உள்பட மொத்தம் ரூ.34,200 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் அவர் பேசியதாவது:

உலகளாவிய சகோதரத்துவ உணர்வுடன் முன்னேறும் இந்தியாவுக்கு சர்வதேச அளவில் எந்த பெரிய எதிரியும் இல்லை. உண்மையில், பிற நாடுகளைச் சார்ந்திருப்பதே, நமது மிகப் பெரிய எதிரியாக உள்ளது. இந்த எதிரியை நாம் ஒருங்கிணைந்து முறியடிக்க வேண்டும்.

வெளிநாடுகளை அதிகம் சார்ந்திருப்பது, தேசத்தின் அதிக தோல்விக்கு வழிவகுக்கும்; நாட்டின் மதிப்பையும் சமரசத்துக்கு உள்ளாக்கும். உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடான இந்தியா தற்சார்பை எட்டுவது, உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளத்துக்கு மிக அவசியம்.

**தற்சார்பே ஒரே தீர்வு:** 140 கோடி இந்தியர்களின் எதிர்காலத்தை அந்நிய சக்திகளிடம் விட்டுவிட முடியாது; நாட்டின் வளர்ச்சிக்கான உறுதிப்பாடு, வெளிநாட்டுசார்பை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. 140 கோடி பேரை கொண்ட ஒரு தேசம், மற்றவர்களைச் சார்ந்திருப்பது, நமது சுயமரியாதையைப் பாதிக்கும்.

## பிரதமர் மோடி



குஜராத் மாநிலம் பாவ்நகரில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

நாட்டின் தற்போதைய அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு உண்டென்றால், அது தற்சார்புதான். சுதந்திரத்துக்குப் பிறகான காங்கிரஸ் அரசுகளின் லைசென்ஸ் கொள்கை கட்டுப்பாடுகளால் நமது இளைஞர்களின் திறன் ஒடுக்கப்பட்டது. இந்தியாவின் பாரம்பரிய வலிமைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதால், 60-70 ஆண்டுகளாகியும் தேசம் வெல்ல முடியாத சூழல் நிலவியது.

உலகமயமாக்கல் தொடங்கிய காலகட்டத்தில், அப்போதைய அரசுகள் இறக்குமதியில் மட்டுமே கவனம் செலுத்தின; இது, ஆயிரக்கணக்கான கோடி ஊழல்களுக்கே வழிவகுத்தது. மோசமான கொள்கைகள், தேசத்தின் திறன் மிகு எழுச்சியைத் தடுத்தன. முக்கியமாக, நாட்டின் கப்பல் போக்குவரத்துத் துறையில் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

**ஆண்டுக்கு ரூ.6 லட்சம் கோடி...:** வரலாற்று ரீதியில், நமது நாட்டில் கப்பல் கட்டுமானம் துடிப்பான தொழிலாக விளங்கியுள்ளது. முன்பு இந்திய கடலோர மாநிலங்களில் உருவாக்கப்பட்ட கப்பல்கள், உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய கடல்வழி வர்த்தகத்திலும் ஈடுபட்டன. 50 ஆண்டுகளுக்கு முன்பு வரைகூட நாட்டின் இறக்குமதி-ஏற்றுமதியில் 40 சதவீதம் உள்நாட்டுத் தயாரிப்பு கப்பல்கள் மூலம் நடைபெற்றது. இப்போது இது 5 சதவீதமாக குறைந்துவிட்டது. வெளிநாட்டு கப்பல் நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ரூ.6 லட்சம் கோடி இந்தியா செலுத்துகிறது. பல்லாண்டுகளாக கணக்கிட்டால், எவ்வளவு தொகை வரும் என்பதை ஊகிக்க முடியும்.

இத்தொகையில் சிறு பகுதியை உள்நாட்டு கப்பல் போக்குவரத்துத் துறையில் முந்தைய அரசுகள் செலவிட்டிருந்தால்கூட, உலகம் முழுவதும் இப்போது இந்தியக் கப்பல்கள் பயன்பாட்டில் இருந்திருக்கும். இந்தியாவுக்கு லட்சக்கணக்கான கோடி வருமானம் கிடைத்திருக்கும்.

இந்திய கடல்சார் துறை இப்போது அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களை நோக்கி நகர்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிகால 5 கடல்சார் சட்டங்கள் மாற்றப்பட்டு, தற்போது புதிய வடிவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஒரே நாடு, ஒரே ஆவணம்; ஒரே நாடு, ஒரே துறைமுகம் போன்ற முன்னெடுப்புகளின்கீழ் அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் நடைமுறைகள் எளிதாக்கப்படும். கப்பல் கட்டுமானத் துறையில் எதிர்வரும் ஆண்டுகளில் ரூ.70,000 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும். இந்திய கடற்கரைகள், நாட்டின் வளமைக்கான வாயில்களாக மாறும் என்றார் பிரதமர் மோடி.

### சென்னை, எண்ணூர் துறைமுகங்களில்...

மும்பை சர்வதேச கப்பல் முனையத்தை திறந்து வைத்த பிரதமர் மோடி, சென்னை துறைமுகத்தில் கடல் சுவர்கள் மற்றும் தடுப்புகள் உள்ளிட்ட கடலோர பாதுகாப்புத் திட்ட பணிகள், எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்தில் தீயணைப்பு வசதிகள் மற்றும் நவீன சாலை, குஜராத் காண்ட்லா துறைமுகத்தில் பன்முக சரக்கு முனையம், பாட்னா மற்றும் வாரணாசியில் கப்பல் பழுதுபார்க்கும் ஆலைப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

### பிரதமர் வான்வழி ஆய்வு

குஜராத்தின் தோலேராவில், தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கட்டமைக்கப்பட்டுவரும் சிறப்பு முதலீட்டு மண்டலத்தை (பசுமைத் தொழில் நகரம்) பிரதமர் மோடி வான்வழியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சுரேந்திரநகர் மாவட்டத்தில் அவாடா குழுமம் சார்பில் ரூ.1,600 கோடி செலவில் அமைக்கப்பட்ட 280 மெகாவாட் திறன்கொண்ட சூரிய மின் உற்பத்தி திட்டத்தையும் அவர் திறந்துவைத்தார்.

# பழங்குடியின அந்தஸ்து கோரி 'குர்மி' சமூகத்தினர் போராட்டம்

### ஜார்க்கண்டில் ரயில் சேவை பாதிப்பு

**ராஞ்சி, செப்.20:** ஜார்க்கண்டில் பழங்குடியின அந்தஸ்து கோரி 'குர்மி' ஆதிவாசி சமூகத்தினர் சனிக்கிழமை நடத்திய முற்றுகைப் போராட்டத்தால் ரயில் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குர்மி சமூகத்துக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்கவும் குர்மாலி மொழியை அரசமைப்புச் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையில் சேர்க்கவும் ஆதிவாசி குர்மி சமாஜ் (ஏகேஎஸ்) அமைப்பின் சார்பில் ராஞ்சி, ராம்கர், கிரீதி, ஹசாரிபாக், தன்பாத் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ரயில் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

இதனால் வந்தே பாரத் மற்றும் ராஜ்தானி உள்ளிட்ட 12 விரைவு ரயில்கள் மற்றும் 25 பயணிகள் ரயில்கள் ரத்து செய்யப்பட்டு, 24-க்கும் மேற்பட்ட ரயில்கள் மாற்றுப்பாதையில் இயக்கப்பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஒட்டுமொத்தமாக 100-க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக ராஞ்சி பிரிவு ரயில்வே அதிகாரி தெரிவித்தார்.

இந்நிலையில், தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை ரயில் தண்டவாளத்தில் நடத்தப்படும் போராட்டங்களை திரும்பப் பெறப் போவதில்லை என ஏகேஎஸ் அமைப்பின் தலைவர் ஓ.பி.மாஹ்தோ தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்து ஜார்க்கண்ட் மாணவர்கள் யூனியன் (ஏஜேஎஸ்யு) மற்றும் ஜார்க்கண்ட் லோககாந்திரிக் கிராந்திகாரி மோர்ச்சா (ஜேகேஎல்எம்) உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

இதுகுறித்து ஏஜேஎஸ்யு கலைவர் சுதேஷ் மாஹ்தோ கூறுகையில், 'மாநிலம் முழுவதும் குர்மி சமூகத்தினர் மேற்கொண்ட போராட்டம் பெரும் வெற்றிபெற்றுள்ளது. 1931-இல் பழங்குடியின பட்டியலில் இருந்து குர்மி சமூகம் நீக்கப்பட்டது. அதன்பிறகு தங்களது உரிமைகளுக்காக தொடர்ந்து குர்மி சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்' என்றார்.

**எதிர் போராட்டம்:** குர்மி சமூகத்தினரின் கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் மாளிகை முன்பு பல்வேறு பழங்குடியின அமைப்புகளும் எதிர் போராட்டத்தில் ஈடுபட்டன.

# வாக்குத் திருட்டு தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணையம் வழங்கவில்லை

**வயநாடு, செப். 20:** கர்நாடகத்தில் நடைபெற்ற வாக்குத் திருட்டு தொடர்பாக அம்மாநில சிஐடி போலீஸார் கோரியிருந்த தகவல்களை தேர்தல் ஆணையம் வழங்கவில்லை என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

கேரளத்தில்நடைபெறும்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக ராகுல் காந்தி தனது தாயார் சோனியா காந்தியுடன் வயநாடு நகருக்கு வெள்ளிக்கிழமை வந்தார். அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கர்நாடகத்தில் நடைபெற்ற வாக்குத் திருட்டில் பயன்படுத்தப்பட்ட எண்கள் தொடர்பாக தகவல் அளிக்குமாறு கோரி அம்மாநில சிஐடி போலீஸார் சில கடிதங்களை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைத்தனர். எனினும் தேர்தல் ஆணையம் அந்தத் தகவல்களை வழங்கவில்லை.

இந்த விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் சிக்கியுள்ளார் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. இது தொடர்பாக காவல் துறை தகவலைக் கோருகிறது; ஆனால் தலைமைத் தேர்தல் ஆணையர் தகவல் தர மறுக்கிறார். இது என்னுடைய கருத்து அல்ல; இது உண்மை.

### ராகுல் காந்தி விமர்சனம்



கேரள மாநிலம் வயநாட்டில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி.

நரேந்திர மோடி வாக்கு திருட்டில் ஈடுபட்டு, தேர்தலில் வெற்றி பெற்றார் என்பது குறித்து யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லாத வகையில் காங்கிரஸ் ஆதாரங்களை வெளியிடும்.

நாங்கள் ஹைட்ரஜன் குண்டு போன்ற உண்மையை அம்பலப்படுத்துவோம். எனது இரு செய்தியாளர் சந்திப்புகளில் கூறியபடி உண்மைநிலவரத்தைவெளிப்படுத்துவோம். நாங்கள் சொல்வதற்கு உரிய ஆதாரம் எங்களிடம் உள்ளது. ஆதாரம் இல்லாமல் நாங்கள் எதையும் கூறவில்லை. நான் எனது வேலையைச் செய்வேன்.

தேர்தல் காவல்காரராக இருக்கும் தேர்தல் ஆணையம் கண்ணைத் திறந்திருந்து வாக்குத் திருட்டை கவனித்தபடி இருந்தது; வாக்குத் திருடர்களை அது பாதுகாத்தது என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

# வெளியுறவுக் கொள்கையில் இந்தியா தோல்வி

### விசா விவகாரத்தை முன்வைத்து காங்கிரஸ் குற்றச்சாட்டு

**புது தில்லி, செப். 20:** இந்தியப் பணியாளர்கள் அதிகம் பயன்படுத்தும் ஹெச்-1பி விசா ஆண்டு கட்டணத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் ரூ.88 லட்சமாக உயர்த்தியதை முன்வைத்து பிரதமர் நரேந்திர மோடியை காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியர்களின் நலன்களைக் காக்கும் வெளியுறவுக் கொள்கையில் மத்திய அரசு தோல்வியடைந்துவிட்டது. வெளிநாடுகளுக்குச் செல்லும்போது மக்கள் மோடியின் பெயரைக் கூறி முழக்கமிடுவதும், கட்டியணைப்பதும், வெற்று வார்த்தைகளும் வெளியுறவுக் கொள்கையல்ல.

நாட்டு மக்களின் நலன்களை வெளிநாடுகளில் காப்பதே உண்மையான வெளியுறவுக் கொள்கை.

இந்திய நலன்களை முதன்மையாக வைத்து வெளிநாடுகளுடன் நட்புபேண வேண்டும். உங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து சொன்னவர் (டிரம்ப்) அளித்த பரிசால் இந்தியர்கள் மிகவும் துன்பத்தில் தள்ளப்பட்டுள்ளனர்' என்று பதிவிட்டுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இது தொடர்பாக 'எக்ஸ்' வலைதளத்தில் சனிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'இந்தியா பலவீனமான பிரதமரைக் கொண்டுள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் கௌரவ் கோகோய் வெளியிட்ட பதிவில், 'ஹெச்1-பி விசா கட்டண உயர்வு மூலம் நன்கு படித்த புத்திசாலித்தனமான இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. ஆனால், இப்போதும் பிரதமர் மோடி எந்த முறையான நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாகவே இருக்கப்போகிறார். இந்தியர்களின் நலன்களில் அரசுக்கு என்ன அக்கறை உள்ளது?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மற்றொரு காங்கிரஸ் மூத்த தலைவர் பவன் கேரா வெளியிட்ட பதிவில், '8 ஆண்டுகளுக்கு முன்பு மோடி - டிரம்ப் சந்திப்பில் விசா விவகாரம் பேசப்படாதது குறித்து ராகுல் காந்தி சுட்டிக்காட்டியிருந்தார்.

இப்போது வரை அந்த பிரச்னை தொடர்கிறது. இந்தியா பலவீனமான பிரதமரிடம் சிக்கிக் கொண்டது' என்று கூறியுள்ளார்.

சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ் லக்னௌவில் செய்தியாளர்களிடம் இது தொடர்பாக கூறுகையில், 'மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கை தொடர்ந்து அந்நிய மண்ணில் தோல்வியைச் சந்தித்து வருகிறது.

ஏற்கெனவே பொருளாதாரக் கொள்கையும் தோல்வியடைந்துள்ள நிலையில், பிற நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதும் மத்திய அரசால் இயலாத செயலாகிவிட்டது.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் வேலைக்காகச் செல்ல வேண்டாம். இஸ்ரேல், ரஷியா போன்ற நாடுகளுக்குச் சென்று போர்முனைக்குச் செல்லுங்கள் என்று உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் முன்பு பேசியதுதான் இப்போது நினைவுக்கு வருகிறது.

மத்திய பாஜக அரசு முடிவுக்கு வந்தால் பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்' என்றார்.

# நீதிமன்றங்களில் அரசுத் துறைகள் மேல்முறையீடு: கட்டுப்படுத்துவது அவசியம்

### மத்திய சட்டத் துறை அமைச்சர்

**புது தில்லி, செப்.20:** நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக அரசுத் துறைகள் மேல்முறையீடு செய்யும் போக்கை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

இதுதொடர்பாக புது தில்லியில் மத்திய நிர்வாக தீர்ப்பாய மாநாட்டில் அவர் சனிக்கிழமை தெரிவித்ததாவது:

நீதிமன்றங்கள் வலுவான தீர்ப்புகளை அளித்தாலும், அதற்கு எதிராக அரசு துறைகள் மேல்முறையீடு செய்கின்றன. அரசு அதிகாரிகள் எடுத்த முடிவுகள் தொடர்பாக தீர்ப்புகளில் கேள்வி எழுப்பப்பட்டால், தங்களை காப்பாற்றிக்கொள்ள அவர்கள் நீதிமன்றங்கள் அல்லது மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்கின்றனர்.

வலுவான நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக மத்திய அரசு துறைகள் மேல்முறையீடு செய்ய திட்டமிடுவது குறித்து எனக்கும் தொடர்ந்து கோப்புகள் வரும். இந்தப் போக்கை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்றார்.

மாநாட்டில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பேசுகையில், 'நீதிமன்றங்களைப் போன்றதல்ல நிர்வாக தீர்ப்பாயங்கள்.

நிர்வாகத்துக்கும், நீதித்துறைக்கும் இடையே அந்தத் தீர்ப்பாயங்களுக்குத் தனித்துவமான இடம் உள்ளது.

தீர்ப்பாயங்களின் பல உறுப்பினர்கள் அரசுப் பணியாற்றியவர்களாக உள்ளனர். எஞ்சியவர்கள் நீதித்துறையைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

தீர்ப்பாயங்களில் உறுப்பினர்களாக உள்ள முன்னாள் அரசு அதிகாரிகள், தாங்கள் அரசுப் பணியாற்றியவர்கள் என்பதை மறப்பதில்லை. இதனால் அரசுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்க அவர்களில் சிலர் விரும்புவதில்லை. இதை அவர்கள் கைவிட வேண்டும்' என்றார்.

# சபரிமலை மேம்பாட்டுக்கு ரூ.1,000 கோடி

**பத்தனம்திட்டா, செப்.20:** சபரிமலையின் மேம்பாட்டுக்கு ரூ.1,000 கோடிக்கும் அதிகமான மதிப்பு கொண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் பம்பை திரிவேணியில் உலக ஐயப்ப சங்கமம் மாநாட்டை முதல்வர் பினராயி விஜயன் சனிக்கிழமை தொடங்கி வைத்து பேசியதாவது:

ஜாதி, மத எல்லைகளைத் தாண்டிய வழிபாட்டுத் தலமாக உள்ள சபரிமலைக்கு அனைத்து மதத்தினரும் வருகின்றனர். மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருப்பதி ஏழுமலையான் கோயில் போல சபரிமலை ஐயப்பன் கோயிலை புகழ்பெற்ற யாத்திரை தலமாக்குவதே இந்த சங்கமத்தின் நோக்கம்.

உலகம் முழுவதும் உள்ள ஐயப்ப பக்தர்கள் சபரிமலைக்கு வர வேண்டும் என்பதற்காக வளர்ச்சி திட்டங்கள் திட்டமிடப்பட்டு வருகின்றன. சபரிமலை, பம்பை, நிலக்கல் மற்றும் சபரிமலை கோயிலுக்கு வரும் பாதையின் விரிவான மேம்பாட்டுக்காக பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1,000 கோடிக்கும் மேல் செலவிடப்படும். இதில் 2022 முதல் 2039-ஆம் ஆண்டு வரை, ரூ.778.17 கோடி செலவில் சபரிமலை கோயில் வளாக மேம்பாட்டுப் பணிகள் 3 கட்டங்களாக நடைபெறும்.

அறிவியல்பூர்வமாக தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தில் சபரிமலைக்கு ரயில் பாதை, விமான நிலையம், எளிமையான போக்குவரத்து, வாகன நிறுத்துமிடம், ஓய்வு மையங்கள், பக்தர்களுக்கு மருத்துவ வசதிகள் உள்ளிட்டவற்றை ஏற்படுத்துவதும் அடங்கும்.

கோயில்களின் நிர்வாகத்தை பக்தர்களிடமே விட்டுவிட கோரிக்கைகள் எழுந்தன. ஆனால் கோயில்களை நிர்வகிக்க வாரியங்கள் இல்லாமல் போயிருந்தால் பல கோயில்கள் சீரழிந்திருக்கும். இது தங்கள் வாழ்வாதாரத்துக்கு கோயில்களையே நம்பியிருப்போரை வறுமையில் தள்ளியிருக்கும் என்றார்.

இந்த மாநாட்டுக்கு எதிர்க்கட்சிகளான பாஜக, காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. அவர்களை மறைமுகமாக விமர்சித்த பினராயி விஜயன், 'சங்கமத்தில் கலந்துகொண்டவர்கள் மட்டுமே பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது போல உண்மையான பக்தர்கள். மற்றவர்கள் பக்தர்கள் போல தங்களைக் காட்டிக்கொண்டு சங்கமம் மாநாட்டைத் தடுக்க முயற்சித்தனர்' என்றார்.

**4,126 பேர் பங்கேற்பு:** ஐயப்ப சங்கமம் மாநாட்டில் 4,126 பேர் பங்கேற்றனர். அவர்களில் 1,819 கேரளத்தைச் சேர்ந்தவர்கள். 182 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள்.

விவாதங்களின்போதும், சங்கமத்தில் கலந்துகொண்டவர்கள் எழுத்துபூர்வமாகவும் அளித்த பரிந்துரைகள் குறித்து ஆராய 18 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக கேரள தேவஸ்வ அமைச்சர் வி.என்.வாசவன் தெரிவித்தார்.

### கேரள முதல்வர் பினராயி விஜயன்



சபரிமலையையடுத்த பம்பை திரிவேணியில் சனிக்கிழமை நடைபெற்ற உலக ஐயப்ப சங்கமம் மாநாடு தொடக்க விழாவில் கேரள முதல்வர் பினராயி விஜயனுடன் தமிழக அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர்.

### தமிழகத்திலிருந்து 2 அமைச்சர்கள் பங்கேற்பு

தமிழகத்திலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த சங்கமம் மாநாட்டில் தமிழகத்தில் இருந்து சுமார் 1,000 பேர் பங்கேற்றதாக சபரிமலை கோயிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியத் தலைவர் பி.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

உலக ஐயப்ப சங்கமம் மாநாடு குறித்த தனது வாழ்த்துச் செய்தியில், 'தனது இலக்குகளை இந்த சங்கமம் எட்ட வேண்டும்' என்று உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

# பயங்கரவாதிகளுடன் மோதல்: ராணுவ வீரர் வீர மரணம்



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகளுடனான மோதலைத் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட ராணுவ வீரர்கள்.

**ஜம்மு, செப். 20:** ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் ஏற்பட்ட மோதலில் ராணுவ வீரர் வீரமரணமடைந்தார்.

ஜம்மு-காஷ்மீரின் உதம்பூர் மாவட்டம் சியோஜ்தார் வனப் பகுதியில் ராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையினர் இணைந்து வெள்ளிக்கிழமை மாலை முதல் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, மறைந்திருந்த பயங்கரவாதிகள் திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ராணுவ வீரர் மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது.

இதையடுத்து, சக வீரர்கள் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சனிக்கிழமை காலை வரை அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையிலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

துப்பாக்கிச்சூடு நடந்த பகுதியில் மூன்று பயங்கரவாதிகள் வரை பதுங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அப்பகுதியில் சனிக்கிழமை காலையில் மீண்டும் தேடுதல் பணி தொடங்கியது. பாதுகாப்புப் படையினர் தரப்பில் உயிரிழப்புகளைத் தடுக்கும் நோக்கில் ட்ரோன், மோப்ப நாய்கள் உதவியுடன் மிகுந்த முன்னெச்சரிக்கையாக தேடுதல் பணி நடைபெற்று வருகிறது.

# பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதல்: மணிப்பூரில் தேடுதல் வேட்டை தீவிரம்

**இம்பால், செப். 20:** மணிப்பூரில் அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படை வீரர்கள் இருவரை சுட்டுக் கொன்ற கும்பலைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலைக் கண்டித்து, உள்ளூர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மணிப்பூரில் அண்மைக்காலமாக தாக்குதல் எதுவும் நிகழாமலிருந்த நிலையில், பிஷ்ணுபூர் மாவட்டத்தின் நம்போல் பகுதியில் மத்திய துணை ராணுவப் படைகளில் ஒன்றான அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர் மீது ஆயுதமேந்திய கும்பல் கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில், ஷியாம் குருங், ரஞ்சித் சிங் காஷ்யப் ஆகிய இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர். மேலும், 5 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் இம்பாலில் இருந்து பிஷ்ணுபூர் நோக்கி நெடுஞ்சாலையில் பாதுகாப்புப் படையினர் பயணித்துக் கொண்டிருந்தபோது, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் திடீரென தாக்குதல் நடத்தப்பட்டது.

மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால், பதிலடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்று காயமடைந்த வீரர்கள் தெரிவித்தனர்.

4-5 பேர் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதலில் ஈடுபட்டவர்களைப் பிடிக்க தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

**பொதுமக்கள் போராட்டம்:** இதனிடையே, பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலைக் கண்டித்து, பெண்கள் உள்பட உள்ளூர் மக்கள் சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'இந்தத் தாக்குதல் மூலம் ஆயுதமேந்திய கும்பல் சாதிக்கப் போவது என்ன?' என்று கேள்வியெழுப்பிய போராட்டக்காரர்கள், பாதுகாப்புப் படையினர் வெளிப்படுத்திய நிதானத்தை நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டனர்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே கடந்த 2023-இல் மோதல் தொடங்கியது.

வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 250-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். தற்போது தாக்குதல் நடத்தப்பட்ட பிஷ்ணுபூர் மாவட்டம், மைதேயி சமூகத்தினர் அதிகம் உள்ள பகுதியாகும்.

**குகி அமைப்பு கண்டனம்:** குகி பழங்குடியினரின் முக்கிய அமைப்பான குகி ஜோ கவுன்சிலும் இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் இல்லாத பிஷ்ணுபூர் மாவட்டத்தில் இச்சம்பவம் நடந்துள்ளதாக குகி ஜோ கவுன்சில் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னதாக, மணிப்பூருக்கு கடந்த செப்டம்பர் 13-ஆம் தேதி பயணித்த பிரதமர் மோடி, பாதிக்கப்பட்ட இருதரப்பு மக்களையும் சந்தித்துப் பேசியதுடன், அனைத்து குழுக்களும் வன்முறையைக் கைவிட்டு, அமைதிப் பாதையில் பயணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பல்வேறு ஆயுதக் குழுக்களுடன் அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கும் சூழலில், பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


## ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: அலெக்சாண்டர் சதுக்கம், எண்.2, (பழைய எண்.34 & 35), 3வது தளம், சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை-600 032 Ph: (044)-4210 6650

### இ - ஏல விற்பனை அறிவிப்பு

**கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்**

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள் **ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், கீழ்க்கண்ட கிளைகளில்** கீழ்கண்ட தபசில் உள்ள சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார்கள்/ மேற்படி கடன்தாரருக்கு SARFAESI ACT-ன்படி கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது/ அறிவிப்பில் கண்ட கடன் தொகை, வட்டி, இதர செலவுகளையும் கடன்தாரர்கள் கட்ட தவறியதால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழ்கண்ட அட்டவணையில் உள்ள அடமான சொத்துக்களை SARFAESI ACT-ன்படி கையகப்படுத்தி மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளிட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் மற்றும் அந்த சொத்துக்களை **"எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையில்** உடன்படிக்க பிரிவு 8 & 9 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002-ன் கீழ் கம்பெனி விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளது.

**இ-ஏல தேதி & நேரம்: 14.10.2025, காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை**
**விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையற்ற நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்**

**இ-டெண்டரை சமர்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 13.10.2025, மாலை 4.00 மணிக்கு**

**தாம்பரம் கிளை: (தற்போது ARB சென்னை): Ph: 044-2628 5959 & Mob: 78248 99635**

**வ.எண்.1: கடன்தாரர்: Mrs.S.சபியா,** W/o.Mr.S.M.சாதிக், **சக-கடன்தாரர்: Mr.S.M.சாதிக்,** S/o.Mr.சின் முகமது; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.10.2022; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை** [கடன் கணக்கு எண்கள்.1331860004126 (Now 2571860000878) & 1331860004360 (Now 2571860000767) 20.10.2022 அன்றுள்ளபடி முறையே ₹ 1,27,99,144/- & ₹ 51,44,812/- மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள் **சுவாதீனம் எடுத்த தேதி: 05.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: 12.09.2025** அன்றுள்ளபடி முறையே ₹1,88,02,541/- & ₹ 59,82,777/- ஆகும்.

**அசையா சொத்து விபரம்:** தென் சென்னை பதிவு மாவட்டம், நீலாங்கரை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.174/1, பட்டா எண்.1207, பட்டா படி சர்வே எண்.174/1G, **மனை எண்.113, எண்.146, ஈஞ்சம்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்** என்னும் முகவரியில் **2400 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.114, தெற்கு: மனை எண்.112, கிழக்கு: மனை எண்.95, மேற்கு: 30 அடி ரோடு

| குறைந்தபட்ச கேட்பு விலை | EMD (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) | குறைந்தபட்ச ஏல உயர்வுத்தொகை |
|---|---|---|
| ₹ 1,88,43,000/- | ₹ 18,84,300/- | ₹ 2,00,000/- |

**அண்ணா நகர் கிளை : Ph: 044-2628 5959 & Mob : 94443 94978**

**வ.எண்.2: கடன்தாரர்: Mr.D.போரஸ்,** S/o.Mr.S.தர்மன், **சக-கடன்தாரர்: Mrs.P.சுரேகா,** W/o.Mr.D.போரஸ் மற்றும் **ஜாமீன்தாரர்கள்: 1.Mr.M.பாபுஜி** (Vide Loan A/c No.NCH-3168 & NCH-3890), S/o.Mr.B.மூர்த்தி, **2.Mr.V.அருள்** (Vide Loan A/c No.NCH-2553), S/o.Mr.K.விநாயகமூர்த்தி; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 12.09.2023; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை** [கடன் கணக்கு எண்கள்.1171860002553, 1171820003186 & 1171820003890) 07.09.2023 **அன்றுள்ளபடி** முறையே ₹ 16,82,023/- , ₹ 9,20,389/- & ₹ 11,21,810/- வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள், **சுவாதீனம் எடுத்த தேதி: 26.02.2024; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: 15.09.2025** அன்றுள்ளபடி முறையே ₹ 17,63,752/-, ₹ 16,09,780/- & ₹ 13,25,082/- ஆகும்.

**அசையா சொத்து விபரம்:** வட சென்னை பதிவு மாவட்டம், ராயபுரம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, RS.எண்.1710/4, தண்டையார்பேட்டை கிராமம், தண்டையார்பேட்டை தாலுகா புதிய எண்.76, பழைய எண்.65, சிமெண்ட்ரி ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600021 என்னும் முகவரியில் 499 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: RS எண்.1710/12, 1710/10 & 1710/11, கிழக்கு: கர்ணனின் சொத்து, மேற்கு: RS எண்.1710/3 & 1710/2, தெற்கு: சிமெண்ட்ரி ரோடு. அளவுகள்: வடக்கு தெற்காக 11 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்காக 42 அடி, 6 அங்குலம்.

| குறைந்தபட்ச கேட்பு விலை | EMD (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) | குறைந்தபட்ச ஏல உயர்வுத்தொகை |
|---|---|---|
| ₹ 70,61,000/- | ₹ 7,06,100/- | ₹ 75,000/- |

**இ-ஏல நடைமுறைக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர்கள் வ.எண்.1: M/s.C1 India Pvt. Ltd., Mr.பிரபாகரன் – 74182-81709 & வ.எண்.2: M/s.4Closure, Mr.M.தினேஷ்-81420 00735, 81420 00061. சொத்துக்களை பார்வையிட, ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கிளை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், அந்தந்த கிளைகளில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, தொடர்பு கொள்ளலாம்.**

தேதி: 16.09.2025 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்



## பஞ்சாப் நேஷனல் வங்கி

ਪੰਜਾਬ ਨੈਸ਼ਨਲ ਬੈਂਕ ...the name you can BANK upon!

சொத்து மீட்பு மேலாண்மை கிளை (ARMB), வட்டார அலுவலகம் திருச்சி தஞ்சாவூர் சாலை, கைலாசபுரம், திருச்சி - 620014. தொ. பே: 0431 - 2521165, மின்னஞ்சல் : cs8327@pnb.co.in

### அசையா சொத்திற்கான சுவாதீன அறிவிப்பு [விதி 8 (1)]

கீழே கையொப்பமிட்டுள்ளவர் பஞ்சாப் **நேஷனல் வங்கி,** அதிகாரபூர்வ அதிகாரி 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப் பிரிவு 13(12)-ன் கீழ் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகளில் **விதி 3-ன் கீழ்** தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்) **M/s A லோகநாதன் மளிகை, (கடன்தாரர்), உரிமையாளர் திரு. மணிகண்டன் லோகநாதன்,** எண்.215, MG சாலை, விழுப்புரம் - 605602. **திரு. மணிகண்டன் லோகநாதன், ( M/s A லோகநாதன் மளிகை இன் உரிமையாளர்)(கடன்தாரர்)** த/பெ. திரு. லோகநாதன், எண்.38, இராஜகோபால் தெரு,விழுப்புரம் வட்டம்,விழுப்புரம் - 605602 . **திருமதி. பூங்கோதை, (ஜாமீன்தாரர்/அடமானதாரர்/சட்டப்பூர்வ வாரிசுதாரர்)** க/பெ. திரு. லோகநாதன்,எண்.38, இராஜகோபால் தெரு,விழுப்புரம் வட்டம்,விழுப்புரம் - 605602. **திருமதி. தாரணிசெல்வி. E, (ஜாமீன்தாரர்/அடமானதாரர்/சட்டப்பூர்வ வாரிசுதாரர்)** க/பெ. திரு. ஏழுமலை, H105, ஹன்சா கோர்ட் யார்டு,643, T. H. சாலை, திருவொற்றியூர்,திருவள்ளூர் - 600019. **திருமதி. வரலட்சுமி செந்தில்குமார், (ஜாமீன்தாரர்/அடமானதாரர்/சட்டப்பூர்வ வாரிசுதாரர்)** க/ பெ. **திரு. செந்தில்குமார்,** எண்.20, முதல் குறுக்குத் தெரு, TGS நகர், சொக்கநாதன் பேட்டை, தட்டாஞ்சாவடி,பாண்டிச்சேரி - 605009 ஆகியோர்களுக்கு **04.07.2025** தேதியிட்ட **கோரிக்கை அறிவிப்பு** (Demand Notice) அனுப்பப்பட்டு கடன் வசதி பெற்ற **விழுப்புரம் (169810) கிளைக்கு** செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையான **ரூ. 38,09,799.33 (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து ஒன்பது ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்)** இந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** செலுத்துமாறு கோரப்பட்டது.

கடன்தாரர் கடன் பாக்கித்தொகையை முழுமையாக திரும்ப செலுத்தத் தவறிவிட்டபடியால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டப் பிரிவு 13(4)-ன் கீழும் மற்றும் மேற்குறிப்பிட்ட பிரிவு 8 ன் கீழும் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **15.09.2025** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

**கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

கடன்தாருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக்கூடாது, மீறி வைத்துக் கொண்டால் அது பஞ்சாப் **நேஷனல் வங்கிக்கு** செலுத்தவேண்டிய **31.08.2025** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ.37,81,814.33 (ரூபாய் முப்பத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து எண்ணூற்று பதினான்கு மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்)** மற்றும் **01.09.2025** முதலான எதிர்கால வட்டி / கட்டணங்கள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

**அசையாச் சொத்தின் விளக்கம்:**

**பிணைச் சொத்தின் விளக்கம்: பகுதி– I (பிணையில் உள்ள அசையும் சொத்துக்கள்)** பிணையில் உள்ள எதிர்காலத்தில் மற்றும்தற்போதுள்ள சரக்கிருப்புகள், மூலதனப் பொருட்கள், நடப்பிலுள்ள பணிகள், செய்து முடிக்கப்பட்ட பொருட்கள், உபயோகப் படுத்தப்படும் ஸ்டோர் மற்றும் உதிரிப் பொருட்கள்(இனி 'சரக்கிருப்புகள்' என அழைக்கப்படும்) மற்றும் எதிர்கால மற்றும் தற்போதுள்ள புத்தகக் கடன்கள், நம்பகமான திரும்ப பெறக்கூடியவைகள், decrees, பெறத்தக்க ரொக்கம், அரசு பிணைவைப்புகள், கோரிக்கைகள், பில்கள், ஒப்பந்தங்கள், முதலீடுகள்(அனைத்து 'புத்தக் கடன்கள்' என அழைக்கப்படும்) **பகுதி – II (ஈடுபெறப்பட்டு அடமானத்தில் உள்ள அசையாச்சொத்துக்கள்) லேட் திரு. A. லோகநாதன் த/பெ. திரு. அப்பாவுபிள்ளை அவர்களின் உரிமைப்பெற்ற அசையாச் சொத்து:** விழுப்புரம் பதிவு மாவட்டம், விழுப்புரம் இணை எண்.1 சார்பதிவிற்குட்பட்ட, விழுப்புரம் வட்டம், விழுப்புரம் நகரம், அய்யனார்குளம் தெற்குத் தெரு (எ) இராஜகோபால் தெருவில் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு 4050சதுர அடி, 1274சதுர அடி டெரஸ் மேற்தளங்கொண்ட மற்றும் 1340சதுர அடி RCC மேற்தளங்கொண்ட கட்டிடம் உள்ளிட்டது அதனுடன் பாம்பே கழிவறை, மின்சார பொருத்திகள் 40பாயின்ட்கள், வார்டு எண் பழைய எண். 12, புதிய எண். 36, கதவு எண்.17/38, சொத்து மதிப்பீட்டு பழைய எண்.12442, புதிய எண்.1808. அதன் Dry சர்வே எண்.463/29 இன் 0.18 சென்ட்களில் வட புறத்தில் உள்ள 0.09 சென்ட்கள். மேற்குறிப்பிட்ட சொத்து தற்போது புதிய நகர சர்வே எண்.25, வார்டு - A, பிளாக் - 52.எல்லைகள்:அய்யனார்குளம் தெற்கு தெரு(எ) இராஜகோபால் தெருவிற்கு கிழக்கில்; அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி சொத்திற்கு மேற்கில்,திரு. வீரக்கண்ணு அவர்களின் உரிமைப்பெற்ற தோட்டம் மற்றும் வீட்டிற்கு தெற்கில் மற்றும் திரு. துரைக்கண்ணு அவர்களின் உரிமைப்பெற்ற தோட்டம் மற்றும் வீட்டிற்கு வடக்கில் ஆகிய எல்லைகளுக்கிடையில்: கிழக்கு மேற்காக120', தெற்கு வடக்காக33. 3/4', **மொத்தம் 4050சதுர அடி.**

தேதி: 15.09.2025 — அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: விழுப்புரம் — பஞ்சாப் நேஷனல் வங்கி



## ICICI Bank — நேரடி சுவாதீன அறிவிப்பு

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிமிடெட், 4/10, மைதர் டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு-560068

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், ICICI வங்கி லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அலுவலராக ... பிரிவு 13(12) ... விதி 3 ... [illegible] ... 60 நாட்களுக்குள் செலுத்துமாறு ... [illegible]

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், ... பிரிவு 13(4) ... விதி 8 ... [illegible] ... ICICI வங்கி லிமிடெட் ... [illegible]

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் | சொத்து விவரம் / நேரடி சுவாதீன நாள் | கோரிக்கை அறிவிப்பு நாள் & கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | சங்கர் மற்றும் ஜானகி S, ... LBCHE00005407052 / LBCHE00005506287 | [illegible] ... காஞ்சிபுரம் மாவட்டம் ... 18.09.2025 | 30.08.2021 ரூ. 18,67,809/- | சென்னை |

கடன்தாரர்(களுக்கு) / ஜாமீன்தாரர்(களுக்கு) ... [illegible] ... 30 நாட்கள் ... [illegible]

தேதி: 20.09.2025
இடம்: சென்னை

உண்மையுள்ள, அதிகாரப்பூர்வ அலுவலர், ICICI வங்கி லிட்-க்காக



## equitas SMALL FINANCE BANK — எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் (Formerly Known as Equitas Finance Ltd)

### அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன்: 044-42995000, 42995050.

பிற்சேர்க்கை IV - A பின்படி (விதி 8 (6) மை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு ... [illegible]

| கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி | அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின் | நிர்ணய விலை, வைப்புத் தொகை, ஏல உயர்வுத் தொகை | மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம் | கடன் / மொத்த நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1. திருமதி.தமிழ்ச்செல்வி.J க/பெ.ஜெயபிரகாஷ் 2. திரு.ஜெயபிரகாஷ் த/பெ.அர்ஜுனன் | [illegible] | ரூ.7,86,000/- / ரூ.78,600/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SEACRPK0330735 / 200001535319; 30-01-2024 அன்றுள்ளபடி ரூ.5,95,349/-; 31-01-2024; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 13,40,322/-) |
| 1. திருமதி.கதா.க/பெ. திரு.மகாலிங்கம் 2. திரு.மகாலிங்கம் த/பெ. திரு.கிருஷ்ணன் | [illegible] | ரூ.8,20,000/- / ரூ.82,000/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SERDHLS0311807; 25.05.2022 ... ரூ.7,88,127/-; 26.05.2022; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 16,56,368/-) |
| 1. திரு.தவமணி.S த/பெ.சடையன் 2. திருமதி.நித்யா க/பெ.திரு.தவமணி 3. திரு.சடையன்.S த/பெ.கண்ணு | [illegible] | ரூ.7,95,000/- / ரூ.79,500/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SECGPTU0251856; 11-04-2023 ... ரூ.1,77,529/-; 12-04-2023; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 4,74,232/-) |
| 1. திரு.பி.வாசு த/பெ.திரு.பலராமன் 2. திருமதி.வி.ஜீவிதா க/பெ.திரு.வாசு | [illegible] | ரூ.29,49,000/- / ரூ.2,94,900/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SETVLUR0412459; 18.12.2024 ... ரூ.18,27,313/-; 19.12.2024; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 21,37,826/-) |
| 1. திரு.S.கோபால், எண்.44, CPM தெரு, தண்டோர், திருவள்ளூர்-600072 | [illegible] | ரூ.16,75,000/- / ரூ.1,67,500/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். 700007543307 / 200002024236; 12-03-2025 ... ரூ.12,78,901/-; 13-03-2025; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 15,39,849/-) |
| 1. திருமதி.ரோஜா.P க/பெ.திரு.புஷ்பராஜ் 2. திரு.புஷ்பராஜ் த/பெ.திரு.ரவி | [illegible] | ரூ.2,02,000/- / ரூ.20,200/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். 700007547132 / 7051008166611; 31.05.2024 ... ரூ.1,92,396/-; 01.06.2024; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 3,69,949/-) |
| 1. திரு.செல்வராஜ்.V த/பெ.வெங்கடேசன் 2. திரு.சதீஷ்குமார் த/பெ.வெங்கடேசன் 3. திரு.செல்வகுமார் த/பெ.வெங்கடேசன் | [illegible] | ரூ.9,20,000/- / ரூ.92,000/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SEGUMDI0370102 / 1118177932392; 23-12-2024 ... ரூ.6,38,037/-; 24-12-2024; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 8,37,505/-) |
| 1. திரு.பிரபு த/பெ.முனுசாமி 2. திருமதி.அனிதா க/பெ.பிரபு 3. திருமதி.முருகம்மாள் க/பெ.முனுசாமி | [illegible] | ரூ.9,11,000/- / ரூ.91,100/- / ரூ.10,000/- | 23-10-2025 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை | கடன் கணக்கு எண். SECOLMD0390828 / 70510160031791 / 7051015940141; 23-07-2024 ... ரூ.5,41,849/-; 24-07-2024; (10-09-2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ. 8,44,629/-) |

விருப்பமுள்ள வாங்குபவர்கள்/ஏலதாரர்கள் ... NEFT/RTGS/DD ... "Equitas Small Finance Bank Ltd" ... IFSC Code: ESFB0001001, Bhaggyam Galleria, New No. 18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 ... 22.10.2025 ... [illegible]

மின் ஏல விற்பனைக்கான ... www.Equitasbank.com & https://www.bankeauctions.com ... [illegible]



## இன்டஸ்இண்ட் வங்கி லிமிட்டெட்

**பதிவு அலுவலகம்: 2401, ஜெனரல் திம்மையா சாலை (கன்டோன்மென்ட்), புணே- 411001**
**நுகர்வோர் நிதிப் பிரிவு: புதிய எண் 34, G.N. செட்டி சாலை, தி.நகர், சென்னை-600017**
**மாநில அலுவலகம்: இன்டஸ்இண்ட் வங்கி லிமிட்டெட், எண்.25, சாய் எம்பயர், 3வது தளம், யுனைடெட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், சென்னை-600024**

### சுவாதீன அறிவிப்பு

[கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1)-இன் கீழ்]

கீழே கையொப்பமிட்டுள்ளவர் M/s இன்டஸ்இண்ட் வங்கி லிட்-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (இனி "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (இனி "விதிகள்" எனக் குறிப்பிடப்படும்) விதி 9-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைக் கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் அத்தொகையினைக் குறிப்பிட்ட காலக்கட்டத்துக்குள் மேல் வட்டியுடன் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன்படி தமக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே கடன்தாரர்களின் / ஜாமீன்தாரர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாளில் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே அச்சொத்தின் மீது ஏதாவது பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொண்டால் அது M/s. இன்டஸ்இண்ட் வங்கி லிட்., நிறுவனத்துக்குக் கடன்தாரர்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கும் அதற்கான இடைநிகழ் செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள், வட்டி ஆகியவற்றுக்கும் முதன்மையாகக் கட்டுப்பட்டதாகும். கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான காலக்கெடு மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன் கீழான நெறிமுறைகளுக்கு உட்பட்டது என்பது இதன் மூலம் கடன்தாரரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

| வ. எண் | கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர், கடன் ஒப்பந்த எண் | கோரிக்கை அறிவிப்பு நாள் / சுவாதீன நாள் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 1. | **கடன்தாரர்:** திரு. S தமிழ்செல்வன், த/பெ. திரு. சக்கரை **கூட்டுக் கடன்தாரர்(கள்):** Ms. செல்ல பாண்டீஸ்வரி, க/பெ. தமிழ்செல்வன், **ஜாமீன்தாரர்:** திரு. S பிரபாகரன், த/பெ. சக்கரை தேவர், **கடன் ஒப்பந்த எண்: TCT05004M - 28.06.2019 நாளிட்டது** | 07.11.2024 / **சுவாதீன நாள்:** 16.09.2025 | 27.10.2024 நாள்படி ரூ.16,26,748.92/- (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எழுநூற்று நாற்பத்தெட்டு மற்றும் பைசா தொண்ணூற்று இரண்டு மட்டும்) |

**சொத்து விவரம்:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம், வீடு, நிலத்தின் பிரிபடாப்பங்கு 350 சதுர அடி உட்பட 700 சதுர அடியில் (2800 சதுர அடியில் அடங்கிய 500 சதுர அடிக் கொண்ட நிலம், வடக்குப் பக்கம் 10 x 80 சதுர அடி = 800 சதுர அடி, -1/4ஆவது பங்கு பொது வழி அதாவது 200 சதுர அடி) அடங்கியது மற்றும் கட்டடம், 500 சதுர அடி கட்டுமானப் பரப்புடன் கூடிய தரைத்தளம் உட்பட. நிலத்தின் சர்வே எண் 258/1, பட்டா எண் 286, பட்டாப்படி புதிய சர்வே எண் 258/1B & 258/1C, புதிய பட்டா எண் 2819, பட்டா எண் 2819-இன்படி, பட்டாப்படி புதிய சர்வே எண் 258/12 & 258/1B1B (30.07.2004 நாளிட்ட திட்ட அனுமதி எண் PP எண் 412, D.Dis. எண் 39842/2002/A3-இன்கீழும் 30.07.2004 நாளிட்ட PP எண் 412, D.Dis. எண் 39842/2002/A3/2002-இன்கீழும் 30.07.2004 நாளிட்ட PP எண் 416, D.Dis. எண் 3986/2002/A3/2002-இன்கீழும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது). அமைவிடம் - சிக்கராயபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: பிளாட் எண் 2 மற்றும் பொது வழி, தெற்கு: பிளாட் எண் 1 & 3, கிழக்கு: பிளாட் எண் 5 & 3 பாகம், மேற்கு: பிளாட் எண் 5-இன் எஞ்சிய பாகம். இத்துடன் மேற்படி மனையின் மீது கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் மரச்சாமான்கள், பொருத்தல்கள் மற்றும் அங்குள்ள துணைப்பகுதிகள் உட்பட.

| வ. எண் | கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர், கடன் ஒப்பந்த எண் | கோரிக்கை அறிவிப்பு நாள் / சுவாதீன நாள் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 2. | **கடன்தாரர்:** திரு. B. ஜெயக்குமார், த/பெ. மறைந்த பலராமன் **கூட்டுக் கடன்தாரர்(கள்):** திருமதி. உமா மகேஸ்வரி J, க/பெ. ஜெயக்குமார், **ஜாமீன்தாரர்:** திரு. துரைவேல், த/பெ. சுந்தரம் **கடன் ஒப்பந்த எண்: TCX05051M - 22.03.2021 நாளிட்டது** | 25.02.2025 / **சுவாதீன நாள்:** 16.09.2025 | 24.02.2025 நாள்படி ரூ.11,51,681.29/- (ரூபாய் பதினொரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்று எண்பத்தொன்று மற்றும் பைசா இருபத்தொன்பது மட்டும்) |

**சொத்து விவரம்:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். பிளாட் எண் B, கதவு எண் 11, பரப்பளவு 1269 சதுர அடி, 2534 சதுர அடியின் வடக்கில் அடங்கியது, கிராம நத்தம் சர்வே எண் 128/பாகம், TS தாக்கல் செய்யப்பட்ட பதிவின் சாராம்சம் விண்ணப்ப எண் 103/2018, வார்டு எண் C, பிளாக் எண் 4, TS எண் 106/2. அமைவிடம் - அம்பேத்கர் தெரு, ரத்தினபுரம், நங்கநல்லூர், சென்னை-600 114, தலக்கனஞ்சேரி கிராமம், ஆலந்தூர் தாலுகா, சென்னை மாவட்டம். இது பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகள், ஆலந்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: மேற்கு: திரு. கனகராஜ் அவர்களின் வீடு மற்றும் பிளாட், கிழக்கு: அம்பேத்கர் தெரு, தெற்கு: திரு. செந்தில்குமார் அவர்களுக்கு விடுவிக்கப்பட்ட சொத்து, வடக்கு: மகா ஃபிளாட்ஸ்.

| வ. எண் | கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர், கடன் ஒப்பந்த எண் | கோரிக்கை அறிவிப்பு நாள் / சுவாதீன நாள் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 3. | **கடன்தாரர்:** திரு. A. மனோஜ்குமார், த/பெ. திரு. ஆறுமுகம் **கூட்டுக் கடன்தாரர்(கள்):** Ms. பிரேமலதா, த/பெ. திரு. சொக்கலிங்கம் **கடன் ஒப்பந்த எண்: TVV05307M - 23.09.2019 நாளிட்டது** | 11.11.2024 / **சுவாதீன நாள்:** 18.09.2025 | 27.10.2024 நாள்படி ரூ.28,45,120.24/- (ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து நூற்று இருபது மற்றும் பைசா இருபத்து நான்கு மட்டும்) |

**சொத்து விவரம்:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். அமைவிடம் - காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் Iஆம் இணை சார்பதிவு மாவட்டம், நல்லூர் கிராமம், ராம் நகர். சர்வே எண் 28/1A, 1B, இதிலடங்கிய பிளாட் எண் 91. அளவு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் - 30 அடி, வடக்குத் தெற்காக இரண்டு பக்கமும் - 50 அடி, மொத்தம் 1500 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: பிளாட் எண் 90-க்குக் கிழக்கில், பிளாட் எண் 92-க்கு மேற்கில், 20 அடி அகலமுள்ள சாலைக்கு வடக்கில், பிளாட் எண் 104-க்குத் தெற்கில். இத்துடன் மேற்படி மனையின் மீது கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் மரச்சாமான்கள், பொருத்தல்கள் மற்றும் அங்குள்ள துணைப்பகுதிகள் உட்பட.

| வ. எண் | கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர், கடன் ஒப்பந்த எண் | கோரிக்கை அறிவிப்பு நாள் / சுவாதீன நாள் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 4. | **கடன்தாரர்:** திரு. முத்து P, த/பெ. பெருமாள், **கூட்டுக் கடன்தாரர்(கள்):** திருமதி. செல்வி M, க/பெ. முத்து திரு. முகேஷ் முத்து பெருமாள் **கடன் ஒப்பந்த எண்: TCT05101M - 29.09.2019 நாளிட்டது** | 19.02.2025 / **சுவாதீன நாள்:** 16.09.2025 | 12.02.2025 நாள்படி ரூ.14,64,839.09/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது மட்டும்) |

**சொத்து விவரம்:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். மனையின் சர்வே எண் 100/4, பட்டா எண் 7778-இன்படி, பட்டாப்படி சர்வே எண் 100/24, பிளாட் எண் 19, பரப்பளவு 590 சதுர அடி (தெற்கு கிழக்குப் பக்கம்) 1280 சதுர அடியில் அடங்கியது, லேஅவுட் ஒப்புதல் எண் P.P.D./L.O எண் 28/89-இன்கீழ் C.M.D.A. ஒப்புதல்பெற்றது, "அன்னை இந்திரா நகர் விரிவு VIII". அமைவிடம் - எண் 20, திருநின்றவூர் கிராமம். ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: 30 அடி அகலமுள்ள சாலை, மேற்கு: திருமதி M. மஞ்சு அவர்களின் சொத்து (பிளாட் எண் 19-இன் மேற்குப் பாகம்), வடக்கு: பிளாட் எண் 19-இன் எஞ்சிய பாகம் (திருமதி S. லலிதா மற்றும் திருமதி G. தீபா ஆகியோரின் சொத்து), தெற்கு: 30 அடி அகலமுள்ள சாலை.

**நாள்: 16.09.2025, 18.09.2025** — ஒம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
**இடம்: சென்னை** — இன்டஸ்இண்ட் வங்கி லிமிடெட் சார்பில்



## கனரா வங்கி

ಕೆನರಾ ಬ್ಯಾಂಕ್ **கனரா வங்கி**

**மண்டல அலுவலகம் சென்னை தாம்பரம்**
2-13, காமராஜர் தெரு, தாம்பரம் மேற்கு, சென்னை-600045 தொலைபேசி: 044- 2226 1462
மின்அஞ்சல்-recoveryrokpm@canarabank.com

### சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கானது) பிரிவு 13(4)

கீழே கையொப்பமிட்டுள்ள **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் **2002**ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் (Act 54 of 2002) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதி 3க்கு ஏற்பவும், **கனரா வங்கி, நங்கநல்லூர் ஆலந்தூர் கிளைகளில்** கணக்கு வைத்துள்ள கீழ்க்கண்ட கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கி தொகை மேலும் மேலதிக வட்டியுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி மேற்சொன்ன அறிவிப்புகள் கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திருப்பி செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

மேற்படி கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் பொதுவாக பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8 & 9க்கு இணங்கவும், **15.09.2025** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது என்னவென்றால், சுவாதீனம் எடுத்துக்கொண்ட கீழ்க்கண்ட சொத்துக்கள் **கனரா வங்கி, நங்கநல்லூர் ஆலந்தூர் கிளைக்கு** செலுத்த வேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள தொகை மேலும் மேலதிக வட்டி மற்றும் செலவுகள், கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் சொத்துக்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

**1. கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : 1. M/s. AJS இன்ஃப்ரா டெக் (கடன்தாரர்),** அலுவலக முகவரி: எண்.17, TNGO காலனி பிரதான சாலை, நங்கநல்லூர், சென்னை-600061. **பிரதிநிதியாக அதன் உரிமையாளர் 2. திருமதி ஜெயந்தி A (கடன்தாரர்),** க/பெ. ஆறுமுகசாமி S, எண்.3, காதர் கார்டன், பக்தவத்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை-600061 **3. திரு. ஆறுமுகசாமி S (ஜாமீன்தாரர்)** த/பெ. சுப்பிரமணியம் எண்.3, காதர் கார்டன், பக்தவத்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை-600061

**கோரிக்கை அறிவிப்பு தேதி : 08.05.2025**

**நிலுவைத் தொகை: 30-04-2025** தேதிப்படி **ரூ.5,55,28,701.27** (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து இருபத்தெட்டாயிரத்து எழுநூற்று ஒன்று இருபத்தேழு பைசா மட்டும்)

**சுவாதீன தேதி : 15.09.2025**

**தற்போதைய நிலுவைத் தொகை: ரூ. 31.08.2025** தேதிப்படி செலுத்த வேண்டிய தொகையான ரூ.**5,53,45,804.65** (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று நான்கு மற்றும் அறுபத்தைந்து பைசா மட்டும்) மேலதிக வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது.

**அசையா சொத்து விவரம்:** காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, தலக்கஞ்சேரி கிராமம், கிராம நத்தம் சர்வே எண் 40/4 (TS No.312/2, 169/3) கதவு எண். 3 காதர் தோட்டத்தில் உள்ள 4880 சதுர அடி கட்டிடம் மற்றும் நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும் **எல்லைகள்: வடக்கு: கன்டோன்மென்ட் சொத்து, தெற்கு:** காதர் தோட்டம் தெரு மற்றும் V. சண்முகம் சொத்து, **கிழக்கு:** காதர் தோட்டம் தெரு, **மேற்கு:** திரு. தாமஸ் பெயரில் உள்ள சொத்து. **அளவுகளில்** : கிழக்கு மேற்காக வடக்குப்புறம் : 60 அடி, கிழக்கு மேற்காக தெற்குப்புறம் : 60 அடி, வடக்கு தெற்காக கிழக்குப்புறம் : 50 அடி மற்றும் 55 அடி, வடக்கு தெற்காக மேற்குப்புறம் : 48 அடி. இச் சொத்து தென் சென்னை மாவட்டம், ஆலந்தூர் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது இச்சொத்து திரு. ஆறுமுகசாமி S. த/பெ. சுப்பிரமணியம் பெயரில் உள்ளது.

**2. கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : M/s. ஸ்ரீ சண்முகா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (கடன்தாரர்),** அலுவலக முகவரி: எண்.17, TNGO காலனி மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600061 **பிரதிநிதியாக அதன் உரிமையாளர் 1. திரு. ஆறுமுகசாமி S (கடன்தாரர்),** த/பெ. சுப்பிரமணியம் எண்.3, காதர் கார்டன், பக்தவத்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை-600061 **2. திருமதி ஜெயந்தி A.** (ஜாமீன்தாரர்) க/பெ. ஆறுமுகசாமி S எண்.3, காதர் கார்டன், பக்தவத்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை-600061.

**கோரிக்கை அறிவிப்பு தேதி : 08.05.2025**

**நிலுவைத் தொகை: 30-04-2025** தேதிப்படி **ரூ. 2,01,92,066.17** (ரூபாய் இரண்டு கோடி ஒரு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுபத்தாறு மற்றும் பதினேழு பைசா மட்டும்).

**சுவாதீன தேதி : 15.09.2025**

**தற்போதைய நிலுவைத் தொகை: 01.09.2025** தேதிப்படி செலுத்த வேண்டிய தொகையான ரூ.**2,02,50,765.46** ரூபாய் இரண்டு கோடியே இரண்டு லட்சம் ஐம்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தைந்து மற்றும் பைசா நாற்பத்தாறு மட்டும்) மேலதிக வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது.

**அசையா சொத்து விவரம்: அசையா** : காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, தலக்கஞ்சேரி கிராமம், கிராம நத்தம் சர்வே எண் 40/4 (TS No.312/2, 169/3) கதவு எண், 3 காதர் தோட்டத்தில் உள்ள 4880 சதுர அடி கட்டிடம் மற்றும் நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும் **எல்லைகள்: வடக்கு:** கன்டோன்மென்ட் சொத்து, **தெற்கு:** காதர் தோட்டம் தெரு மற்றும் V. சண்முகம் சொத்து, **கிழக்கு:** காதர் தோட்டம் தெரு, **மேற்கு:** திரு. தாமஸ் பெயரில் உள்ள சொத்து. **அளவுகளில்** : கிழக்கு மேற்காக வடக்குப்புறம் : 60 அடி, கிழக்கு மேற்காக தெற்குப்புறம் : 60 அடி, வடக்கு தெற்காக கிழக்குப்புறம் : 50 அடி மற்றும் 55 அடி, வடக்கு தெற்காக மேற்குப்புறம் : 48 அடி. இச் சொத்து தென் சென்னை மாவட்டம், ஆலந்தூர் சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது. **இச்சொத்து ஆறுமுகசாமி S. த/பெ. சுப்பிரமணியம்** பெயரில் உள்ளது.

இடம் : சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தேதி : 15.09.2025 — கனரா வங்கி

# இறுதிக்கு தகுதி பெறும் முனைப்பில் இந்தியா

## பாகிஸ்தானுடன் இன்று மோதல்



**துபை, செப். 20:** ஆசியக் கோப்பை டி20 கிரிக்கெட் போட்டி இறுதிக்கு ஆட்டத்துக்கு தகுதி பெறும் முனைப்பில் இந்திய-பாகிஸ்தான் அணிகள் துபை நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் மோதுகின்றன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆசியக் கோப்பை டி20 கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. குரூப் பிரிவு ஆட்டங்கள் முடிவுற்ற நிலையில் சூப்பர் 4 ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே குரூப் ஏ பிரிவு ஆட்டத்தில் பாகிஸ்தானை 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வென்றிருந்தது.

இந்நிலையில் ஆசியக் கோப்பை இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற இந்த ஆட்டத்தில் கட்டாயம் வென்றே ஆக வேண்டிய நிலையில் பாகிஸ்தான் உள்ளது. இந்திய அணி பலமான நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த ஆட்டத்தில் அனல் பறக்கும் எனக் கருதப்படுகிறது.

**சுழல் மீது இந்தியா நம்பிக்கை**

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சு எதிரணிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆட்டத்திலும் கேப்டன் சூரியகுமார் யாதவ் ஸ்பின்னர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பார்.

சுழற்பந்துவீச்சில் வருண் சக்கரவர்த்தி, குல்தீப் யாதவ், அக்ஸர் படேல் ஆகியோர் சிறப்பாக பங்களித்து வருகின்றனர். வேகப் பந்துவீச்சில் பும்ரா வழக்கமான ஃபார்முடன் வீசி வருகிறது பலம் தருகிறது.

அக்ஸர் படேல் காயமடைந்துள்ளது அணி நிர்வாகத்துக்கு கவலையை தந்தாலும், அந்த இடத்தில் வாஷிங்டன் சுந்தர் அல்லது ரியான் பராக் ஆகியோர் இடம்பெற்று ஆடலாம். பேட்டிங்கில் கேப்டன் சூரியகுமார், சஞ்சு சாம்ஸன், ஷுப்மன் கில், அபிஷேக் சர்மா, திலக் வர்மா, ஆல்ரவுண்டர் ஹார்திக் பாண்டியா, ஷிவம் துபே ஆகியோர் நம்பிக்கை தருகின்றனர்.

**இன்றைய ஆட்டம்**

சூப்பர் 4

இந்தியா–பாகிஸ்தான்

நேரம்: இரவு 8 மணி
நேரலை: சோனி ஸ்போர்ட்ஸ்

சூரியகுமார் ஓபனராகவும் களமிறங்கக் கூடும். பவர்பிளேயில் அபிஷேக் சர்மா அவுட்டானால், திலக் வர்மா 3-ஆவது நிலையில் இறங்கி ஆடுவார். ஷுப்மன் கில், ஹார்திக், ஷிவம் துபே ஆகியோர் தங்கள் பேட்டிங் திறனை முழுமையாக வெளிப்படுத்தவில்லை.

**கணிக்க முடியாத பாக். அணி:**

பாகிஸ்தான் அணி கணிக்க முடியாத வகையில் காணப்படுகிறது. ஜாவித் மியான்தத், இன்ஸமாம் உல்ஹக், சலீம் மாலீக், இஜாஸ் அகமது போன்ற சிறந்த வீரர்களை கொண்டிருந்த பாக். அணி தற்போது தடுமாற்றத்தில் உள்ளது. ஓபனர் சைம் அயுப் தொடர்ந்து இரண்டு ஆட்டங்களில் டக் அவுட்டானார். சாஹிப்ஸதா பர்ஹான், ஹாஸன் நவாஸ் ஆகியோர் தங்கள் அணியை காப்பாற்ற போராடி வருகின்றனர். ரன்களை சேர்ப்பதில் அவர்களே பலம் தருகின்றனர். ஃபாக்கர் ஸமானும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

பௌலிங்கில் ஷாஹின்ஷா அப்ரிடி, ஹாரிஸ் ரவூஃப், ஸ்பின்னர் சுஃபியான் முகீம் ஆகியோர் முழு திறமையையும் வெளிப்படுத்தி பந்துவீசினால் தான் தங்கள் அணிக்கு வெற்றியை தேடித் தர முடியும்.

**கை குலுக்குவார்களா?**

ஏற்கெனவே குரூப் பிரிவு ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியினருடன் இந்திய வீரர்கள் கை குலுக்க மறுத்து விட்டனர். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. பஹல்காம் தீவிரவாத சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாக். அணியுடன் கை குலுக்குவதை இந்திய அணியினர் தவிர்த்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஆட்டத்திலும் இரு அணியினரும் கை குலுக்க வாய்ப்பில்லை என கருதப்படுகிறது.



## இறுதிச் சுற்றில் சாத்விக்-சிராக்

**ஷென்ஸென், செப். 20:** சீனா மாஸ்டர்ஸ் சூப்பர் 750 பாட்மின்டன் போட்டி ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்துக்கு இந்தியாவின் சாத்விக்-சிராக் இணை தகுதி பெற்றுள்ளது.



சாத்விக்–சிராக்

சீனாவின் ஷென்ஸென் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் இந்தியாவின் சாத்விக் ரங்கிரெட்டி-சிராக் ஷெட்டி-மலேசியாவின் ஆரோன் சியா-சோய் வுய் இணை மோதினர். இதில் ஆசிய போட்டி சாம்பியன்களான சாத்விக்-சிராக் இணை 21-17, 21-14 என்ற கேம் கணக்கில் ஆரோன்-சோய் இணையை வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றது.

உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலம், ஹாங்காங் ஓபனில் ரன்னர் அப்பாக வந்த சாத்விக்-சிராக் தொடர்ச்சியாக இரண்டாவது இறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இந்திய-மலேசிய இணைகளின் ஆட்டம் 41 நிமிஷங்களே நீடித்தது. தொடக்க கேம் சற்று கடினமாக இருந்தது. எனினும் மலேசியாவின் ஆரோன் புரிந்த 3 தவறுகளை சாதகமாக்கி இந்திய இணை முதல் கேமை கைப்பற்றியது.

இரண்டாம் கேம் தொடங்கியவுடன் 5-2 என இந்திய இணை முன்னிலை பெற்றனர். மலேசிய இணை 9-11 என முன்னிலையை குறைத்தது. இதன்பின்னர் 16-12 என முன்னிலை பெற்ற சாத்விக்-சிராக் வெற்றிக் கோட்டை தாண்டினர்.

## சர்வதேச பிரிட்ஜ் சாம்பியன் போட்டி

**சென்னை, செப். 20:** சென்னையில் நடைபெற்ற ஈஏ-பிரிட்ஜ் சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டி சனிக்கிழமை நிறைவடைந்தது.



சாம்பியன் பட்டம் வென்றவர்கள்.

சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் நடைபெற்ற இப்போட்டியில் தங்கப் பிரிவில் போலந்து அணி சிறப்பாக ஆடி இந்திய அணியை வீழ்த்தி பட்டம் வென்றது. வெள்ளி பிரிவு இறுதிச் சுற்றில் கேகேகே பிரிட்ஜ் அணியினர் கோப்பை வென்றனர்.

பரிசளிப்பு விழாவில் இந்திய பிரிட்ஜ் கூட்டமைப்பு தலைவர் பிரசாத் கேனி, ஒருங்கிணைப்பாளர் தேபஷிஷ் ரே, துணைத் தலைவர் கிருபா மூர்த்தி பங்கேற்று பரிசளித்தனர்.

### சாம்பியன்...




மலேசியாவில் நடைபெற்ற யு 16 ஆசிய சிறுமியர் கூடைப்பந்து பி டிவிஷன் போட்டி இறுதி ஆட்டத்தில் ஈரானை 67–66 என்ற புள்ளிக் கணக்கில் த்ரில் வெற்றி பெற்ற இந்திய சிறுமியர். 8 ஆண்டுகள் கழித்து இந்திய அணி ஏ டிவிஷனுக்கு முன்னேறியுள்ளது. இந்த வெற்றிக்காக அணிக்கு ரூ.12 லட்சம் வெகுமதி வழங்கப்படும் என கூடைப்பந்து சம்மேளனத் தலைவர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

## லெஸ்ஸியை வீழ்த்தியது காக்லியரி (2–0)

**லெஸ்ஸி, செப். 20:** இத்தாலியின் சீரி ஏ கால்பந்து தொடரில் லெஸ்ஸி அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது காக்லியரி.



கோலடித்த மகிழ்ச்சியல் லிவர்பூல் அணியினர்.

ஐரோப்பியாவின் பல்வேறு நாடுகளில் கால்பந்து லீக் தொடர்கள் நடைபெறுகின்றன. லெஸ்ஸி நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் காக்லியரி-லெஸ்ஸி அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கியுடன் லெஸ்ஸி வீரர் ரிக்கார்டோ 5-ஆவது நிமிஷத்தில் கோலடித்து முன்னிலை பெற்றுத் தந்தார். இதையடுத்து சுதாரித்து ஆடிய காக்லியரி அணியில் நட்சத்திர வீரர் ஆன்ட்ரியா பெலோட்டி முதல் பாதி மற்றும் இரண்டாம் பாதிகளில் கோலடித்தார்.

இதன் மூலம் 2-1 என்ற கோல் கணக்கில் காக்லியரி வென்றது.

**லா லிகா:**
**ரியல் பெட்டிஸ் வெற்றி**

ஸ்பெயினின் லா லிகா கால்பந்து தொடரில் ரியல் சோடிடாட் அணியின் துரதிருஷ்டம் தொடர்கிறது. அந்த அணி செவிலே நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் பெட்டிஸ் அணியிடம் 3-1 என்ற கோல் கணக்கில் தோற்றது.



மகிழ்ச்சியில் ரியல் பெட்டிஸ் வீரர்கள்.

தொடர்ந்து 5 லீக் ஆட்டங்களில் சோசிடாட் தோற்றுவிட்டது. 7-ஆவது நிமிஷத்தில் ஹெர்னான்ஸ், 49-ஆவது நிமிஷத்தில் எஸ். அப்டே, 68-ஆவது நிமிஷத்தில் போர்னால்ஸ் ஆகியோர் பெட்டிஸ் தரப்பிலும், சோசிடாட் தரப்பில் 13-ஆவது நிமிஷத்தில் பிரையஸ் மெண்டஸும் கோலடித்தனர்.

**ப்ரீமியர் லீக்: லிவர்பூல் வெற்றி**

இங்கிலாந்தின் ப்ரீமியர் லீக் கால்பந்து தொடரில் லிவர்பூல் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் எவர்டன் அணியை 2–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது லிவர்பூல். லிவர்பூல் தரப்பில் ரியான்கிரெவன் பெர்ச் 10, ஹியுகோ 29 ஆவது நிமிஷங்களிலும், எவர்டன் தரப்பில் இட்ரிஸா 58-ஆவது நிமிஷத்திலும் கோலடித்தனர்.

## இலங்கையை வீழ்த்தியது வங்கதேசம்

**துபை, செப். 20:** இலங்கைக்கு எதிரான சூப்பர் 4 பிரிவு ஆட்டத்தில் சைஃப் ஹாஸன், தௌஹித் அபார ஆட்டத்தால் 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது வங்கதேசம்.



சைஃப் ஹாஸன்–லிட்டன் தாஸ்

துபை சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற வங்கதேசம் பௌலிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து இலங்கை தரப்பில் பதும் நிஸாங்கா, குஸால் மெண்டிஸ் தொடக்க பேட்டர்களாக களமிறங்கினர். நிஸாங்கா 1 சிக்ஸர், 3 பவுண்டரியுடன் 22 ரன்களுடனும், குஸால் மெண்டிஸ் 3 சிக்ஸர், 1 பவுண்டரியுடன் 34 ரன்களையும் விளாசி சிறந்த தொடக்கத்தை அளித்து வெளியேறினர்.

**தஸுன் ஷனகா அதிரடி 64:** மறுமுனையில் அதிரடியாக ஆடிய தஸுன் ஷனகா 6 சிக்ஸர், 3 பவுண்டரியுடன் 37 பந்துகளில் 64 ரன்களை விளாசி இறுதிவரை அவுட்டாகாமல் இருந்தார்.

**இலங்கை 168/7:** கேப்டன் சரித் அஸலங்கா 21 ரன்களுக்கு அவுட்டாக, கமிண்டு மெண்டிஸ் 1, வனிண்டு ஹஸரங்கா 2 ரன்களுடன் பெவிலியன் திரும்பினர். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இலங்கை அணி 168/7 ரன்களைக் குவித்தது.

**முஸ்தபிஸுர் ரஹ்மான் 3 விக்கெட்:** பௌலிங்கில் வங்கதேச தரப்பில் சிறப்பாக பந்துவீசிய முஸ்தபிஸுர் ரஹ்மான் 3-20 விக்கெட்டுகளையும் மெஹிதி ஹாஸன் 2-25 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

**வங்கதேசம் வெற்றி 169/6:** பின்னர் ஆடிய வங்கதேச அணி 19.5 ஓவர்களில் 169/6 ரன்களைச் சேர்த்து வெற்றி இலக்கை எட்டியது. ஓபனர் சைஃப் ஹாஸன் 61, தௌஹித் 58 ரன்களை விளாசி தங்கள் அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களுடன் நடையைக் கட்டினர். இலங்கை தரப்பில்பௌலிங்கில் ஷனகா, ஹஸரங்கா தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர்.

இலங்கையை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய வங்கதேசம், குரூப்பிரிவு ஆட்டத்தில் தோற்றதற்கு பதிலடி அளித்தது.

## இறுதிச் சுற்றில் ஸ்வியாடெக்–அலெக்சாண்ட்ரோவா




**சியோல், செப். 20:** கொரிய ஓபன் டென்னிஸ் போட்டி இறுதி ஆட்டத்துக்கு போலந்தின் இகா ஸ்வியாடெக் முன்னேறினார்.

தென்கொரிய தலைநகர் சியோலில் கொரிய ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

காலிறுதியில் செக். குடியரசின் பார்பரா கிரெஜ்சிகோவாவை 6-0, 6-3 என நேர் செட்களில் வீழ்த்தினார் ஸ்வியாடெக். பலத்த மழை காரணமாக இரண்டு மணிநேரம் கழித்து மீண்டும் களத்துக்கு திரும்பிய அவர் ஆஸி. வீராங்கனை மாய ஜாயின்டை அரையிறுதியில் எதிர்கொண்டார்.

உலகின் நம்பர் 2 வீராங்கனையான ஸ்வியாடெக் 6-0, 6-2 என மாயா ஜாயின்டை வீழ்த்தி நிகழாண்டின் 5-ஆவது இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

மற்றொரு அரையிறுதியில் ரஷியாவின் அலெக்சான்ட்ரோவா 6-4, 6-2 என செக். குடியரசின் கத்ரீனா சினியகோவாவை வீழ்த்தினார்.

ஞாயிற்றுக்கிழமை இறுதி ஆட்டத்தில் ரஷியாவின் ஏகடெரினா அலெக்சாண்ட்ரோவாவை எதிர்கொள்கிறார்.

## தொடரைக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா

**புது தில்லி, செப். 20:** இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 43 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது ஆஸ்திரேலியா.




வெற்றி மகிழ்ச்சியில் ஆஸி. அணியினர்.

இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்கள் ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும், இரண்டாம் ஆட்டத்தில் இந்தியாவும் வென்றிருந்தன.

இந்நிலையில் மூன்றாவது ஆட்டம் புது தில்லியில் சனிக்கிழமை நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸி. அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

**ஆஸி. பிரம்மாண்ட ஸ்கோர் 412/10:** ஆஸ்திரேலிய அணி 47.5 ஓவர்களில் 412 ரன்களைக் குவித்து ஆல் அவுட்டானது. தொடக்க பேட்டர் அலிஸா ஹீலி 30 ரன்களுடன் வெளியேறினார். ஜார்ஜியா வால் 81, எலிஸ் பெர்ரி 68 ரன்களை குவித்து வலுவான தொடக்கத்தை அளித்தனர்.

பெத் மூனி 138: மூன்றாவது டௌன் வீராங்கனை பெத் மூனி அற்புதமாக ஆடி 1 சிக்ஸர், 23 பவுண்டரியுடன் 75 பந்துகளில் 138 ரன்களை விளாசினார். பௌலிங்கில் இந்திய தரப்பில் அருந்ததி 3, ரேணுகா, தீப்தி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

**இந்தியா தோல்வி 369/10:** 413 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியில் ஓபனர் பிரதிகா ரவால் 10 ரன்களுடன் அவுட்டானார்.

துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா 5 சிக்ஸர், 17 பவுண்டரியுடன் 63 பந்துகளில் 125 ரன்களை விளாசினார். கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌர் 52 ரன்களையும், தீப்தி சர்மா 72 ரன்களையும் விளாசினர். மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்களுடன் அவுட்டாகி திரும்பினர்.

47 ஓவர்களில் இந்திய அணி 369/10 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஆஸி. தரப்பில் பௌலிங்கில் கிம் கார்த் 3, மேகன் ஷுட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடரை கைப்பற்றியது: இந்த வெற்றி மூலம் ஒருநாள் தொடரையும் 2-1 என கைப்பற்றியது ஆஸி. அணி.

ஸ்மிருதி துரித சதம்: ஸ்மிருதி மந்தனா 50 பந்துகளில் 101 ரன்களை விளாசி ஒருநாள் ஆட்டத்தில் துரித சதம் அடித்த இந்தியர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

# நடிகர் மோகன்லாலுக்கு தாதா சாகேப் பால்கே விருது

**புது தில்லி, செப். 20:** இந்திய திரைத்துறையின் மிக உயரிய அங்கீகாரமாக கருதப்படும் தாதா சாகேப் பால்கே விருது, மலையாளத் திரையுலக முன்னணி நடிகர் மோகன்லாலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்திய திரைத்துறைக்கு ஆற்றிய தனிச்சிறப்பான பங்களிப்புக்காக 2023-ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது தேர்வுக் குழுவின் பரிந்துரைப்படி, நடிகர்-இயக்குநர்-தயாரிப்பாளர் மோகன்லாலுக்கு வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

தில்லியில் வரும் 23-ஆம் தேதி நடைபெறும் 71-ஆவது தேசிய திரைப்பட விருது விழாவில் இவ்விருது வழங்கப்படும். மோகன்லாலின் குறிப்பிடத்தக்க திரைத்துறை பயணம், இளம் தலைமுறையினருக்கு உத்வேகமளிப்பதாக விளங்குகிறது.

அவரது ஒப்பற்ற திறமை, பன்முக நடிப்பாற்றல், அயராத கடின உழைப்பு ஆகியவை இந்திய திரைத்துறை வரலாற்றில் உயர்ந்த தரநிலையை நிர்ணயித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையாள திரையுலகில் உச்ச நட்சத்திரமாக வலம்வரும் மோகன்லால் (65), தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் என 350-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். இயக்குநர் பாசில் இயக்கி 1980-இல் வெளிவந்த மஞ்ஞில் விரிஞ்ஞ பூக்கள் திரைப்படத்தில் வில்லனாக அறிமுகமானார் மோகன்லால். பரதம், கிரீடம், மிதுனம், தன்மாத்ரா, இருவர், த்ருஷ்யம், வானபிரஸ்தம், மணிச்சித்ரத்தாழ், புலிமுருகன் உள்ளிட்ட திரைப்படங்கள், அவரது நடிப்பில் வெளிவந்த பிரபலமான மற்றும் விமர்சன ரீதியில் பெரும் பாராட்டைப் பெற்றவையாகும்.

**மத்திய அரசு அறிவிப்பு**




இரண்டு தேசிய விருதுகள், 9 கேரள மாநில அரசு விருதுகள் மற்றும் பல்வேறு சர்வதேச கௌரவங்களையும் பெற்றுள்ள மோகன்லாலுக்கு கடந்த 2001-இல் பத்மஸ்ரீ, 2019-இல் பத்ம பூஷண் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்திய திரைத் துறையின் தந்தை என போற்றப்படுபவர் தாதா சாகேப் பால்கே. இவரது இயக்கத்தில் கடந்த 1913-இல் வெளியான ராஜா ஹரிச்சந்திரா திரைப்படமே, இந்தியாவின் முதல் திரைப்படமாகும். இந்திய திரைத் துறையில் சிறப்பான பங்களிப்பை நல்குபவர்களுக்கு இவரது பெயரில் கடந்த 1969-ஆம் ஆண்டில் இருந்து விருது வழங்கப்பட்டு வருகிறது.

கே.பாலசந்தர் (2010), ரஜினிகாந்த் (2019), அமிதாப் பச்சன் (2018) ஆகியோரும் இக்கௌரவத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடி வாழ்த்து



மோகன்லாலுக்கு வாழ்த்து தெரிவித்து, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தனது துறையில் பல்லாண்டுகளாக மிகச் சிறப்பாக பணியாற்றிவரும் மோகன்லால், மலையாள திரையுலகில் முன்னணி நட்சத்திரமாக விளங்குகிறார். கேரளத்தின் கலாசாரம் மீது ஆழமான ஈடுபாடு கொண்டவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி திரைப் படங்களிலும் சிறப்பான நடிப்பை வழங்கியுள்ளார். திரைப்படம், நாடகம் என பன்முக தளங்களில் அவரது நடிப்பாற்றல், உண்மையிலேயே ஈர்ப்புக்குரியது. அவரது சாதனைகள் வருங்கால சந்ததியினருக்கு ஊக்கமளிக்கட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்திய திரையுலகை புதிய உச்சத்துக்கு இட்டுச் செல்ல மோகன்லால் ஆற்றிய மதிப்புமிக்க பங்களிப்புகளுக்குப் பொருத்தமான கௌரவம் இது. கேரள திரைத்துறையினர் மேலும் புத்தாக்கம் படைப்பதை ஊக்குவிப்பதாக இக்கௌரவம் அமையும்' என்றார்.

'நடிகர் மோகன்லாலின் பணிகள், பாரதத்தின் படைப்புணர்வுக்குத் தொடர்ந்து உத்வேகமளிக்கும்' என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

'கேரளத்தின் பெருமை மோகன்லால்' என்று காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் மோடியின் பதிவுக்கு பதிலளித்து மோகன்லால் வெளியிட்ட பதிவில், 'மதிப்புமிக்க இவ்விருதை பெறுவதில் பெருமை கொள்கிறேன். பிரதமர் மோடியின் அன்பான வார்த்தைகள் மற்றும் ஆசிக்கு நன்றி. இது, என்னுள் ஊக்கத்தையும் மகிழ்வையும் நிறையச் செய்துள்ளது. எனக்கு உத்வேகமளித்த, எனது பயணத்தை ஒளிரச் செய்த அனைவருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்' என்று தெரிவித்துள்ளார்.

## யேமன்

# 31 செய்தியாளர்கள் உயிரிழப்பு

**சனா, செப். 20:** யேமனில் இஸ்ரேல் ராணுவம் அண்மையில் நடத்திய தாக்குதலில் 31 செய்தியாளர்கள் உயிரிழந்ததாக 'செய்தியாளர்கள் பாதுகாப்புக் குழு' (சிபிஜே) என்ற சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'யேமன் தலைநகர் சனாவில் நாளிதழ் அலுவலகக் கட்டடத்தைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் அந்த நாளிதழின் தலைமை ஆசிரியர், 30 செய்தியாளர்கள் உள்பட 35 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 2009-ஆம் ஆண்டு பிலிப்பின்ஸில் நடைபெற்ற செய்தியாளர்கள் படுகொலைக்குப் பிறகு செய்தியாளர்களுக்கு எதிராக நடைபெற்றுள்ள மிகக் கொடூரமான தாக்குதல் இது' என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# மேலும் ஒரு நேட்டோ நாட்டுக்குள் ரஷியா அத்துமீறல்

**தாலின், செப். 20:** உக்ரைனுடனான போரின் ஒரு பகுதியாக, மேலும் ஒரு நேட்டோ உறுப்பு நாடான எஸ்டோனியாவுக்குள் ரஷிய போர் விமானங்கள் அத்துமீறி ஊடுருவியுள்ளன.

இதன் விளைவாக, ஏற்கெனவே நேட்டோ நாடுகளான போலந்து, ருமேனியாவின் வான் எல்லைகளுக்குள் ரஷிய ட்ரோன்கள் அத்துமீறி நுழைந்ததால் ஏற்பட்டுள்ள பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இது குறித்து எஸ்டோனியா வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கஸ் சாக்னா கூறியதாவது:

எஸ்டோனிய வான் எல்லைக்குள் மூன்று ரஷிய போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. இந்த ஊடுருவல் 12 நிமிஷங்களுக்கு நீடித்தது.

இந்த ஆண்டில் மட்டும் எஸ்டோனிய வான் எல்லையை ரஷியா 4 முறை மீறியுள்ளது. ஆனால் தற்போது நடந்துள்ள அத்துமீறல் இதுவரை இல்லாத அதிக துணிச்சலுடன் நடத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்தச் சம்பவம் குறித்து விவாதிப்பதற்காக நேட்டோ அமைப்பின் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று எஸ்டோனிய அரசு அழைப்பு விடுத்துள்ளது. மேலும், இது தொடர்பாக தங்கள் நாட்டுக்கான ரஷிய தூதரை நேரில் அழைத்து எஸ்டோனிய வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்தது.





எஸ்டோனிய வான் எல்லைக்குள் அத்துமீறிய ரஷிய போர் விமானங்கள் (ஸ்வீடன் விமானப் படை வெளியிட்ட படங்கள்).



மார்கஸ்

எனினும், இது தொடர்பாக ரஷியா இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ஏற்கெனவே, தங்கள் வான் எல்லைக்குள் ஊடுருவிய ரஷிய ட்ரோன்களை சுட்டுவீழ்த்தியதாக போலந்து கடந்த வாரம் அறிவித்தது. இந்தச் சம்பவம், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முதல்முறையாக தங்களை போரை நோக்கி மிக நெருக்கத்தில் இட்டுச் சென்றதாக அந்த நாட்டு பிரதமர் டொனால்ட் டஸ்க் கூறினார்.

அதன் தொடர்ச்சியாக, தங்கள் நாட்டு வான் எல்லைக்குள் ரஷிய ட்ரோன் ஒன்று அத்துமீறி நுழைந்ததாகவும், உக்ரைனுடனான எல்லைப் பகுதியை வானில் இருந்தபடி கண்காணித்துக் கொண்டிருந்த இரு எஃப்-16 போர் விமானங்கள் அந்த ட்ரோனைக் கண்டறிந்ததாகவும் மற்றொரு நேட்டோ உறுப்பு நாடான ருமேனியாவும் கூறியது.

இந்தச் சூழலில், ரஷிய போர் விமானங்களே தங்கள் நாட்டு எல்லைக்குள் அத்துமீறியதாக எஸ்டோனியா தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது.

2022-இல் உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பை நிகழ்த்தியதில் இருந்து நேட்டோ உறுப்பு நாடுகளின் எல்லைகளை ரஷியா இதுவரை மீறாமல் இருந்துவந்தது. ஆனால் தற்போது அத்தகைய அத்துமீறல்கள் அடிக்கடி நடைபெறுவது தற்செயலானது இல்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட 32 உறுப்பு நாடுகளைக் கொண்ட நேட்டோ கூட்டமைப்பின் 5-ஆவது விதிப்படி, அதன் ஏதாவது ஓர் உறுப்பு நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலும், அதை தங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலாக அனைத்து உறுப்பு நாடுகளும் கருதி பதிலடி கொடுக்க வேண்டும்.

எனவே, இந்த மூன்று நாடுகளின் எல்லைகளுக்குள்ளும் ரஷிய விமானங்கள், ட்ரோன்கள் அத்துமீறி நுழைந்த விவகாரம் பெரிதானால், உலகின் சக்திவாய்ந்த ராணுவக் கூட்டமைப்பான நேட்டோவுக்கும் ரஷியாவுக்கும் இடையிலான நேரடி போருக்கு அது வித்திடலாம் என்று அஞ்சப்படுகிறது.

# நிவாரண மையங்களுக்கும் பாதுகாப்பு கிடையாது

## இஸ்ரேல் ராணுவம் எச்சரிக்கை

**ஜெருசலேம், செப். 20:** காஸாவின் மிகப் பெரிய நகரான காஸா சிட்டியில் நிவாரணக் கட்டமைப்புகளுக்கும் தங்கள் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு கிடையாது என்று இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது.

இது குறித்து நிவாரண அமைப்புகளிடம் ராணுவம் கூறியுள்ளதாவது:

காஸா சிட்டியில் மருத்துவமனைகள் மட்டுமே பாதுகாக்கப்பட்ட இடங்களாகக் கருதப்படும்.

எனவே, மற்ற அனைத்து நிவாரண உள்கட்டமைப்புகளும் தாக்குதலுக்கு உள்ளாகலாம். எனவே, அங்கிருந்து அனைவரும் உடனடியாக வெளியேறவேண்டும் என்று இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது.

ஏற்கெனவே, பொதுமக்கள் அனைவரும் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டும் என்று எச்சரித்துள்ள இஸ்ரேல் ராணுவம், தற்போது நிவாரண கட்டமைப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளது.

இதற்கிடையே, காஸா சிட்டியில் தங்கள் நடவடிக்கைகளை விரிவாக்கி, ஹமாஸ் அமைப்பின் உள்கட்டமைப்புகளைத் தகர்த்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அந்த நகரில் வசித்துவந்த சுமார் பத்து லட்சம் பேரில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.



இஸ்ரேல் தாக்குலுக்கு அஞ்சி காஸா சிட்டியில் இருந்து வெளியேறும் பாலஸ்தீனர்கள்.

ஆனால், உடல் மற்றும் பொருளாதார பிரச்னை காரணமாக அங்கிருந்து வெளியேற முடியாதவர்களுக்கு இஸ்ரேல் ராணுவத்தின் முன்னேற்றம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### 65,208-ஆக அதிகரித்த உயிரிழப்பு

**டேயர் அல்-பாலா, செப். 20:** காஸாவில் இஸ்ரேல் ராணுவம் ராணுவம் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65,208-ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து காஸா சுகாதாரத் துறை அமைச்சம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'காஸா முழுவதும் இஸ்ரேல் ராணுவம் புதிதாக நடத்திய தாக்குதல்களில் 51 பேர் உயிரிழந்தனர். அவர்களில் காஸா சிட்டியில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த 43 பேரும் அடங்குவர்.

இத்துடன் காஸாவில் இஸ்ரேல் ராணுவம் 2023 அக்டோபர் முதல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65,208-ஆகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,66,271-ஆகவும் அதிகரித்துள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய விமான நிலையங்களில் இணையவழித் தாக்குதல்

**பிரஸ்ஸெல்ஸ், செப். 20:** ஐரோப்பாவின் முக்கிய விமான நிலையங்களில் பயணிகள் உள்நுழைவு அமைப்புகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதல் காரணமாக விமானப் போக்குவரத்து தாமதமடைந்து பயணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளிக்கிழமை இரவு இணையவழி ஊடுருவல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மின்னணு முறையிலான பயணிகள் விமான நுழைவு (செக்-இன் மற்றும் போர்டிங்) நடைமுறைகள் பாதிக்கப்பட்டன. இதனால் பயணிகளை சரிபார்த்து விமானத்தில் அமர்த்துவதற்கு மிகவும் தாமதமானது என்று அந்த விமான நிலையம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இணையவழித் தாக்குதல் காரணமாக விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பெல்ஜியத்தின் பிரஸ்ஸெல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் சனிக்கிழமை தவித்த பயணிகள்.

ஜெர்மனி தலைநகர் பெர்லினின் பிராண்டன்பர்க் விமான நிலையத்தில், பயணிகளின் உள்நுழைவு விவரங்களைக் கையாண்டுவரும் நிறுவனத்தின் மீது வெள்ளிக்கிழமை மாலை இணையவழித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதனால் அந்த நிறுவனத்துடனான மின்னணுத் தொடர்புகளை விமான நிலைய நிர்வாகம் துண்டிக்க வேண்டியிருந்ததாகவும் நிலைய அதிகாரிகள் கூறினர்.

பிரிட்டன் தலைநகர் லண்டனிலுள்ள, ஐரோப்பாவின் மிகவும் பரபரப்பான ஹீத்ரோ விமான நிலையம், 'தொழில்நுட்ப பிரச்னை' காரணமாக பயணிகள் உள்நுழைவுக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தது. அந்த சேவைகளை வழங்கிவரும் காலின்ஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனம் இணையவழித் தாக்குதலை எதிர்கொண்டதால் பயணிகளின் புறப்பாட்டில் தாமதம் ஏற்பட்டது என்று அந்த விமான நிலையம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையவழித் தாக்குதல் எங்கிருந்து நடத்தப்பட்டது, இதற்கு காரணமானவர்கள் யார் என்பது குறித்த விவரங்களை அதிகாரிகள் இதுவரை வெளியிடவில்லை.

| கரன்சி நிலவரம் | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| (இந்திய ரூபாயில்) | டாலர் 88.08 | யூரோ 103.46 | பவுண்ட் 118.78 | ரிங்கிட் 20.94 | டாலர் 68.63 |

தங்கம் (24 கேரட்) 1 கிராம் ரூ.11,225
தங்கம் (22 கேரட்) 1 கிராம் ரூ. 10,290
வெள்ளி 1 கிலோ. ரூ.1,45,000
வெள்ளி 1 கிராம்..... ரூ.145.00

## நயாராவுடன் வர்த்தக உறவு: யூகோ வங்கிக்கு ஒப்புதல்

**புது தில்லி, செப். 20:** ஐரோப்பிய யூனியனால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட, தனியார் பெட்ரோலிய நிறுவனமான நயாராவுடன் வர்த்தக உறவைப் பேண பொதுத் துறையைச் சேர்ந்த யூகோ வங்கிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இது குறித்து வங்கி வட்டாரங்கள் கூறுகையில், நிதியமைச்சக உயரதிகாரிகளுடன் யூகோ வங்கி நிர்வாகிகள் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்தன.

ரஷிய எண்ணெய் நிறுவனமான ராஸ்னெஃப்ட் 49 சதவீதம் பங்கு முதலீடு செய்துள்ள நயாரா மீது ஐரோப்பிய யூனியன் கடந்த ஜூலை மாதம் பொருளாதாரத் தடைகளை விதித்தது. உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக இந்த தடையை ஐரோப்பிய யூனியன் விதித்தது.

அதையடுத்து, நயாராவுடனான வர்த்தக உறவுகளை பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட வங்கிகள் நிறுத்திவைத்தது நினைவுகூரத்தக்கது.

# அந்நியச் செலாவணி கையிருப்பு 70,297 கோடி டாலராக உயர்வு

**மும்பை, செப். 20:** இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு செப்டம்பர் 12-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 70,296.6 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிப்பதாவது:

கடந்த 12-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 469.8 கோடி டாலர் உயர்ந்து 70,296.6 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை தெரிவித்தது.



செப்டம்பர் 5-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 403.8 கோடி டாலர் உயர்ந்து 69,827 கோடி டாலராக இருந்தது.

2024 செப்டம்பர் இறுதியில் அந்நியச் செலாவணி கையிருப்பு 70,488.5 கோடி டாலர் என்ற உச்சத்தை எட்டியிருந்தது. உலகளாவிய பொருளாதார சூழல்களால் ஏற்படும் அழுத்தங்களுக்கு இடையே ரூபாய் மதிப்பைப் பாதுகாப்பதற்காக ரிசர்வ் வங்கி அந்நியச்செலாவணியைப் பயன்படுத்துவதால், அதன் கையிருப்பு அவ்வப்போது குறைந்து வந்தது.

செப்டம்பர் 12-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான வெளிநாட்டு நாணய சொத்துகள் 253.7 கோடி டாலர் உயர்ந்து 58,701.4 கோடி டாலராக உள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும்.

மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 212 கோடி டாலர் உயர்ந்து 9,241.9 கோடி டாலராக உள்ளது. சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 3.2 கோடி டாலர் உயர்ந்து 1,877.3 கோடி டாலராக உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியாவின் கையிருப்பு மதிப்பீட்டு வாரத்தில் 0.9 கோடி டாலர் உயர்ந்து 476 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

# ஆகஸ்டில் அதிகரித்த விவசாயிகளுக்கான பணவீக்கம்

**புது தில்லி, செப். 20:** விவசாயிகள் மற்றும் ஊரகத் தொழிலாளர்களுக்கான சில்லறை பணவீக்கம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் முறையே 1.07 சதவீதமாகவும், 1.26 சதவீதமாகவும் உயர்ந்துள்ளன.

இது குறித்து மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜூலை மாதம் விவசாயிகளுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (சிபிஐ-ஏஎல்) அடிப்படையிலான பணவீக்கம் 0.77 சதவீதமாகவும், ஊரகத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (சிபிஐ-ஆர்எல்) அடிப்படையிலான பணவீக்கம் 1.01 சதவீதமாகவும் இருந்தன. அவை ஆகஸ்ட் மாதத்தில் முறையே 1.07 சதவீதமாகவும், 1.26 சதவீதமாகவும் உயர்ந்துள்ளன.

மதிப்பீட்டு மாதத்தில் சிபிஐ-ஏஎல் குறியீடு 1.03 புள்ளிகள் உயர்ந்து 136.34-ஆகவும், சிபிஐ-ஆர்எல் குறியீடு 0.94 புள்ளிகள் உயர்ந்து 136.60-ஆகவும் உள்ளன. முந்தைய ஜூலையில் இவை முறையே 135.31 புள்ளிகளாகவும், 135.66 புள்ளிகளாகவும் இருந்தன.

மதிப்பீட்டு மாதத்தில் விவசாயிகளுக்கான உணவுப் பணவீக்கம் (–) 0.55 சதவீதமாகவும், ஊரகத் தொழிலாளர்களுக்கான உணவுப் பணவீக்கம் (–) 0.28 சதவீதமாகவும் உள்ளன. விவசாயிகளுக்கான உணவு குறியீடு 1.39 புள்ளிகள் உயர்ந்தது; ஊரகத் தொழிலாளர்களுக்கான உணவு குறியீடு 1.29 புள்ளிகள் உயர்ந்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் ஊரகத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தின் தொழிலாளர் அலுவலகம் வெளியிடுகிறது. இந்தக் குறியீடுகள் 34 மாநிலங்கள்/பிரதேசங்களில் 787 மாதிரி கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை.



# பஜாஜ் வாகன விற்பனை 5% உயர்வு

**புது தில்லி, செப். 20:** இந்தியாவின் முன்னணி வாகன நிறுவனங்களில் ஒன்றான பஜாஜ் ஆட்டோவின் மொத்த விற்பனை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5 சதவீதம் உயர்ந்துள்ளது.

இது குறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நிறுவனத்தின் மொத்த விற்பனை 4,17,616 ஆக உள்ளது. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே மாதத்தில் 3,97,804 வாகனங்கள் விற்பனையாகியிருந்தன. அதனுடன் ஒப்பிடுகையில் தற்போது விற்பனை 5 சதவீதம் அதிகரித்துள்ளது.

2024 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் அதே மாதத்தில் நிறுவனத்தின் உள்நாட்டு மொத்த விற்பனை 2,53,827-லிருந்து 8 சதவீதம் குறைந்து 2,32,398-ஆக உள்ளது. ஆனால், ஏற்றுமதி 1,43,977-லிருந்து 29 சதவீதம் உயர்ந்து 1,85,218-ஆக உள்ளது

மதிப்பீட்டு மாதத்தில் ஏற்றுமதி உள்ளிட்ட இரு சக்கர வாகனங்களின் ஒட்டுமொத்த விற்பனை 3,35,178-லிருந்து 2 சதவீதம் உயர்ந்து 3,41,887-ஆகவும், உள்நாட்டு இரு சக்கர வாகன விற்பனை 2,08,621-லிருந்து 12 சதவீதம் குறைந்து 1,84,109-ஆகவும் உள்ளன என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 92, No. 263
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.